
கல்கி
KALKI
17-8-1958
30 நயா பைசா
மணியம்

கல்கி

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18 இதழ் 3	தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா—*பாரதியார்*	விளம்பி௵ ஆவணி 1உ.

"ஹிந்து" பத்திரிகை

பலாத்காரத்தின் பயனாக ஹிந்து பத்திரிகை சில நாட்கள் வெளிவராமல் செய்யப்பட்டது.

தாற்காலிக நிறுத்தமாயினும் பாரதநாடு முழுவதும் வருந்தத்தக்க நிறுத்தம். எண்பது ஆண்டுகள் மிகக் கவுரவமாக நடத்தப்பட்ட ஒரு பெரிய பத்திரிகை, உலகம் முழுவதும் பரவிய புகழுடன் நடத்தப்பட்ட பத்திரிகை பலாத்காரத்துக்கு இரையானதைக் கண்டோம்.

தொழிலாளர் ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அதன் நியாய அநியாயத்தை விசாரித்துத் தீர்ப்பு சொல்லுவதற்கு நீதிமன்றம் இருக்கிறது. அந்த மன்றத்தின் தீர்ப்பைப் பத்திரிகை அதிகாரிகளும் நீக்கப்பட்ட உத்தியோகஸ்தரும் ஒப்புக் கொள்ள வேண்டியது நீதி. இதற்கிடையில் தொழிலாளர்கள் கூட்டம் இந்த விவகாரத்தில் புகுந்து பலாத்காரம் நடத்தியது யாரும் கண்டிக்க வேண்டியதாகும்.

பத்திரிகையின் கவுரவமும் புகழும் முதல் போட்டு நடத்தும் சொந்தக்காரருக்கு மட்டும் சேர்ந்தது அல்ல, அந்தப் பத்திரிகையில் வேலைசெய்து வரும் ஒவ்வொருவருக்கும் அதில் பங்கு உண்டு. அந்த உரிமையை உணராமல் அனைவரும் வெறுக்கும் முறையில் பலாத்காரம் பிரயோகித்து, பத்திரிகைக்கு ஹானி உண்டாக்கி விட்டது அனைவருக்குமே நஷ்டம்.

வீட்டை இடிப்பதற்கு ஒருகணம்போதும், கட்டுவதற்கு மாதங்கள்போதா. நம்முடைய சகல கஷ்ட நஷ்டங்களுக்குக்காரணம் அறியாமை. இந்த அறியாமையை அகற்றி நல்வழி காட்ட வேண்டியவர்களே தவறான வழிக்குப் பாமரர்களை இழுத்துச் சென்றது பரிதாபம்.

ஹிந்து பத்திரிகாலய நிகழ்ச்சிகளைப் பற்றி ஆசிரியர் ஸ்ரீ கே. சீனிவாசன் அவர்களும் இன்னும் வேறு உத்தியோகஸ்தர்களும் விஷயங்களை வெகு விவரமாக எழுதிய அறிக்கைகள் தினசரிப் பத்திரிகைகளில் வெளியாயின. தெருவில் சென்ற அனைவரும் பார்த்த நிகழ்ச்சிகளை மறைத்து, பலாத்காரமே நடக்கவில்லை என்று தொழிலாளர் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கை வியப்பாக இருந்தது. நன்றாக நடைபெற்று வந்த பத்திரிகை மூடப்பட்டதே பத்திரிகாசிரியரின் பட்சத்துக்குச் சான்றாகும். இன்று பத்திரிகைக்கு இடையூறு ஏற்பட்டது. நாளை எல்லாமே, இத்தகைய நிகழ்ச்சிகளினால் சேதமும் நாசமும் அடையும். பலாத்காரத்தை நீக்கி, வேறு எது செய்தபோதிலும் நியாயம் வெற்றி பெற இடமிருக்கும். இதுவே காந்தி மறியல்களைப் பற்றி ஏற்படுத்திய விதி.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த நம்முடைய காங்கிரஸ் சர்க்காரை என்னவென்று சொல்லுவது! கேரளத்தில் நீதியில்லை என்கிறோம். "நீ குடியிருக்கும் வீடு கண்ணாடி வீடு. பிறர் வீட்டின்மேல் கல் எறியாதே" என்று ஒரு ஆங்கில மூதுரை உண்டு. காங்கிரஸ் சர்க்கார் கேரள சர்க்காரை எப்படிக் குற்றம் சொல்ல இயலும்? "மறியல்" என்பதற்கு காந்தியடிகள் எத்தனை வரம்புகள் அமைத்து உபதேசித்து வந்தார். அதுவெல்லாம் காற்றில் பறக்கடித்து விட்டு "மறியல்" "மறியல்" என்று காங்கிரஸ் பெயரிலேயே பலாத்காரத்தை உபயோகித்ததும் அதைக் காங்கிரஸ் சர்க்கார் பார்த்துக் கொண்டிருந்ததுமாக முடிந்தது பரிதாபம்.

சர்க்கார் தம் கடமையைச் செய்யாதபடியினால் பத்திராதிபர் பலாத்காரத்துக்குப் பணிந்தார்.

ஆந்திர சர்க்காரைப் பாராட்டுகிறோம்

ஆந்திர சர்க்கார், பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக மாணவர்களுக்கு இந்தி போதிக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில இவ்வாறு செய்வதற்கு திரு சுப்பிரமணியம் ஒப்புக் கொள்ள மாட்டார். ஏன் என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும்.

பள்ளிக்கூடத்தில் இந்தி புகுத்தத் தைரியமில்லாத போது, ஆட்சி மொழியாக இந்தியை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? மக்களுடைய அபிப்பிராயத்துக்கும் அரசியலார் கொள்கைக்கும் சம்பந்தமில்லாமலிருக்கிறது.

ஆட்சி மொழி ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தி வந்தால், ஹிந்திப் பிரதேசக்காரர்களுக்கு விசேஷச் சலுகையும், மற்றவர்களுக்கு மாற்றாந்தாய் மக்களின் நிலையாகவும்முடிந்து, சொல்லி முடியாத மனத்தாங்கல்களுக்கும் வேற்றுமைகளுக்கும் இடமுண்டாகும். அதனாலேயே இந்தி வேண்டாம் என்கிறோம்.

ஒரிஸ்ஸாவிலும் எதிரொலி!

ஒரிஸ்ஸா ராஜ்யத்திலிருந்து ஒரு நற்செய்தி வந்திருக்கிறது.

ஒரிஸ்ஸா ராஜ்யத்தின் முக்கிய நகரயான பெர்ஹாம்பூரிலிருந்துதான் அந்தச் செய்தி வந்திருக்கிறது.

பெர்ஹாம்பூரில் "பார்க் பொலிடிகல் பெஞ்சு" என்பதாக ஒரு சங்கம் இருக்கிறது. இச் சங்கத்தில் எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். எல்லாவித அபிப்பிராயங்கள் கொண்டவர்களும் இச் சங்கத்தின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டவர்கள் இதில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இவ்வளவு பேரும் சேர்ந்து ஒரு விஷயத்தில் ஒருமுகமாக அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள்!, ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற இயக்கத்துக்கு இந்தச் சங்கத்தினர் பேராதரவு அளித்திருக்கிறார்கள்.

"பாரத நாட்டு மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் இவ் வியக்கத்தில் ஈடுபட்டுத் தொண்டு செய்யும் எல்லாத் தலைவர்களின் பெயரும் வருங்காலச் சந்ததிகளின் உள்ளங்களில் என்றென்றும் பசுமையாக இருக்கும்" என்று அந்தச் சங்கத்தினர் வாழ்த்துகிறார்கள்.

இந்தி எதிர்ப்பு ஒரிஸ்ஸாவிலும் தலையெடுத்திருக்கிறது. விரைவில் அங்கு அந்த எதிர்ப்பு பலப்பட்டு நாட்டுக்கு மகத்தான நன்மை புரியும் என்று எண்ணுகிறோம்.

மீண்டும் ரயில் விபத்து!

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழிக்கு ஏற்ப, ஒரு தடவை விபத்து நடந்த இடத்திலேயே மீண்டும் விபத்து நடந்திருக்கிறது.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் எந்த இடத்தில் தூத்துக்குடி ரயில் கவிழ்ந்து 140 உயிர்களை பலி வாங்கியதோ, அதே இடத்தில் கூட்ஸ் வண்டி தடம் புரண்டு 27 வாகின்கள் கவிழ்ந்து பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தடவை உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்பது பெருத்த ஆறுதல் அளிக்கும் விஷயமாகும். அதற்கு நாம் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஆனாலும் 27 வாகின்கள் தடம் புரண்ட செய்தி சாதாரண விஷயம் அல்ல.


ஒரு முறை மிகப் பயங்கரமான விபத்து நடந்தது என்றால் அந்த இடம் மிக நன்றாகப் பழுது பார்க்கப் பட்டிருக்க வேண்டும். மீண்டும் அந்த இடத்திலேயே விபத்து நடக்கிறது என்றால் பழுது பார்க்கப் பட்டது சரியில்லை என்றுதான் பொருள். ஒன்றரை வருஷத்துக்குள் சீர்கேடடையும் வண்ணம் ஒரு பாலத்தை என்ஜினீர் இலாக்கா செப்பனிட வேண்டும் என்றால், அந்த இலாக்காவைப் பற்றி என்ன சொல்வது? ரயில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள சர்க்கார், இவ்விஷயத்தில் தீவிரமாகக் கவனம் செலுத்தி இலாகாவை சீர்படுத்த வேண்டும். இப்படியே அலட்சியமாக விட்டுக் கொண்டு போனால், யாருக்குமே ரயில் பிரயாணத்தில் நம்பிக்கை இருக்காது!


இளைய பாரதத்தினை வா! வா! வா!


நாம் சுதந்திரம் பெற்றுப் பதினொரு ஆண்டுகள் ஆகிவிட்டன

இந்தப் பதினொரு வருஷ சுதந்திர ஆட்சியை நினைத்துப் பார்த்தால் ஒருபுறம் மகிழ்ச்சியாக இருக்கிறது; மற்றொருபுறம் துயரமாகவும் இருக்கிறது.

தொழில் துறையில் பலபடியாக முன்னேறியிருக்கிறோம். நம் நாட்டிலேயே இன்று ரயில் பெட்டிகள் கட்டப்படுகின்றன; ரயில் இன்ஜின்கள்செய்யப்படுகின்றன. சைக்கிள்கள் செய்யப்படுகின்றன. கப்பல்கள் கட்டப்படுகின்றன. இவையெல்லாம் அடிமையுற்ற


ஐ.நா.சபையின் விஞ்ஞானக் குழு அணுகுண்டு சோதனைகளினால் பரவும் விஷத்தைப் பற்றிக் கடுமையாக எச்சரிக்கை செய்திருக்கிறது!


ஜனாதிபதி ஆட்சி
கேரளாவில் நிலவும் நிலைமையைப் பார்த்தால் ஜனாதிபதி ஆட்சி வந்து விடுமோ என்று தோன்றுகிறது.
கேரள சர்க்கார்
எதிர்க் கட்சிகள்



சென்னைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ராஜன்பாபு அவர்கள் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அவற்றுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற் போல் அமைந்தது சென்ற எட்டாம் தேதி வெள்ளிக்கிழமை கிண்டி காந்தி மண்டபத்தில் நடந்த விசேஷ பிரார்த்தனைக் கூட்டத்தில் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் கலந்து கொண்டது. ஆயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் கூட்டத்துக்கு வந்திருந்தனர். தலைவர் ராஜாஜி அவர்களும் அன்றையப் பிரார்த்தனையில் கலந்து கொண்டார். வேத பண்டிதர்கள் வேதம் ஓதினர். கீதை பாராயணம் நடந்தது. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் 'பஜகோவிந்தம்' பாடலைப் பாடினார். இசையரசு திரு எம். எம். தண்டபாணி தேசிகர் துதி கீதங்கள் பாடினார். கடைசியில் ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் ராமநாம பஜனை செய்ய, பிரார்த்தனை மண்டபத்தில் கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்களும் அவருடன் சேர்ந்து ராமநாமங்களைப் பாடியது மெய்சிலிர்க்க வைத்தது!

நாட்களில் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாத காரியங்களாக இருந்தன. இப்பொழுது காரியசாத்தியமாகி விளங்குவதைப் பார்க்கும்போது பெருமிதமும் பெரு மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன.

ஆனால் அடிமைப்பட்டிருந்த காலத்தில் மக்களிடையே உயர்ந்த லட்சியங்கள், தியாக உணர்ச்சி, சுயநலங்கருதாத உயர்ந்த பண்பு, தொண்டு வாழ்வு, தெய்வ பக்தி ஆகிய சிறந்த அம்சங்கள் இருந்தன. அவை எல்லாம் இப்பொழுது அரிதாகிவிட்டன. சுயநல உணர்ச்சி மேலோங்கி யிருக்கிறது. இதைப் பார்க்கும் போது ஆற்றாமை ஏற்படுகிறது. இதற்குத் தானா இவ்வளவு பாடுபட்டு இந்தச் சுதந்திரத்தைப் பெற்றோம் என்ற எண்ணம் உண்டாகிறது.

ஆனாலும் நம்பிக்கை அளிக்கும் அம்சம் இளைஞர் சமுதாயம். இளைஞர் சமுதாயம் முன்போலவே, உயர்ந்த லட்சிய நோக்கங்களும், பரந்த மனப்பான்மையும் கொண்டு துடிக்கிறது. இளைஞர் சமுதாயம் உயர்ந்த முறையில் வளர்க்கப்பட்டால் நாட்டுக்குப் பழுதில்லை என்ற நம்பிக்கை உண்டாகிறது!

இந்த வாரம் அட்டையில் நமது இளைஞர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப் பெருமையுடன் வெளியிட்டிருக்கிறோம். "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்!" என்று பாடிக் கொண்டு, சைக்கிளில் ஏறிச் சுதந்திர தினக் காட்சிகளைக் கண்டு மகிழும் இளம் பாரதத்தைச் சேர்ந்தவர்களை வாழ்த்துக் கூறி வரவேற்கிறோம்!

'பாரத நாட்டின் தனிப்பெரும் பண்பை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று இளைய பாரதத்தினர்களுக்கு இப்போதே சொல்லி வைக்கிறோம்.

இளைய பாரதத்தினரே வா! வா! வா!

வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி!

ராஜாஜியின் வியாசர் விருந்தையும், சக்கரவர்த்தித் திருமகனையும் வாசகர்களுக்கு அளிக்கும் பாக்கியம் நமக்குக் கிடைத்தது. அதை ஆயிரக்கணக்கான மக்கள் வாசித்து அனுபவித்தார்கள். "பாரதத்தையும், ராமாயணத்தையும் தந்த தாங்கள் பாகவதத்தையும் தாருங்கள்" என்று தமிழ் மக்கள் ராஜாஜியைத் திரும்பத் திரும்ப வேண்டினார்கள். தமிழ் மக்களின் சார்பில் நாமும் வேண்டிக் கொண்டோம்! பாகவதமெனும் மகா அரண்யத்தில் இப்போது புகுந்து வேலை செய்யத் தம்மால் இயலாது; அதற்கு வேண்டிய சக்தியில்லை என்று ராஜாஜி சொல்லி விட்டார். இருந்தாலும், அந்த வேலையில் இறங்குவதற்கு வேண்டிய அறிவும் ஆற்றலும் பெற்ற ஒரு அன்பரை நமக்கு உதவியிருக்கிறார். ராஜாஜியின் ஆசிக்குப் பாத்திரராகியுள்ள அவர் 'பௌராணிகன்' என்ற புனை பெயரில் தமிழ் மக்களின் நீண்ட நாளைய ஆசையை நிறைவேற்ற முன்வந்திருக்கிறார்.

பாகவதம் என்னும் "பக்தி வயல்" கல்கி செப்டம்பர் 7-ந் தேதி இதழில் கண்ணன் பிறந்த திருவிழாவின் போது ராஜாஜியின் முன்னுரையுடன் ஆரம்பமாகிறது.

திருந்த வேண்டும்

ராஜாஜி

படாடோப வாழ்க்கை வாழ நாம் பழகிக் கொண்டு விட்டோம். நம்முடைய உழைப்பினால் சுக வாழ்க்கை வாழ்வதற்கு வேண்டிய தகுதியைச் சம்பாதித்துக் கொள்ளாமல் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள ஆசைப்பட்டு அலைகிறோம். இதனால் பொதுவாகவே மக்களின் குணம் கெட்டு விட்டது. அஸ்தி ஜுரம் போல் மக்களின் மனப்பான்மை நோய்ப்பட்டுக் கிடக்கிறது. ஒருவரை யொருவர் ஏமாற்றி அவரவர் தனித்தனியே லாபம் அடைய அறம் வழுவின வழிகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கி விட்டோம். எல்லோரும் சேர்ந்து மேம்பாடு அடைய மார்க்கம் வகுக்காமல் ஒருவரையொருவர் சுரண்டி லாபமடையப் பார்க்கிறோம். இப்படிச் செய்தால் சமுதாயத்தின் செல்வ நிலை எப்படி உயரும்? ஒரு சிலர் பணக்காரர்களாக ஆகலாமே ஒழிய, மொத்தத்தில் செல்வம் உயராது.

குணம் கெட்டபின் எல்லாம் கெட்டுத்தான் போகும். எல்லா வகை மக்களும் முதலாளிகள், சில்லறை வியாபாரிகள், தொழில் செய்வோர் அனைவரும் காந்தியின் உபதேசத்தை மறந்து விட்டு, ஆன்ம நிலையில் முன்னாட்களை விடத் தாழ்ந்து போய், தேசம் நஷ்டமடைந்து வருகிறது.

தொன்றுதொட்டு நாம் வைத்துவந்த கடவுள் பக்தியும், அதனுடன் பிணைந்திருந்த சமய நெறியும் மறைந்து விட்டன. இதற்கு ஈடாக இன்றையக் கல்வி முறையில் ஒன்றுமில்லை.

சமய நம்பிக்கைகளை 'மூட' நம்பிக்கையென்று தள்ளி விட்டோம். தற்காலத்துக் கல்வி முறையில் நாம் அடையும் அறிவெல்லாம் தனி மனிதனின் சுய நலத்தைப் பெருக்குவதற்கு உதவும் மூடச் செருக்கேயாகும்.

பரஸ்பர அன்பும், ஒருவருக்கொருவர் உதவுதலும் மறைந்து போய் எங்குமே சிறுமை குணமும் மோசமும் பரவியிருக்கின்றன. உழைப்பதையே ஒரு கொடுமையெனக் கருதி, சோம்பலைச் சுகமென எண்ணுகிறோம்.

சுதந்திர ஜனநாயகமோ மக்கள் மனத்தில் அடக்கத்தையும் பொறுப்பு உணர்ச்சியையும் வளர்ப்பதற்கு மாறாக, செல்வாக்குப் பெற்ற வகுப்பினர் பிறரைக் கொடுமைப் படுத்துவதில் போதை அடைந்து பதவி வகித்து வருகிறார்கள். ஏழை அப்பாவி ஜனங்களை எலக்ஷன் காலத்தில் லஞ்ச வலையில் இழுத்து ஏமாற்றுகிறார்கள். அனைவருக்கும் தெரிந்த அக்கிரமங்கள் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்படாமல் மூடி வைக்கப்பட்டிருக்கின்றன. நேர்மையில் மக்களுக்கு நம்பிக்கை போய்விட்டது.

''அன்னியச் செலாவணியில் துண்டு விழுந்தது'' என்று ஒரு திரை போட்டு இன்றையப் பொருளாதார நிலையில் உள்ள இடைஞ்சலை மறைக்கப் பார்க்கிறோம். இதுவெல்லாம் வேறொன்றுமில்லை. ஆலைத் தொழிலில் உற்பத்திச் செலவை விஷம்போல் ஏற்றி விட்டோம். தவிர நாம் செய்யும் பண்டங்களுக்கு நாம் பண்டங்கள் வாங்கும் பிற நாடுகளில் கிராக்கி கிடையாது. நமது பண்டங்களுக்குக் கிராக்கி யிருக்கும் நாடுகளில் நமக்கு என்ன வேண்டுமோ, அது கிடைக்காது. செலவு அதிகமாகி வருமானம் குறைந்தது என்பது முக்கியமான விஷயம். கடன் படுவதற்கும் வரம்பு உண்டு. பட்ட கடனை அரசியல் அடிமைத் தனையாக மாற்றிக் கொள்ள விரும்பினாலொழிய, அந்த வரம்புக்கு மேல் செல்லலாகாது.

சொந்தக்காரன், குத்தகைக்காரன், உழுது பாடுபடுவோன் இவர்களுக்குள் வேற்றுமை வளர்த்து, எலக்ஷன் ஒன்றையே மனத்தில் வைத்துக் கொண்டு புதுச் சட்டங்கள் செய்து நிலத்துக்கு இருந்த மதிப்பை அழித்து விட்டோம். விவசாயத்தில் மக்களுக்கு இருந்த ஆசையை அழித்து விட்டோம். பாரத ஜன சமூகத்துக்கு ஆதாரமாக இருந்தது விவசாயம். சர்க்கார் அச்சிட்டு வழங்கும் பணமெல்லாம் சர்க்கார் பாங்கிகளுக்குத் திரும்பி வருகிறது. வரிகளின் கொடுமை உச்சத்துக்கு ஏறிவிட்டது. விலைவாசிகளும் விஷம்போல் ஏறிவருகின்றன.

வியாபாரத்தில் மிச்சம் பிடித்து முதலீடு செய்து யோக்கியமாகத் தொழில் செய்யலாம் என்று எண்ணவே முடியாமல் ஒரு பீதி உண்டாகி விட்டது.

'நல்ல காலம் பிறக்கும்' என்று நம்பி இனியாவது அறவழியில் நடப்போமாக.


23
வாழ்த்துகிறார்
11 ஐ

அருள் வாக்கு

இந்தப் பொய்யான உடம்புக்கு மெய் என்று பெயர். பெயராவது மெய் என்று இருக்கட்டும் இந்த உடம்புக்கு. ஆனால் பெயரைக் கொண்டு இதை மெய் யென்று எண்ணி ஏமாந்துபோகக்கூடாது. இப்படித்தான் வைஷ்ணவ பக்தர்களும் சைவ பக்தர்களும் சொல்லுகிறார்கள்.

எதற்காக உலகம் பொய், உலகம் பொய் என்று சொல்ல வேண்டும். ஆண்டவன் ஒருத்தன்தான் மெய் என்று உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். கல்வியினால் அந்த மெய் யான பொருளை அறிந்து கொள்ள வேண்டும். அதற்காகவே இருப்பது கல்வி. கல்வியினால் நல்ல குணங்கள் ஏற்பட வேண்டும். கெட்ட குணங்கள் எத்தனைக்கு எத்தனை அதிகமாகின்றனவோ அத்தனைக்கு அத்தனை உண்மையான அறிவை விட்டு விலகி விலகி ஓட வேண்டியிருக்கிறது. கெட்ட குணங்கள் விலக விலகச் சத்தியமான ஆண்டவனை நெருங்கிப் போகிறோம். நல்ல குணங்கள் எல்லாம் உண்மையை அறிவதற்குச் சாதனம். படிப்பின் முதல் பயன் நல்ல குணம்: அதாவது விநயம்; முடிவு, உண்மையை அறிந்து கொள்ளுவது.

விநயம் என்றால் அடக்கம். அடக்கம் இல்லாத படிப்பு, படிப்பு ஆகாது. தன்னைத்தானே அடக்கிக் கொள்ளும் படியான நல்ல குணம் முதலில் வர வேண்டும். ஆனால் "இப்போது எந்த நாட்டில் அதிகம் பேர்கள் படித்திருக்கிறார்கள்? அந்த நாட்டு மக்களிடையே நல்ல குணங்கள் அதிகமாக இருக்கின்றனவா?" என்று கவனித்துப் பார்த்தால் படிப்பு இல்லாத இடங்களில், மலைச் சாதி மக்களிடையே, நாகரிகம் இல்லாத ஜனங்களிடையே கெட்ட குணங்கள் அதிகம் இருப்பதாகக் காணப்படவில்லை. அங்கே மாஜிஸ்திரேட், கோர்ட்டு, ஹைகோர்ட்டு முதலியவை இல்லை. நிறைய ஹைஸ்கூல், காலேஜ், யூனிவர்ஸிடி முதலியன எல்லாம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போகிற இடங்களில்தான் அதிகக் கோர்ட்டு வழக்குகள், கிரிமினல் குற்றங்கள், ஏமாற்று வித்தை, ஜேப்படித் திருட்டு முதலியவை அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. ஜனங்களிடத்தில் கெட்ட குணங்கள் அதிகமாகின்றன.

இது என்ன, வேடிக்கையாக இருக்கிறதல்லவா? படிப்பின் பிரயோசனம் நல்ல குணம், அடக்கம். ஆனால் இப்போது நாட்டில் முன்பைவிட நிறையப் படிப்பு இருக்கிறது. ஹைஸ்கூல்களில் இடம் இல்லாமல் 'ஷிப்டு' வைத்து மூன்று மணிக்கு ஒரு வகுப்பு நடத்துகிறார்கள். இவ்வளவு இருந்தும் படிப்பின் பிரயோசனமான விநயம் ஏற்படவில்லை. அதற்கு நேர் விரோதமான குணமல்லவா வளர்கிறது? படிக்கிற பையன்கள் இருக்கிற இடத்துக்குத்தான் போலீஸ், மிலிடரி எல்லாம் அடிக்கடி வரவேண்டியிருக்கின்றன.

அப்படியானால் இந்தப் படிப்பு வேண்டுமா? வேண்டாமா? பழைய காலத்துக் கல்வி வேறு, இந்தக் காலத்துக் கல்வி வேறு என்று சொல்லலாமா? அடக்கமில்லாத தன்மையை வளர்க்கும் கல்வி வேண்டாமே என்று சொல்லவும் தோன்றும்.

முன்காலத்தில் வேத சாஸ்திரம் படிப்பதற்குப் பாடசாலைகள் இல்லை. குருவினிடத்தில் சென்றுதான் கற்றுக் கொண்டார்கள். இப்போது வேதத்துக்கும் பாடசாலை வந்துவிட்டது. இந்தக் காலத்தில் இங்கிலீஷ் படிப்பு படிக்கிறவர்களிடத்தில்தான் அடக்கம் இல்லை, விநயம் இல்லை என்று சொல்லமுடியாது. வேத பாடசாலை என்றால் அங்கேயும் மணியகாரர், வாத்தியார் இருக்கிறார்கள். சில பையன்கள் மணியகாரர் கட்சி; சிலர் வாத்தியார் கட்சி. அங்கும் சண்டை. அடக்கம் சிஷ்யர்களிடம் குறைந்துதான் போய்விட்டது.

இப்போது எல்லாவற்றுக்கும் பள்ளிக்கூடம் என்று ஏற்பட்டுவிட்டது. பள்ளிக்கூடம் ஏற்பட்டாலும் 'படிக்கிற மாணவர்களுக்குச் சம்பளம் இல்லை; எந்த மாணவனிடமாவது அடக்கமின்மை, துர்க்குணம் இருந்தால் அவனை விலக்கிவிடலாம்' என்று இருக்கிறதா? அநேகமாக அதுவும் இல்லை.

முன்பு இருந்த கல்விதான் இப்போதும் இருக்கிறது. கல்வியில் மாறுதல் இல்லை. ஆனால் முறை மாறிவிட்டது. மருந்து ஒன்றாக இருக்கலாம். பத்தியம் மாறிவிட்டால் மருந்தே விஷமாகிவிடும் என்பது போல் இருப்பது இது. அதனால்தான் ஸ்வபாவ குணங்களுக்கு நேர் விபரீதமான குணங்களை உண்டாக்குகிறது. வித்தைக்குப் பதில் அவித்தை உண்டாகிறது.

ஸ்ரீ சங்கராச்சாரியார் ❖ காஞ்சி காமகோடி பீடம்

தமிழ்மொழி மசோதா நிறைவேறியது!

—கொழும்பு, ஆகஸ்ட், 8உ

இலங்கை அரசாங்கம் ராணுவம், கடற்படை, போலீஸ் படை ஆகியவற்றைப் பார்லிமெண்ட் சபையைச் சுற்றிலும் காவல் வைத்துக் கொண்டு 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று ஒரேயடியாகச் சாதிக்கும் பாணியில் யாரும் விரும்பாத தமிழ்மொழி உபயோக மசோதாவைத் தனது மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு நிறைவேற்றிக் கொண்டு விட்டது. மசோதாவை ஆதரித்துச் சர்க்கார் கட்சியைச் சேர்ந்த 48 அங்கத்தினர்கள் வோட்டுக் கொடுத்தார்கள். ஏழெட்டு சர்க்கார் கட்சி அங்கத்தினர்கள் கூட்டத்துக்கே வராமல் இருந்து விட்டனர். திரு பெலிகமனை என்ற ஒரு உதவி மந்திரி தமது தொகுதியிலுள்ள வாக்காளர்கள் சர்க்கார் கட்சிக் இவ்வ மசோதாவை எதிர்க்கும்படி உத்தரவிட்டிருப்பதாகச் சொல்லி எதிர்த்து வாக்களித்தார். உடனே அவரைச் சர்க்கார் கட்சியிலிருந்தும் உதவி மந்திரி பதவியிலிருந்தும் வெளியேற்றி விட்டார்கள்.

எதிர்க் கட்சி அங்கத்தினர்களில் நான்கு பேர்கள் மட்டுமே கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். அவர்களில் இருவரும், உதவி மந்திரி ஒருவருமாக மொத்தம் மூன்றுபேர்கள் மசோதாவை எதிர்த்து வோட்டுக் கொடுத்தார்கள். மற்றவர்கள் மசோதா விவாதிக்கப்படும் முறை ஜனநாயகத்துக்கு விரோதம் என்று சொல்லி விவாதத்தில் கலந்து கொள்ளாமல் வெளியேறி விட்டார்கள்.

எந்தத் தமிழ் மக்களுக்குச் சலுகைகள் வழங்குவதற்காக இந்த மசோதா கொண்டு வரப்படுவதாகக் கூறப்படுகிறதோ, அந்தச் சமூகத்தின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பாலோர் விட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதால் சபைக்கு வரவில்லை. ஆயினும் மசோதாவைத் தாங்கள் முற்றாக நிராகரிப்பதாக அவர்கள் ஒரு அறிக்கை விடுவித்துள்ளனர். காவலில் இல்லாத இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகளான திரு வி. சுந்தரலிங்கமும், திரு ஜி.ஜி. பொன்னம்பலமும் மசோதாவைத் தாங்கள் ஏற்பதற்கில்லை யென்றும், பெரும்பாலான தமிழ்ப் பிரதிநிதிகள் இல்லாமல் நடக்கும் விவாதத்தில் தாங்கள் கலந்து கொள்ளுவதற்கில்லை யென்றும் சொல்லி விட்டு வெளியேறி விட்டார்கள். எனவே, பார்லிமெண்ட் சபை நிறைவேற்றியுள்ள தமிழ் மசோவைத் தமிழ்ப் பிரதிநிதிகளில் யாரும் ஒப்புக் கொள்ளவில்லையென்பது தெளிவாகி விட்டது. காரணம் இந்த மசோத தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றவில்லை என்பதோடு திரு எஸ் தொண்டமான் ஒரு அறிக்கையில் சுட்டிக் காட்டியிருப்பதைப் போல் ஏற்கனவே பிரதம மந்திரி வகுப்பு சமரசத்துக்கா வெளியிட்ட நான்கு அம்ச சலுகைத் திட்ட இன்படிகூட இல்லாததுதான். சிங்களத்துட தமிழ் மொழிக்குச் சரி சம அந்தஸ்துக்கு குறைந்த எதையும் தமிழ் மக்கள் இன்று ஏற்கும் மன நிலைமையில் இல்லை. அற்ப சலுகை பெறுவதைவிட அதுவும் இல்லாததே நல்லதென்ற கருத்து நிலவி வருகிறது.

தீவிர சிங்களவாதிகளோ முற்றிலு வேறான காரணத்துக்காக மசோதாவை கடுமையாக எதிர்க்கிறார்கள். மசோத தமிழர்களுக்கு அளவு மீறிச் சலுகை காட் விட்டதாயும், அது நிறைவேறினால் நாட்டி தமிழர் கை வலுத்து விடுமென்றும் இவர்க வாதிக்கிறார்கள். ஸ்ரீமதி குசுமா ராஜரத் என்ற பெண் அங்கத்தவர் பார்லிமெண்டி பேசியபோது அரசாங்கம் சிங்களவர்களை தமிழர்களுக்கு அடிமையாக்குவதாகக் கண் ணீர் விட்டு உண்மையாகவே ஒரு குர அழுது விட்டுக் கையிலிருந்த மசோதாவின் நகலைச் சுக்குநூறாகக் கிழித்துப் போட்டார்

இந்த மசோதாவைத் தமிழர்கள் யாரும் விரும்பவில்லையென்பதற்கு அடையாளமாக மசோதா பார்லிமெண்டுக்கு வந்த தின தன்று யாழ்ப்பாணத்தில் மிகமிக அமைதியாகத் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. மக்கள் கடைகளை மூடி, கறுப்புக்கொடி பறக்க விட்டுத் துக்கம் கொண்டாடினர். சிங்களவர்களிலும் அனேகர் மசோதாவை எதிர்ப்ப தற்கு அறிகுறியாக எதிர்க் கட்சியிலிருந்த சிங்களவர்கள் மட்டுமின்றிச் சர்க்கார் கட்சியைச் சேர்ந்த சிலரும் கூட்டத்துக்கே வராம லிருந்து விட்டனர். ஒரு உதவி மந்திரியும் மசோதாவை எதிர்த்து வாக்களித்திருக்கிறார். யாரும் விரும்பாத ஒரு மசோதாவை அவசரக் கோலத்துடன் ராணுவ போலீஸ் படை பாதுகாப்புகளுடன் கொண்டு வந்து பார்லிமெண்டில் நிறைவேற்றுவானேன்? அவசர காலச் சட்டம் அமுலில் இருக்கையில் அதன் பயனாகப் பேச்சு சுதந்திரமும், பொதுக் கூட்டம் நடத்தும் சுதந்திரமும் கட்டுப் படுத்தப்பட்டிருக்கையில் இம் மசோதாவைக் கொண்டு வந்திருக்கக் கூடாதென்பதே பலரது கட்சி.

—ரஜனி

திரு க. சந்தானம்


எழுதும்

புதிய பொருளாதாரத் தொடர் கட்டுரை

"செங்கோலும் ஜனநாயகமும்"

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது


அவனுக்கு
ஜான்ஸன்ஸ்
பேபி பவுடரே
ஏற்றது
Johnson's
BABY
POWDER
Johnson & Johnson



43

பகைவர்களினின்று ஓடித் தப்பலாம். ஆனால் நாம் செய்த செயலின் விளைவு நம்மைத் துரத்திக் கொண்டு வருவதினின்று ஓடித் தப்ப முடியாது.

எனைப்பகை உற்றாரும்
உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று
அடும்.

எந்தச் சத்துருவைச் சம்பாதித்தும் அந்த விரோதத்தினால் உண்டாகும் துன்பத்தினின்று தப்பலாம். ஆனால் நாம் செய்யும் செயலே நமக்குச் சத்துருவாகிப் பின்தொடருமே. அந்தப் பகையின் தண்டனையிலிருந்து தப்புதல் முடியாது.

[வீயாது — நீங்காமல். அடும் — கொல்லும்.]

நாம் சென்ற இடமெல்லாம் அதுவும் பின்தொடர்ந்து வரும்.

* * *

நம் நிழல் நாம் எங்கே சென்றாலும் கூட வருகிறதைப் போல் செய்த தீமையின் விளைவு நம்மைத் துரத்திக் கொண்டே வரும். அதன் விளைவாகிய கேட்டினின்று தப்புவது நிழலினின்று தப்பி ஓடுவது போல் ஒரு முடியாத காரியம்.

தீயவை செய்தார்
கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந்
தற்று.

நம் நிழல் நம்முடைய காலை விடாமல் எங்கே சென்றாலும் எவ்வளவு வேகமாக ஓடினாலும் கூடவே தொடர்ந்து வருவது போல் வினைப் பயனும் நம்மை விடாமல் வந்து கெடுக்கும். வினையின் பயன் உடலின் நிழலைப்போல் தவிர்க்க இயலாது.

தீய செயலில் இறங்கும் மகனுக்குச் சொல்லுகிறார் முனிவர். செய்த பாவத்தின் பயனை நீ கட்டாயம் அனுபவிக்க நேரும். என்ன செய்தும் தப்பமாட்டாய். உன் நிழலினின்று நீ தப்ப முடியுமா? பாபத்தில் இறங்காதே என்கிறார்.

* * *

உன் நன்மையை நீ விரும்புகிறாயா, இல்லையா? உன்னையே நீ வெறுக்கிறாயா? இல்லையே. உன்னுடைய க்ஷேமத்தையாவது நீ விரும்புவதாயிருந்தால் எந்தப் பாபச் செயலும் செய்யாதே.

தன்னைத்தான் காதலன்
ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப்
பால்.

தனக்குத்தான் நண்பன் ஆயின் தீவினை என்று சொல்லப்பட்ட வகையில் எதையும் செய்யாதிருப்பானாக!

எனைத்தொன்றும் — சிறியதாயினும், பெரியதாயினும்.

பிறருக்குச் செய்யும் தீவினை உனக்கே துன்பம் விளைவிக்கும். பிறரை நீ காதலிக்கவில்லை. உன்னையாவது நீ காதலிக்கிறாயா, இல்லையா? அதற்காகவாவது தீவினை செய்யாதே என்று மூடனுக்குச் சொல்லுகிறார் முனிவர்.

'தீவினைப்பால்' என்றால் வினைகளில் ஒரு பகுதியாகிய தீவினைகள்.

டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் பாரதத்தின் பொருளாதாரப் பேரறிஞர் வரிசையில் முன்னணியில் நிற்பவர். டில்லியின் "பொருளாதாரப் பள்ளி"யின் தலைவராக இருந்தவர். டில்லி சர்வகலாசாலையின் உபஅத்யக்ஷகர். திட்டக்கமிஷனின் பொருளாதார ஆலோசகர்களில் ஒருவர். இவ் விஷயத்தைப்பற்றிச் செயல் முறையில் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகளைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார். —ஆசிரியர்

அன்னியக் கடன்களும் அவற்றின் விளைவுகளும்

டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ்

நமது அன்னியச் செலாவணி நெருக்கடியைப் பற்றி இப்போதெல்லாம் நாட்டில் அதிகமாகச் சர்ச்சை செய்யப்பட்டு வருகிறது. இந்த நெருக்கடி ஏற்பட்டதற்குக் காரணங்கள் என்ன, இதைச் சமாளிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்பதைப் பற்றியெல்லாம் விவாதம் நடைபெறுகின்றன. பொதுவாகக் கவனிக்கும் போது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் அதனுடைய அயல் செலாவணித் தேவைகளும்தான் நெருக்கடிக்குக் காரணங்களென்றும், திட்டக் கமிஷனும் மத்திய அரசாங்கமும் சரிவரத் திட்ட அம்சங்களை வகுக்காததால்தான் நெருக்கடி கவலை தரும்படி கடுமையாக உருவாயிற்று என்றும் ஒப்புக் கொள்ளப் படுகிறது.

நெருக்கடியைச் சமாளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எதிரெதிராக இரண்டு திசைகளிலிருந்து ஆரம்பித்தாலும் எல்லாம் ஒரே முடிவைக் கருத்தில் கொண்டே எடுக்கப்பட்டவை. ஒரு புறம் இறக்குமதியின்மீது கடுமையான கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்துடன் சர்க்கார் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்களையும் இனங்களையும் கூடுமான வரையில் திட்ட காலத்துக்கு அதிகமாகவும் வளர்த்தப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலம் இரண்டாவது திட்டகாலத்தின் பாக்கியுள்ள வருஷங்களுக்குத் தேவைப்படும் அன்னியச் செலாவணியை முடிந்த மட்டில் குறைக்கப் பட்டிருக்கிறது. மறுபுறத்தில் அமெரிக்க ஐக்கியநாடு, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, ஜப்பான் போன்ற மேற்கத்தி நாடுகளிலிருந்தும், மேற்கு நாடுகளின் செல்வாக்கு ஓங்கியுள்ள நாடுகளிலிருந்தும் பெருமளவில் சர்க்கார் தொகுதித் தொழில்களுக்கும் தனியார் தொகுதித் தொழில்களுக்கும் அன்னியக் கடனும் அன்னிய உதவியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விதம் நமக்குக் கிடைக்கும் அன்னிய உதவி கடன்களாகவும் கடன் வசதியாகவும் இருப்பதால் இவற்றை எவ்வாறு திருப்பிக் கொடுப்பது என்ற கேள்வி எழுகிறது. இத்துடன் இக் கடன்களால் நாட்டின் பொருள்நிலை எவ்வாறு பாதிக்கப் படுகிறது, நாட்டின் அபிவிருத்திக்காகவும் மக்கள் தேவைகளுக்காகவும் மேன்மேலும் இறக்குமதி செய்ய வேண்டிய பொருள்களுக்கு நம்மால் பணம் கொடுக்க முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது. இவற்றுடன் இணைந்த மற்றொரு கேள்வி நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தைப் பெருக்கி அதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய அன்னியச் செலாவணியைக் கொண்டு திருப்பித்தர வேண்டிய கடன்களையும் அவ்வப்போது கொடுத்துவிட்டு நம்முடைய தேவைக்கு வேண்டிய பொருள்களையும் தருவித்துக் கொள்ள முடியுமா என்பது. இதை அனுசரித்து எழும் மற்றொரு கேள்வி, புதுக்கடன்களைவிடப் பழைய கடன்களைத் திருப்பிக் கொடுப்பது எப்படியும் முதல் இடம் பெறவேண்டும் என்பதனால் மூன்றாவது ஐந்தாண்டு காலத்துக்குத் திட்டத்தின் முதலீடு குறைந்த அளவிலேயே இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுவது. முக்கியமாக அன்னியச் செலாவணிக்குத் தேவைப்படும் அம்சங்கள் மிகவும் குறைக்கப் படவேண்டும் என்று கூறப்படுகிறது.

ஆகவே, இந்தச் சர்ச்சைகளிலிருந்து மூன்று கேள்விகள் உருவாகின்றன:—

1. மேன்மேலும் வளர்ந்து கொண்டே போகும் இந்த அன்னியக் கடன்களுக்குக் காரணமான செலாவணி நெருக்கடி, வேகமாக நமது நாட்டின் பொருளாதார நிலை விருத்தியடைய வேண்டுமென்று வகுத்த திட்டத்தில் எதிர்பார்த்ததுதானா? அப்படியென்றால் எந்த அளவுக்கு எதிர்பார்த்தது?

2. பாரதத்தின் பொருளாதார நிலைக்கு ஏற்படக்கூடிய விளைவுகளையும் எதிர்காலத்தில் நாம் தொடர்ந்து நாட்டின் பொருள் நிலை அபிவிருத்திக்குத் திட்டங்கள் வகுத்து முன்னேற வேண்டும் என்பதையும் கவனத்தில் கொண்டு, இவ்வாறு நாம் அன்னியக் கடன் சுமைகளை அதிகரித்துச் செல்வது தவறான நடவடிக்கையா? அல்லது சரிதானா?

3. இந்தச் செலாவணி நெருக்கடியிலிருந்து நாம் தெரிந்து கொண்ட உண்மைகளையும் அனுபவத்தையும் எதிர்காலத்தில் நமது கொள்கைகளை வகுக்க எப்படிப் பயன் படுத்திக் கொள்ளுவது?

இந்தக் கேள்விகளுக்கு வரிசைக்கிரமமாகப் பதில் அளிக்க முயற்சி செய்வோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட செலாவணி நெருக்கடி திட்டத்தினால் நேர்ந்தது அல்ல. திட்டத்தில் எதிர்பார்த்தது அல்ல என்பதை முதலில் தெளிவாகச் சொல்ல

வேண்டும். திட்டத்தில் எதிர்பாராமல் நேர்ந்ததுதான். திட்டக் கமிஷன் நிர்வாகக் குழு அல்ல. நுட்பங்களை ஆராய்ந்தறியும் அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவினர். பொருளாதார நிலை அபிவிருத்தியடைய என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நிபுணர்களின் ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் அவர்கள் கேட்டுக் கொள்ளுகின்றனர். இவ்வாறு கலந்து ஆலோசித்த பின்னரே இரண்டாவது ஐந்து ஆண்டு திட்ட காலமாகிய 1955-56 லிருந்து 1960-61ம் வருஷம் வரையில் நாட்டில் ரூ. 1100 கோடிக்கு ஏற்றுமதியைக் காட்டிலும் இறக்குமதி அதிகமாகத்தான் இருக்கும் என்று அவர்கள் கணக்குப் போட்டனர். இந்தச் செலாவணிப் பற்றாக்குறையைச் சமாளிக்க நமது ஸ்டர்லிங் நிதியிலிருந்து ரூ. 200 கோடி வரையில் உபயோகிப்பதென்றும், நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அன்னிய மூலதனமாக ரூ. 100 கோடி வரையில் செலவு செய்யப் படலாம் என்றும், அயல் அரசாங்கங்களிலிருந்தும், சர்வதேச ஸ்தாபனங்களிலிருந்தும் ரூ. 800 கோடி வரையில் உதவியாகவும் கடனாகவும் பெறுவது என்றும் வகை வகுத்தனர். இவ்வாறு மதிப்பீடுகள் செய்தபோது, திட்டத்தின் கீழ் சர்க்கார் தொகுதிக்கும் தனியார் தொகுதிக்கும் தேவைப்பட்டது போக மாமூலாகச் செய்யப்படும் இதர வகை இறக்குமதிக்கும் வகை செய்யப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்ட பிறகுதான் மேலே குறிப்பிட்ட பற்றாக்குறையின் அளவு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் செயல் முறையில் இந்தக் கணக்கீடுகள் தவறிப் போயின. தவறிப் போனதற்கு ஒரு காரணம் திட்டத்துக்குப் புறம்பாக ராணுவ தளவாடங்களின் இறக்குமதி எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமாகச் செய்யப்பட்டது. ஆனால் இதன் மூலம் ஏற்பட்ட தாரதம்யம் கணக்கீடுகளை அதிகமாகப் பாதிக்கவில்லை. கணக்குகள் தவறிப் போனதற்குக் கீழ்க்கண்ட இதர இனங்களில் இறக்குமதிகள் பெருவாரியாக அதிகரித்ததுதான் நெருக்கடி உண்டாகியதற்கு முக்கிய காரணம். அதாவது:

1. சர்க்கார் தொகுதியில் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட இனங்களில் உத்தேசமதிப்பீடுகள் சரிவரச் செய்யாமை.


2. தனியார் தொகுதிக்குத் திட்டத்தில் அனுமதித்திருந்ததற்கு அதிகப்படியாக யந்திரச் சாமான்களும் தளவாடங்களும் அரைகுறை வேலை தீர்ந்த சாமான்களும் இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டதின் அளவு எவ்வளவு, எந்தச் சமயங்களில் செய்யப்பட்டது என்பனவற்றைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியாதபடி திட்டக் கமிஷனுக்கும், நிதி இலாகாவுக்கும், வர்த்தகத் தொழில் இலாகாவுக்கும் ஒத்துழைப்பு இல்லாததே இதைச் சாத்தியமாக்கியது.

3. திட்டக் கமிஷன் விவசாயப் பண்டங்கள் உற்பத்திக்கு ஏற்படுத்தியிருந்த லட்சியங்களை நிறைவேற்றாததால் திட்டத்தில் கணக்கிடப்பட்டதற்கு அதிகமாக உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்ய நேர்ந்தது.

4. திட்டத்தில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமாகவும், நாட்டின் மக்களுக்கு அவசியமான அளவுக்கும் அதிகமாகத் தானிய உபயோகப் பொருள்களை இறக்குமதி செய்தது.

இதிலிருந்து இரண்டு விஷயங்கள் புலனாகின்றன. திட்டக் கமிஷன் வகுத்த திட்டத்தில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்தன. மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் திறமையுடன் திட்ட அம்சங்களை நிறைவேற்றவில்லை. இவ்விரண்டு காரணங்களும்தான் செலாவணி நெருக்கடியை உண்டாக்கி விட்டன.

அடுத்த கேள்வி: நெருக்கடியைச் சமாளிக்க இவ்வளவு பெருவாரியாக நாம் அன்னியக் கடன் வாங்குவது சரியான நடவடிக்கைதானா என்பது. நாம் செய்வது சரியான செயல்தானென்று நிச்சயமாக என்னால் கூற முடியாது. முதலாவதாக, நமக்கு இப்போது கிடைத்துக்கொண்டிருக்கும்கடன்களும் உதவியும் குறுகிய காலக் கடன்கள்தான்.



டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ்

இவற்றுக்கெல்லாம் வட்டி விகிதமும் அதிகம். குறுகிய கால அளவிலேயே திருப்பிக் கொடுக்க வேண்டியவை. இது அதிகாரபூர்வமாக லோக சபையில் சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. இரண்டாவது திட்டகால முடிவுக்குள்ளாகவே நாம் சுமார் ரூ. 150 கோடி வரையில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும், மூன்றாவது திட்ட ஐந்தாண்டு காலத்தில் அசலுக்காகவும் வட்டிக்காகவும் சுமார் ரூ. 500 கோடி வரையில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் கண்டிருக்கிறது. இந்தத் தொகையே நமக்குக் கிடைக்கக்கூடிய அன்னியச் செலாவணி வருமானத்தைக் கரைத்து விடும். நமது ஸ்டர்லிங் கையிருப்பை நாம் ஏற்கனவே ஏறக்குறைய பூராவாகவே கரைத்து விட்டோம் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டால், இரண்டாவது திட்டத்தைத் தொடர்ந்து அவசியமாக வர

வேண்டிய மூன்றாவது திட்டத்துக்குத் தேவையான அன்னியச் செலாவணிக்கு வகை செய்வது எவ்வளவு கஷ்டம் என்பது உடனே விளங்கும்.

இரண்டாவதாக, இப்போது நமக்குக் கிடைக்கும் அன்னிய உதவியில் பெரும் பாகம் சர்க்கார் தொகுதியிலாகட்டும், தனியார் தொகுதியிலாகட்டும், உற்பத்திப் பெருக்கில் ஈடுபட்டிருக்கும் தொழில் அபிவிருத்திக்காகக் கிடைக்கவில்லை. உணவுப் பொருள் இறக்குமதிக்காகவும், அரைகுறையாகத் தயாரித்த பொருள்கள் இறக்குமதிக்காகவும் தினசரி உபயோகத்துக்கான ஆடம்பரப் பொருள்கள் அல்லது அம்மாதிரி பொருள்கள் இறக்குமதிக்கும், உள் நாட்டிலேயே சாதாரண உபயோகத்துக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய யந்திரச் சாமான்கள் இறக்குமதிக்கும்தான் கிடைத்திருக்கின்றன. அதாவது, நமது அன்னியக் கடனில் பெருமளவு நமது தினசரி உபயோகப் பொருள்களைத் தருவிக்கவும் உற்பத்தி செய்யவும் செலவழிக்கப்பட்டதே தவிர, உள் நாட்டு உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் நமது தேசிய உற்பத்தியை அதிகரிக்கவோ அல்லது ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணி சம்பாதிக்கவோ உபயோகிக்கப்படவில்லை.

மூன்றாவதாக இம்மாதிரி பெருமளவில் கடன் வாங்குவது நாட்டின் அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பாதகமான மனப்பான்மையை மக்களிடையே வளர்க்கக் காரணமாகிறது. அரசியல் துறையில் நாம் கடைப்பிடிக்கும் நடுநிலைமைக் கொள்கையைத் தளர்த்திக் கொள்ள வேண்டி வந்தாலும் வரலாம். அயல்நாட்டுக் கொள்கை ஒருபுறமிருக்க, சுதந்திர இந்தியாவில் எம்மாதிரி சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று செயல்படுகிறோமோ அம்மாதிரி சமுதாயத்தை அமைக்க முடியாமல் போனாலும் போகக் கூடும். பொருளாதாரத் துறையில் உள்நாட்டுச் சேமிப்பு உயர்ந்த அளவுக்குப் பெருக வேண்டும் என்ற தீவிர முயற்சி மந்தித்துப் போகக்கூடும். அதே மாதிரி திட்ட இனங்களில் செய்யப்படும் செலவுகளை விரயமாகாமல் கண்காணிப்பதிலும் உற்சாகம் குன்றிவிடக் கூடும். தற்போதைய பாரத சமுதாயத்தில் மேலே சொன்ன விளைவுகள் ஏற்கனவே சிற்சில அம்சங்களில் தோன்ற ஆரம்பித்து விட்டன. உதாரணமாக, நமக்கு உதவி அளிக்கும் அயல் அரசாங்கங்கள் தனியார் தொகுதி தொழில்களைப் பலப்படுத்துவதில் தீவிரமாகப் பிரயாசை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி நிர்ப்பந்தங்களுக்கு இந்திய அரசாங்கம் சோஷலிஸ்ட் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற கொள்கைக்கு மாறுபட்டிருப்பினும், உட்பட வேண்டியிருக்கிறது. எனவே, நாம் பெருமளவு அயல்நாட்டு உதவியைப் பெற வேண்டி எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் சரியானதல்லவென்றே இக்காரணங்களிலிருந்து தெரிய வரும்.

இதிலிருந்து நாம் அன்னிய உதவியை எதிர்பார்த்திருக்கவே கூடாது, அயல்நாட்டுக் கடன்களை வாங்கியிருக்கவே கூடாது என்று எண்ணலாகாது. அன்னியக் கடன் வேண்டியதுதான். அயல்நாடுகளிலிருந்து தானமாகவோ முயற்சியின் பேரிலோ கடன் வாங்காமல் எந்த நாடும் பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியாது. இதில் முக்கிய நோக்கம் எவ்வாறு இருக்க வேண்டுமென்றால், தேசத்தின் தன்னம்பிக்கைக்குப் பழுது ஏற்படாத வரையில் வேகமாகவும் இடைவிடாமலும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அனுகூலமாக இருக்கும் வரையில் அயல் நாடுகளில் கடன் வாங்கலாம்.


இப்போது மூன்றாவது கேள்வியைப் பற்றி ஆராய்வோம். இதுவரையில் நமக்கு ஏற்பட்ட அனுபவத்திலிருந்து எதிர்காலத்தில் நாம் எம்மாதிரி கொள்கையை வகுத்துக் கொள்வது என்பது கேள்வி. எந்த விதமான கொள்கையை நாம் வகுத்துக்கொண்டு கடைப்பிடித்தாலும், அவை கீழ்க்கண்ட அம்சங்களை முக்கியமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம். அவை பின்வருமாறு:

1. நீண்ட காலத்துக்கு, அதாவது உத்தேசமாகப் பத்து பதினைந்து வருஷங்களுக்காவது பெருமளவுக்கு அன்னியச் செலாவணி நமக்குத் தேவைப்படத்தான் செய்யும். இடைவிடாது நமது பொருளாதாரம் அபிவிருத்தியடைவதற்கு இன்றியமையாத யந்திரச் சாமான்களைத் தருவித்து அதற்குப் பணம் செலுத்த இந்த அன்னியச் செலாவணித் தேவை நிச்சயமாக இருக்கும்.

2. இவ்வாறு தேவைப்படும் அயல் செலாவணியைப் பெருமளவுக்கு நாம் ஏற்றுமதியைப் பெருக்குவதன் மூலம்தான் அடைய வேண்டும். ஏற்றுமதியை ஒரு பக்கம் விஸ்தரித்து நாட்டில் மூலதனம் பெருகுவதற்குத் தேவையல்லாத இறக்குமதியை மறுபக்கம் குறைப்பதன் மூலம் மிச்சப்படும் செலவாணியைக் கொண்டே இந்தத் தேவையை நாம் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

3. அன்னியக் கடன்கள் அவசியமே. ஆனால் இவை அயல் அரசாங்கத்தினிடமிருந்தும் சர்வதேச ஸ்தாபனங்களிடமிருந்தும் கிடைக்க வேண்டுமே தவிர தனியார் பாங்குகளிடமிருந்தோ கம்பெனிகளிடமிருந்தோ இவற்றைப் பெறக் கூடாது. கிடைக்கக் கூடிய கடன்களும் நீண்டகாலக் கடன்களாக இருப்பதோடு, குறிப்பிட்ட பொருள்களைக் கட்டாயம் வாங்கவேண்டும் அல்லது குறிப்பிட்ட தேசங்களிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தமான ஷரத்துகள் இல்லாமலிருக்க வேண்டும். எங்கெல்லாம் கடன் ரூபாயில் திருப்பிக் கொடுக்கப்படுகிறதோ, அப்போதெல்லாம் அபிவிருத்தி தடைப்படாவண்ணம் சோஷலிஸ்ட் சமுதாய அமைப்புக்கு ஒத்த முறையில் செலவழிக்கப்படுகின்றதா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பிரச்னையில் கவனிக்க வேண்டிய அடிப்படை அம்சம் ஒன்று உள்ளது. அதாவது நாடு திட்டமிட்டு முன்னேற வேண்டும் என்ற செயலைக் கைவிட முடியாது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், அதாவது 1975-76 ஆம் வருஷத்தில் பாரத மக்களின் தேசிய வருமானம் இப்போதைக் காட்டிலும்



ஆகஸ்ட்
15
முதல்
சென்னை
ஸ்ரீகிருஷ்ண·பாரகன்·உமா
மற்றும் தென்னகமெங்கும்..
எம்ஜியார்
பிக்சர்ஸ்
நாடோடி
மன்னன்
ஒளிப்பதிவு..G.K.ராமு
டைரக்ஷன்...எம்·ஜி·ஆர்

Elegant


ஆகஸ்ட்
15உ முதல்
சென்னை
மற்றும்
தென்னாடெங்கும்
மினர்வா
பிக்சர்ஸ்....
சாரங்கதரா
திரைக்கதை-வசனம் • S.D.சுந்தரம்
பாடல்கள்-மருதகாசி
சங்கீதம்-G.ராமனாதன்
டைரக்ஷன் • V.S.ராகவன்
RIGHTS CONTROLLED BY...
THE ANNAMALAI CORPORATION (P) LTD., MADRAS

திரட்டிக்க வேண்டும் என்ற லக்ஷியத்தை விட முடியாது. இதை அடைய வேண்டுமானால் நமது சேமிப்பும் மூலதனமும் பெருகுவது தற்போதைய 7 சதவிகிதத்திலிருந்து 1970-71ஆம் ஆண்டில் 16 சதவிகிதமாக உயர வேண்டும். அதற்குப் பின் ஐந்தாவது திட்ட காலத்தில் 17 சதவிகிதத்துக்கு உயர்ந்து பிறகு அதே அளவில் நிலைத்து நிற்க வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்டக் கமிஷனின் வாதாஸ்தில் இவ்வாறுதான் லட்சியங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

இதை எட்டிப் பிடிக்க வேண்டுமானால் மூன்றாவது திட்டம் இரண்டாவது திட்டத்தைக் காட்டிலும் மிக மிகப் பெரிதாக இருக்க வேண்டும்.

அதாவது கனரகத் தொழிற்சாலைகளும் இவற்றைச் சேர்ந்த இதர இனங்களும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இருந்ததை விட மூன்றாவது ஐந்தாண்டு காலத்தில் அதிக முக்கியத்துவம் பெறும். எனவே இப்போது ஏற்பட்டுள்ள அன்னியச் செலாவணி நெருக்கடியும் இதைத் தொடர்ந்து பெருகிக் கொண்டே போகும் அன்னியக் கடன்களும் மூன்றாவது திட்டத்தின் மொத்த அளவுகளைக் குறைக்கும்படிக்கோ, அவற்றின் தன்மைகளை மாற்றும்படிக்கோ விடக்கூடாது. முதலீடு செய்யும் வகையிலும் தொழில் அபிவிருத்திக்கும் சேமிப்பு மூலம் மூலதன வளர்ச்சிக்கும் தற்போதைய நெருக்கடியில் பாதகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகையினால் நமக்குத் தேவையான அன்னியச் செலாவணி வசதிகளை நாட்டுக்குள்ளேயே தான் செய்து கொள்ள வேண்டும். அதற்குத் தான் நாம் முயற்சிசெய்ய வேண்டும். அயல் நாடுகளிலிருந்து கிடைக்கும் செலாவணி தற்போது இரண்டாவது திட்ட காலத்தில் என்னவித ஷரத்துக்கள்படி கிடைத்துக் கொண்டிருக்கின்றனவோ அதைவிட மாறுபட்ட ஷரத்துக்களின் கீழ் நமக்குக் கிடைக்கும்படியாக வகை செய்ய வேண்டும்.

வேகமாகப் பொருளாதார முன்னேற்றம் அடையத் திட்டமிட்டுச் செயல் புரிவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி நம் நாட்டில் எல்லோரும் யோசனை செய்வது நல்லது. அவ்விதம் செய்ய வேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. கருத்தளவில் பார்க்குமிடத்து அடுத்த 15 அல்லது 17 வருஷ காலத்தில் நாம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று எதிர்பார்ப்பது மிகச் சிறியதாகத்தான் தோன்றும். வருஷவாரி முன்னேற்றக் கணக்கின்படி பார்த்தால் நமது வேகம் திருப்திகரமாகவே இருப்பதாகத் தோன்றும். ஆனால் இப்போது அடித்தளத்திலிருக்கும் குறைவான வாழ்க்கைத்தரத்திலிருந்தும், குறைவான தேசிய வருமானத்திலிருந்தும் ஆரம்பித்துப் படிப்படியாக முன்னேறுகையில் வருஷவாரி முன்னேற்ற விகிதத்தைக் கொண்டு திருப்தியடைவதைக் காட்டிலும் மொத்தமாக நாட்டின் அபிவிருத்தி எப்படி இருக்கிறதென்பதுதான் முக்கியமானதாகும். எனவே நாம் 1975—76-ம் ஆண்டில் எப்படியும் நமது தேசிய வருமானத்தை இருமடங்காகப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற லட்சியத்தை நிறைவேற்ற வேண்டும். இதைச் செய்ய வேண்டுமானால், நமக்குத் தேவையான அன்னியச் செலாவணி வசதி வாய்ப்புகளை முக்கியமாக நமது நாட்டிலேயே தான் பெறவேண்டும். அன்னிய ஸ்தாபனங்களிடமிருந்து எதிர்பார்ப்பது நல்லதல்ல. நம் நாட்டிலேயேதான் தேடிக் கொள்ள வேண்டும் என்று நான் சொல்லும்போது அயல் நாட்டு வர்த்தக மூலம் நாம் சேமிக்க வேண்டியதைத் தான் சொல்லுகிறேன். அதாவது உள் நாட்டுத் தேவைகளைக் குறைத்துக் கொண்டாவது உற்பத்தி செய்த பொருள்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதே போல் நமது உள்நாட்டுத் தேவைகளைப்பூர்த்தி செய்யாமல விட்டுவிட நேர்ந்தாலும் இறக்குமதியைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இதையே வேறுவிதமாகச் சொல்லுவதானால் அன்னியச் செலாவணி வசதிகள் என்பது உள்நாட்டில் அயல் வர்த்தக சம்பந்தமாக நாம் மேற்கொள்ளும் சேமிப்பு நடவடிக்கையே. உள்நாட்டு நிதித் தேவைகளுக்குச் சேமிப்பு மூலம் மூலதனம் சேகரிப்பது போலவேதான் இதுவும். இதை நாம் புத்தித் தெளிவுடன் எவ்வளவு சீக்கிரமாக உணர்ந்து கொள்ளுகிறோமோ, நமது நாட்டின் கொள்கைகளையும் நமது சமூக நடவடிக்கைகளையும் எவ்வளவு சீக்கிரம் இவ்வுண்மைக்கேற்ப மாற்றிக் கொள்ளுகிறோமோ

அவ்வளவுக்கு நாட்டின் வருங்காலப் பொருளாதார சுபிட்சத்துக்கு நல்லது.

இந்தச் சர்ச்சையிலிருந்து நாம் நடைமுறையில் எவ்வாறு நமது நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது என்பதற்குச் சில வழிகள் காண்கின்றன. இவற்றை ஒரு ஜாபிதாவால் கொடுத்து விட்டு ஏற்கனவே நீண்டு விட்ட இந்தக் கட்டுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

1. திட்டத்தின் ஒவ்வொரு இனமும் மிகவும் கவனத்துடனும் கண்டிப்புடனும் பரிசீலனை செய்யப்பட வேண்டும். உள்நாட்டு முதலீடோ வெளிநாட்டுச் செலாவணியோ முடிந்த வரையில் குறைப்பதற்காகவும், திட்ட இனங்கள் ஒழுங்காகவும் சரியாகவும் பலனளிப்பதற்கும் அவசியமில்லாத சில்லறை அம்சங்களை ஒழித்துக் கட்டவும் இந்த நடவடிக்கை அவசியம்.

2. அன்னியச் செலாவணி தேவைப்படும் திட்டத்தில் சேர்க்கப்படாத எந்த இனத்தையும் அனுமதிக்கக் கூடாது. சிறிய அளவுக்குத்தான் அயல் செலாவணி தேவை என்ற தாரதம்யம் பார்க்கக் கூடாது. அப்படி எந்த இனமாவது அத்தியாவசியம் என்று கருதப்பட்டால் நிரந்தரக் கமிட்டி அம்மாதிரி இனங்களை நன்கு ஆராய்ந்து குறிப்பிட்டு அவற்றை அனுமதிக்க வேண்டும். அந்தக் கமிட்டியின் நடவடிக்கைகள் பகிரங்கமாகவே இருக்க வேண்டும். அவ்வப்போது அதன் பாதாஸ்தைப் பொது மக்களிடையே வெளியிட வேண்டும்.

3. இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களையோ, அரைகுறையாகத் தயாரிக்கப்பட்ட பொருள்களையோ நம்பி இயங்கும் உள்நாட்டுத் தொழில் எல்லாம் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும் தொழில்களாகக் கருதப்பட வேண்டும். அவை உற்பத்தி செய்யும் பொருள்களை ஏற்றுமதி செய்தே ஆகவேண்டும் என்று அம்மாதிரி தொழிற்சாலைகளை நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். அவைகள் தயாரிக்கும் பொருள்கள் அயல்நாட்டுச் சந்தைகளில் விலை போகவில்லை என்றால் சிறிது காலத்துக்கு அம்மாதிரி தொழிற்சாலைகள் மூடிக் கிடந்தாலும் நல்லதே. இதனால் சிலருக்கு வேலையிலாத் திண்டாட்டம் ஏற்பட்டாலும் ஏற்படட்டும்.

நாம் பொருளாதாரத் துறையில் தவறான பாதையில் சென்றுவிட்டு, மேலும் அதே பாதையில் போவதற்கு நமது நிதி வாய்ப்புகள் இடந்தராவில்லையானால் அல்லது அதனால் நமது இதர முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பாதகம் உண்டாகுமானால், நாம் சென்ற தவறான பாதையிலிருந்து பின்வாங்கத் தயங்கக்கூடாது. இப்படிப் பின் அடைவதால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகளைச் சாத்தியமான இதர முறைகளில் சமாளிக்கவேண்டும். ஜனநாயக அமைப்பு சமுதாயத்தில் மக்களுக்குப் பிடிக்காத முடிவுகளைச் செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது கடினமே. ஆயினும், தைரியம் இல்லாமல் நிலைமையை மோசமாகும்படி விடுவதைக் காட்டிலும் தைரியமாக முறையை மாற்றிக்கொள்ளுவது மேலான செயலாகும். உ[illegible] நாட்டுத் தொழில்கள் பெருவாரியா[illegible] சாதாரண மக்களுக்கு இன்றியமையாத் தேவைகளைப் பூர்த்தி செய்வதானால், அ[illegible] மாதிரி தொழில்களுக்கு வேண்டிய இறக்[illegible] மதிப் பொருள்களை அனுமதிக்க வேண்[illegible] டதே. சிறுபான்மையோரான மத்தியத[illegible] உயர்தர மக்கள் வசதிக்காக மட்டும் உ[illegible] பத்தி செய்யும் தொழில்களுக்கு இறக்குமதி[illegible] அனுமதிக்கக் கூடாது. இம்மாதிரி சாதா[illegible] ரண மக்களுக்கு உபயோகமாகும் தொழி[illegible] சாலைகள் மிகவும் சில. உயர்தர மக்[illegible] களுக்கு உபயோகமாகும் ரேயான், நைலா[illegible] போன்ற பொருள்களைத் தயாரிக்கு[illegible] தொழிற்சாலைகளுக்கு இறக்குமதி வழங்[illegible] வது முறையாகாது. ஏனெனில் இவற்றுக்[illegible] வேண்டிய அயல் நாட்டு மூலப் பொரு[illegible] களைக் கொண்டு உற்பத்தியாகும் சாமா[illegible] களின் உயர் வருமானமுள்ள மக்களுக்கு[illegible] தான் பயன்படுமே தவிர, சாதாரண மக்களுக்குப் பயன்படாது.


4. நாட்டில் விவசாயப் பண்டங்களு[illegible] உணவுத் தானியங்களும் அதிகமாக உ[illegible] பத்திசெய்வதற்கு உருப்படியான நடவடி[illegible] கைகள் மேற்கொள்ள வேண்டும். உதா[illegible] ரணமாக, விவசாயப் பொருள்களின் வி[illegible] வாசிகளை ஒருநிலைக்குக் கீழ் போகாம[illegible] உத்தரவாதத்துடன் பார்த்துக் கொள்வது நல்ல விதை, ரஸாயன உரம், மற்று[illegible] இவை போன்று விவசாய உற்பத்திப் பெரு[illegible] க்கு வேண்டிய பொருள்களை விவசாயி[illegible] களுக்குக் கொடுத்து உதவ வேண்டும். தொழில் வளர்ச்சிக்காக யந்திரச் சாமான்களுக்கு அன்னிய நாடுகளின் தயவை எதிர்பார்த்து இருக்கையில் நமது உணவுத் தேவைகளுக்கும் இறக்குமதியை நம்பி இருந்தால் மேமிப்பு மூலம் நமக்குத் தேவையான அன்னியச் செலாவணியை எப்படி நாம் சம்பாதிக்க முடியும்? இவை இரண்டும் ஒரே காலத்தில் நடக்காது; எதிர்பார்க்கவும் கூடாது.

5. அன்னியச் செலாவணி வசதிகள் வேண்டுமானால் நாட்டில் சேமிப்பு மூலமே அவற்றை அடைய முடியும். இந்த உண்மையை மக்கள் நன்கு உணரும்படியாகட்டு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து லாபம் சம்பாதிக்கும் பொருள்களை நாட்டிலேயே உபயோகப் படுத்தக்கூடாது. அல்லது அவ்வாறு உபயோகிப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். சாதாரண மக்களுக்குத் தேவைப் படாத பொருள்களை இறக்குமதி மூலம் உயர்தர மக்கள் தருவித்துக் கொள்ளுவதைத் தவிர்க்க வேண்டும். இதை ஜனங்கள் புரிந்து கொண்டு செயல் மூலம் நிறைவேற்றினாலொழிய, அன்னியச் செலாவணி வசதிகளை நாட்டுக்குள்ளே செய்து கொள்ள முடியாது. ஆகவே, நாட்டில் மத்தியதர உயர்தர வகுப்பினர்கள் பெருவாரியாகக் காந்திய வழியைப் பின்பற்றி வாழ்க்கைத் தேவைகளைக் குறைத்துக்

கொண்டு வாழமுற்பட வேண்டும். கேவலம் பொருளாதார நோக்கில் பார்த்தால்கூட நம் நாடு இருக்கும் தற்போதைய நிலையில் இம்மாதிரி எளிய வாழ்க்கையை மேற்கொள்ளுவது அவசியமாகிறது.

6. அன்னிய உதவி என்பது மற்றெல்லா வகைகளும் தீர்ந்த பிறகு நாடவேண்டிய கடைசி சாதனம். நமது பொருளாதார முன்னேற்றத்துக்கு அடிப்படையான அம்சங்களுக்காக வாங்கியே தீரவேண்டும் என்ற இனங்களுக்கே செலவிடப்படவேண்டும். அன்னிய உதவி குறைந்தபக்ஷம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு மட்டும் பெற வேண்டும். இவ்வுதவி கிடைக்கும் ஷரத்துக்கள் நமது சோஷலிஸ்ட் சமுதாயத்தை உருவாக்கும் லக்ஷியத்துக்கு முரணாக இருக்கக் கூடாது.

கடைசியாக, ரூபாயின் மதிப்பைக் குறைப்பது நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஏற்ற வழி அன்று. ரூபாயின் மதிப்பைக் குறைப்பதென்றால் ரூபாயைக் கொண்டு வாங்க வேண்டிய அன்னியப் பொருள்களை நாம் வேண்டுமென்றே விலை உயர்த்துகிறோம். அதனால் நமது ஏற்றுமதிப் பொருள்களெல்லாம் மலிவடைகின்றன. நமக்கு அவற்றின் மூலம் கிடைக்கும் செலாவணி குறையும். நாம் இறக்குமதி செய்யும் பொருள்கள் விலை அதிகமாகும். நாம் அவற்றுக்கு ரூபாயில் அதிகமாக விலை கொடுக்கவேண்டும். இந்த நிலைமை நாம் விரும்பக் கூடியதல்ல. நமது ஏற்றுமதிப் பொருள்களின் விலை உயர்வுதாழ்வுக்கேற்பத் தேவைகளும் விரிவடையும் தன்மையுள்ள பொருள்களுக்கு மட்டும் விலை குறைந்தால் போதும். இறக்குமதிப் பொருள்களில் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடிப்படையாகத் தேவைப்படாதவற்றுக்கு மட்டும் விலை உயர்ந்தால் பாதகமில்லை. இதைத்தான் நாம் விரும்புவது. ரூபாயின் மதிப்பைக் குறைப்பதென்பது ஒரு பொது நடவடிக்கை. திட்டமிட்டு முன்னேறாத நாடுகளுக்கும் கட்டுப்படுத்தாத வர்த்தக நிலையுள்ள நாடுகளுக்கும் இந்த நடவடிக்கை பயன் அளிக்க வல்லது. ஆனால் பாரதத்தைப் போன்ற முழு திட்டத்துடன் அல்லது ஓரளவுக்கேனும் திட்டத்துடன் இயங்கும் நாடுகளுக்கு இம்முறை ஏற்றதல்ல. ஏற்றுமதியைப் பெருக்கவும் அனாவசியமான இறக்குமதியைத் தவிர்க்கவும் அவற்றின் மூலம் அன்னியச் செலாவணி சம்பாதித்து மூலதனத்தைப் பெருக்கவும் ரூபாயின் மதிப்பைக் குறைப்பது சிறந்த வழி அன்று. நமக்குத் தேவைப்படுவது திட்டக்கமிஷன் திட்டங்களை இப்போதைக் காட்டிலும் சரிவர வகுக்க வேண்டும்; மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் வகுத்த திட்ட இனங்களைத் திறமையுடன் நிறைவேற்ற வேண்டும்; மக்கள் எல்லோரும் முக்கியமாக உயர் வருமானமுள்ள பகுதியினர் உண்மையாகவே எளிய வாழ்க்கை நடத்த வேண்டும்; முக்கியமாக, ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்கள், அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து தயாராகும் பொருள்கள் விஷயத்தில் இம்மாதிரி சிக்கன வாழ்க்கை முறை அனுஷ்டிக்க வேண்டும் ஆகிய இவைகள்தாம்.



வைணிக மேதைக்கு அஞ்சலி செலுத்துகிறோம்

வாத்தியங்களிலே மகோன்னத வாத்தியமான வீணையை சங்கீத தேவதையாகப் பூஜித்து உபாசித்து வந்த நாதோபாசகரான காரைக்குடி சாம்பசிவ அய்யரின் மறைவு எல்லோரையும் மிகுந்த துக்கத்தில் ஆழ்த்தி விட்டது. சங்கீத கலாநிதி ஸ்ரீ சாம்பசிவ அய்யர், பல தலைமுறைகளாக வீணையைக் குல தெய்வமாகக் கொண்ட உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர். எக்காலத்தும் எந்த இடத்தில் யார் வீணையைக் கண்டாலும், அவர்களுக்கு இணையிலா வைணிக நிபுணர்களாக விளங்கிய காரைக்குடி சகோதரர்களின் நினைவு வராமல் இருக்க முடியாது. ஐம்பது ஆண்டுகளாக வீணை வாத்தியத்தில் தனிப பெரும் மேதையாகத் திகழ்ந்த ஸ்ரீ சாம்பசிவ அய்யர் நம்மை விட்டுப் பிரிந்தது சங்கீத உலகுக்கு மாத்திரமல்ல, பாரத நாட்டுக்கே பெரும் நஷ்டமாகும். திருவாங்கூர், மைசூர் முதலிய சமஸ்தானங்களும் சுதந்திர இந்திய சர்க்காரும் ஸ்ரீ சாம்பசிவ அய்யருக்கு விருதுகள் வழங்கி மரியாதை செய்தபோது, சங்கீத உலகமே பெருமை அடைந்து, அந்த நல்ல காரியத்தை ஏகமனதாகப் பாராட்டியது.

ஸ்ரீ சாம்பசிவ அய்யர் தம் பத்தாவது வயதிலிருந்தே பெரிய சபைகளில் அவரது தமையனார் காலம் சென்ற வைணிக மகாவித்வான் ஸ்ரீ சுப்பராம அய்யர் அவர்களுடன் வீணை வாசிக்கத் தொடங்கிவிட்டாரெனில், அவரது மேதையைக் குறித்து அதிகம் கூறவேண்டியதில்லை. ஸ்ரீ அய்யர் அவர்கள் வீணை வாத்தியத்துக்கே உரியதான தானம் (மத்திம காலம்) வாசிப்பதில் நிபுணராக விளங்கினார். அவர் தானம் வாசிக்கத் தொடங்கி விட்டாரானால் கேட்போர்கள் மூச்சை அடக்கிக் கொண்டு கேட்டு ஆகாகாரம் செய்வார்கள். ராகம், பல்லவி, கீர்த்தனம், ஸ்வரம் வாசிப்பது பரம கச்சிதம். ஏன்? அவரை ஒரு லய பிரம்மம் என்றும், நாதயோகி என்றும் சொன்னால் மிகையாகாது. ஸ்ரீ சாம்பசிவ அய்யருக்கு அவரது வீடே குருகுலமாக அமைந்தது அவரது தனிச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகும். கர்நாடக சுத்தமான வாசிப்பில் ஸ்ரீ சாம்பசிவய்யருக்கு ஈடு அவரே என்று சொல்லலாம். அவரது சிஷ்யர்களான பல வைணிக வித்துவான்கள் அவர் விட்டுச் சென்றுள்ள, கர்நாடக சுத்த சங்கீதமாகிற பொக்கிஷத்தைப் பேணிப் பாதுகாத்து வருவார்கள் என்று நம்புகிறோம்.

ஸ்ரீ சாம்பசிவ அய்யர் சங்கீதக் கலையில் சிரத்தைக் கண்டது போலவே, லௌகிக விஷயங்களிலும் மிகுந்த ரசிகராக விளங்கினார். பாடும்போதும், வாத்தியங்கள் வாசிக்கும்போதும் மாத்திரமல்ல, பேசும்போதுகூட சுருதியோ, தானமோ, லயமோ தவறக் கூடாதென்று அவர் விளையாட்டாகக் கூறுவது உண்டு. அடையாறு கலா க்ஷேத்திரம் ஸ்ரீ சாம்பசிவ அய்யரைத் தலைமைப் பேராசிரியராக அடையும் பாக்கியம் பெற்றிருந்தது. சென்னை மக்களுக்கும் ரசிகர்களுக்கும் அவரை அடிக்கடி தரிசித்து, அவரது வீணாகானத்தைக் கேட்டு ஆனந்தமடையும் வாய்ப்பு கிடைத்தது. கலா க்ஷேத்திர மாணவ மாணவிகளுக்கும் அந்த மகானைக் குருவாக அடையும் பேறு கிடைத்தது. சங்கீத வானில் பேரொளி வீசித்திகழ்ந்து அமர வாழ்வுபெற்ற வைணிக மேதை காரைக்குடி ஸ்ரீ சாம்பசிவ அய்யர் அவர்களுக்குப் பக்திச் சிரத்தையுடன் இறுதி அஞ்சலி செலுத்துகிறோம்.

அதிசயமும் அற்புதமுமான சருமப் பாதுகாப்பு




ஸ்நானத்துக்கும், தேகாலங்காரத்துக்கும் முன்பு சருமத்தை சுத்தப்படுத்துவதற்கு, பல விதமான பயனளிக்கும் மலபார் லிம்டா சோப்பு ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பிரத்யேகமான அபிமானத்தைப் பெற்றிருக்கிறது. லிம்டாவை உபயோகித்து ஸ்நானம் செய்த பின், உங்களுக்கு பரம ஸௌகரியமளிக்கும் உணர்ச்சியைப் பெறுவீர்கள். ஏனெனில், அதில் சேர்ந்துள்ள மூலிகைத் தைலங்களும் அதன் நறுமணமும் அதற்கு மேன்மையை அளித்துள்ளன.

மலபார்

லிம்டா

டாய்லெட் சோப்



தி வெஜிடபிள் சோப் வொர்க்ஸ்,
கோழிக்கோடு-1

SMP-2-58. **இந்தியன் சோப் & டாய்லெட்ரீஸ் மேக்கர்ஸ் அஸோஸியேஷனின் அங்கத்தினர்**

ஸ்டாக்கிஸ்டுகள்:

ஸாமினி டிரேடிங் கார்ப்பொரேஷன், திருச்சிராப்பள்ளி ○ ஸ்ரீ மீனாக்ஷி எண்டர்பிரைஸஸ், மதுரை K. R. ராமமூர்த்தி ராவ், கும்பகோணம் ○ ப்ரைம் ஏஜன்ஸீஸ், சேலம் ○ P. K. A. குழந்தைவேலு நாடார், திண்டுக்கல் ○ V. R. பார்த்தசாரதி முதலியார், வேலூர் ○ நடராஜா ஸ்டோர்ஸ், திருநெல்வேலி

திரு க. சந்தானம் 'கல்கி' நேயர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவர். பொருளாதார விஷயங்களைப்பற்றி இரண்டு தொடர்க் கட்டுரைகள் 'கல்கி'யில் எழுதித் தமிழ் மக்களுக்கு அறிவு புகட்டியிருக்கிறார். அவர் அன்னியச் செலாவணியைப் பற்றிச் சொல்லிய கருத்துக்கள் இந்த ஆராய்ச்சி அரங்கத்துக்கு ஒரு முடிவுரை போலவே அமைந்திருக்கின்றன.

—ஆசிரியர்

நெருக்கடியால் புதிய நெறி

க. சந்தானம்

அன்னிய நாணயச் செலாவணி நெருக்கடியைப் பற்றிப் பல பிரமுகர்கள் தெளிவாகச் சென்ற ஐந்து வாரங்களாக எழுதியிருக்கிறார்கள். டாக்டர் லோகநாதன் புள்ளி விவரங்களைக் கொடுத்து விளக்கியிருக்கிறார். ஸ்ரீ தேஷ்முக் நெருக்கடியின் மூல காரணங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். மற்றும் பிரமுகர்கள் அதைச் சமாளிக்கப் பலவித யோசனைகள் கூறியிருக்கிறார்கள்.

மத்திய அரசாங்கத்தின் தொழில் வியாபார இலாகாவுக்கும் நிதி இலாகாவுக்கும் 1955—57-ம் ஆண்டுகளில் ஒத்துழைப்பில்லாமல் கண்மூடித்தனமாகக் கொடுக்கப்பட்ட இறக்குமதிச் சீட்டுகளின் காரணமாகச் சுமார் ரூ 500 கோடிக்கு இந்த நெருக்கடி உடனடியாக நேரிட்டு விட்டது; இது வருந்தத்தக்கதே. ஆயினும் இந்தச் சீட்டுகளின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட தளவாடங்களில் பெரும்பான்மை இரண்டாவது திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய சாமான்களேயாகும். ஆகவே, நெருக்கடி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் வருவதற்குப் பதிலாக ஆரம்பத்திலேயே வந்து விட்டது. இதுவும் ஓர் விதத்தில் நன்மையே. அதனால் அனாவசிய இறக்குமதிகளைக் குறைக்கவும் ஏற்றுமதியைப் பெருக்கவும் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த முயற்சிகள் முதல் ஐந்தாண்டுத்திட்டம் தொடங்கியவுடனே செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஜனநாயகத்தில் கடுமையான முறைகளைக் கையாளுவது சுலபமல்ல. அவை அத்தியாவசியமென்று அனைவரும் ஒப்புக் கொண்ட பின்னரும் எவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது!

உண்மையில் விசேஷ நெருக்கடி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கல்ல. அடுத்த மூன்றாவது திட்டத்துக்கே. இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் அதாவது 1-4-56ல் பாரதத்தின் ஸ்டர்லிங் கையிருப்பு ரூ. 746 கோடி இருந்தது. அதில் ரூ. 200 கோடி இரண்டாவது திட்டத்துக்குப் பயன்பட வேண்டுமென்றும், மீதி மூன்றாவது திட்டத்துக்கு ஆதாரமாக இருக்க வேண்டுமென்றும் திட்டம் போட்டிருந்தனர். அதில் ரூ 500 கோடிக்கு மேல் எடுத்தாகி விட்டது. இரண்டாவது திட்ட காலத்தில் கொடுபட வேண்டிய பல தொகைகளின் தவணைகள் ஒத்திப் போடுவதற்கு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆதலால் அந்தச் செலவுக்கு ஏற்பாடாகி விட்டது. தற்போதைய நெருக்கடி திட்ட ஆரம்பத்தில் எதிர்பார்த்ததே யாகும்.

மூன்றாவது திட்டத்துக்கு நமது கையிருப்பில் ஸ்டர்லிங் தொகை இராது. வெளிநாட்டுக் கடன்களுக்கும், ஒத்திப் போடப்பட்ட தவணைகளுக்கும் வருஷம் ரூ 100 கோடிக்குக் குறையாமல் அன்னியச் செலாவணி வேண்டும். நமது சாதாரணத் தேவைக்கான இறக்குமதிகளுக்குப் போதுமான ஏற்றுமதி செய்தாலே பெரிய காரியம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிநாட்டார்களிடமிருந்து ஏராளமான நீண்ட காலக் கடன்கள் பெறுவதும், அன்னிய முதலாளி ஸ்தாபனங்களுக்குச் சலுகைகள் கொடுத்து இங்கு வரவழைத்துத் தொழிற்சாலைகள் அமைப்பதுமே மூன்றாவது திட்டத்தை அமுல் செய்யும் வழி என்று ஏறக்குறைய எல்லாப் பிரமுகர்களும் கூறியிருக்கின்றனர். இதை நானும் ஓரளவு ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் முற்றிலும் அங்கீகரிக்கவில்லை.



திரு க. சந்தானம்

'நெருக்கடியே புதுநெறியின் தாய்' என்று ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு. அதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். தற்போதைய அன்னியச் செலாவணியின் நெருக்கடியை நாம் புத்திசாலிகளாக இருந்தால் நாட்டின் நிலையை மாற்றிக் கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

அன்னிய நாடுகளிலிருந்து யந்திரங்கள் மட்டுமின்றி அவற்றுக்கு வேண்டிய உற்பத்திச் சாமான்களையும் ஏராளமாக இறக்குமதி செய்தாலொழிய நமது பொருளாதாரம் பெருகாது என்ற ஒரு தப்பெண்ணம் நிலவியிருக்கிறது. இதனால் பாரதத்

வீரத் திருநாள்!

★

உரிமைக் குரலின் பெருமை முழக்க
உலகம் வணங்கிடும்நாள் !—அகிம்சா
தரும நெறியோ டருமை சுதந்திரம்
தானே இணங்கிடும் நாள் !

காந்திய மெய்ச்சுடர் ஏந்தி அரசியல்
கண்ணை விழித்திடுமநாள் !—உலக
மாந்தர் அடங்கலும் சாந்த நெறியில்
மகிழ்ந்து தழைத்திடும் நாள் !

பாரதத் தாய்க்குரல் பாரெலாம் விம்மிப்
பரிவோ டணைத்திடும் நாள் !—வான
மாரத வீரரும் சீர்தர வண்டாய்
மலரடி மொய்த்திடும் நாள் !

விடுதலை கண்டமெய் வீரம் தாயகம்
வெற்றிகொண் டாடிடும்நாள் !—யுத்தப்
படுகுழி தூர்க்கவே பாரதம் தலைமைப்
படைநடத் தூச்செலும்நாள் !

சுதந்திர நன்னாள் : சுகர் தரும் பொன்னாள்
சுடர்மிகும் சோபிதநாள் !—இன்பம்
விதந்தரு கோடி விரித்து நமையாண்ட
வீரப் பெரும் திருநாள் !

ஆண்டுபல் வாண்டுகள் வேண்டிப் போராடி
அடைந்த தவத்திருநாள் !—நெஞ்சில்
மூண்டெழும் வேட்கைதான் தூண்டிட யார்க்கும்
முதலாம் புவித்திருநாள் !

—தமிழமுகன்

தின் நிபுணர்களுக்குப் புதிய கருவிகள் செய்யவோ, அக் கருவிகளைப் பயன்படுத்துவதில் புதிய முறைகளைக் கண்டு பிடிக்கவோ எவ்வித அவகாசமும் கொடுக்கப்படுவதில்லை. இதுவரையில் அமைக்கப் பெற்ற அணைக்கட்டுகளையும், மின்சார நிலையங்களையும் பாரத நிபுணர்களுக்கே சுதந்திரமாக விட்டிருந்தால் எவ்வளவோ கோடிகள் மிச்சமாயிருக்கும் என்று அவர்களுள் சிறந்தவர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள்.

சோவியத் ருஷ்யாவின் ஐந்தாண்டுத் திட்டங்களின் சரித்திரமும் இதற்கு உதாரணமாகும். பொது உடைமைப் புரட்சிக்குப் பின் பல வருஷங்களுக்கு ஜெர்மனியும், அமெரிக்காவும் ருஷியாவுக்கு உதவி செய்தன. பின்னர் அது கிடைக்காமற் போகவே, எல்லா சூக்ஷமங்களையும், கருவிகளையும் தனது இளைஞர்களைக் கொண்டே சாதித்துக் கொள்ளுவது என்று தீர்மானித்துப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து முடிவில் சோவியத் ருஷ்யா உலகின் முன்னணியில் நிற்பதைக் காண்கிறோம்.

ஆதலால், அதிக அன்னிய
செலாவணி யில்லாமல் மூன்
வது ஐந்தாண்டுத் திட்ட
வகுக்க வேண்டும், வகுப்ப
சாத்தியம். அதுவேவருங்கால
துக்கு உகந்தது என்ற நிச்சய
பாரதசர்க்காரின் மனத்திலும்
மக்களின் உள்ளத்திலும் கு
கொண்டு விட்டால் நம
பொருளாதார வளர்ச்சி விசி
திரமாக மாறி, எதிர்பாரா
வேகத்துடன் வளரும் என்ப
எனது திடமான அபிப்பிர
யம். ஆதலால், அப்படிச் செய்
வேண்டிய அவசியத்தை இ
போது நமக்கு ஏற்பட்டுள்
அன்னியச் செலாவணி நெரு
கடி உண்டாக்கி விட்டது ஒ
நன்மை என்றே கருதுகிறேன்
இயந்திரங்களைச் செய்யு
மூல யந்திரங்களைத் தவிர இத
யந்திரங்களை இறக்கும
செய்ய மாட்டோம், வெ
நாட்டிலிருந்து இறக்கும
யாகும் சாமான்களைக்கொண்
உற்பத்தி செய்யும் தொழி
சாலைகள் தற்சமயம் நமக்
வேண்டாம், ஏராளமாக
முதல் தேவையான பெரு
தொழிற்சாலைகளையும், மி
சார நிலையங்களையும், நீர்
பாசன அணைகளையும் சி
இடங்களில் அமைப்பதை வி
1 கோடிக்கு அதிகமில்லா
முதலைக் கொண்டு அமைக்க
கூடிய சிறிய தொழிற்சா
களை ஒவ்வோர் தாலூக்கா
லும் அமைப்போம் என்
அடிப்படையின் பேரில் மூன்
வது திட்டம் போடப்பட்டா
நமது பொதுநல சமுதா
லட்சியத்துக்கு விசேஷ சக்தி
உண்டாகும்; மக்களிடம் அதற்குப் பெரு
வாரியாக ஆதரவும் கிடைக்கும்.

முடிவில், இந்த முக்கியமான பிரச்சினை
யைப் பற்றி நாட்டின் பிரமுகர்களைக்கொண்டு
தமிழருக்கு அறிவு புகட்டக் 'கல்கி' செய்த
முயற்சிகளைப் பெரிதும் பாராட்டுகிறேன்.
பெரும்பாலான கட்டுரைகள் ஆங்கிலத்தி
லேயே எழுதப்பட்டிருந்தன. அவைகளை
எளிய நடையில் தமிழாக்கி நமது தாய்மொழி
யில் நுட்பமான பொருளாதார விஷயங்களை
ஆராய்வது சுலபம் என்று நிரூபித்ததும் தமி
ழுக்குச் செய்த சிறந்த தொண்டாகும். வாரந்
தோறும் கதைகளைப் படிக்கும் உற்சாகத்தால்
இக் கட்டுரைகளை ஒதுக்கி வைத்திருக்கும்
வாசகர்கள் அவைகளிருக்கும் ஆறு பிரதிகளை
யும் தேடி எடுத்துக் தொடர்ச்சியாக இக்
கட்டுரைகளைப் படிக்க வேண்டும். வருங்காலத்
தில் இது ஓர் முக்கிய பிரச்சினையாக இருக்
கப் போவதால் அதைப் பற்றிய வாத விவா
தங்களை நன்குணர்வதற்கு இந்தத் தொடர்
போதிய ஆற்றல் அளிக்கும்.

அதன் மதிப்பே அலாதி*



தி நியூ ஷோராக் ஸ்பின்னிங் அண்ட் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட், நடியாட்.

பதின்மூன்றும் அத்தியாயம்

கோதை நாச்சியார்

கண்களில் கனல் பொறி பறக்க வந்து நின்ற கோதைநாச்சியாரைப் பார்த்து, ''யாரா? யாரென்று நீயே வந்து கேள். இவர்கள் பேசுவதைக் கேட்டால் மனிதர்கள் பேசுவது போல் தெரியவில்லை'' என்று பதில் கூறினான் மணியகாரன்.

ஒரு பெண்ணுக்கு முன்னால் துச்சமான சொல்லுக்கோ, செயலுக்கோ ஆளானால் அது யாருக்குத்தான் பொறுக்கும்?

''அப்பனே! ஒழுங்காகப் பேசு!'' என்று சொல்லிக் கொண்டே கையை ஓங்கிக் கொண்டு அண்டராதித்தன் மேல் பாய்ந்தான் ஒருவன்.

''அருகில் நெருங்கினாயோ பொசுக்கி விடுவேன், ாசுக்கி!'' என்று தீப்பந்தத்தை ஓங்கினான் அண்ட ராதித்தன். உடனே இன்னொருவன் இடையிலிருந்த ாளை உருவினான். மற்றொருவன் கையி ருந்த வேலை நீட்டினான். 'ஐயோ! ந்தக் குண்டர்களிடம் எதற்காக ம்பு செய்தோம்? இவர்கள் ஆயுத ரணிகளாக வந்திருக்கிறார்களே!' ன்று அப்போதுதான் னத்தில் பயம் உறைத் துஅவனுக்கு. கொடுமை



தவழும் அவர்களுடைய கண்களைக் கவனிக்கையில் 'இவர்கள் எந்தத் தீமையையும் கூசாமல் செய்துவிடக் கூடியவர்கள்' என்று தோன்றியது.

''இதுதானா சத்திரம் என்று கேட்டால் பதில் சொல்வானா? தீவட்டியை ஓங்கிக் கொண்டு வருகிறான் மடையன்'' என்று வந்தவர்களில் ஒருவன் தன் கடைசி வசை புராணத்தை வெளிப்படுத்திய



அதே சமயத்தில், ''இதுதான் சத்திரம்! யார் ஐயா நீங்கள்? அகால வேளையில் வந்து கலவரம் செய்கிறீர்கள்? என்ன வேண்டும்?'' என்று வினவிக் கொண்டு பெண் புலிபோல் கணவனுக்கு முன் வந்தாள் கோதை.

பெண்ணின் முகத்துக்கு இந்த உலகத்தில் எப்போதுமே இரண்டு பெரிய ஆற்றல்கள் உண்டு. பிறரைக் கவருவது, பிறரை அடக்குவது. கோதை நாச்சியார் வந்து நின்றவுடன் வாளையும், வேலையும் பார்த்துப் பயந்து சிறிதே நடுங்கிக் கொண்டிருந்த அண்டராதித்த வைணவனுக்குத் தெம்பு உண்டாயிற்று.

''அப்படிக் கேள், சொல்கிறேன்! இந்த மாதிரி முரடர்களுக்காகவா சத்திரத்தைக் கட்டி வைத்திருக்கிறார்கள்?'' என்று அவளோடு ஒத்துப் பாடினான்.

''அம்மணி! இதுவரை இந்த அசட்டு மனிதரிடம் சண்டை பிடித்ததுதான் பலன். நீங்கள் மிகவும் நல்லவர் போல் தோன்றுகிறீர்கள். நாங்கள் வெளி தேசத்திலிருந்து வந்தவர்கள். இப்போதுதான் விழிஞத்தில் இறங்கினோம். முன்சிறைச் சத்திரத்துக்குப் போனால் தங்குவதற்கு இடம் கிடைக்கும் என்று கூறினார்கள். அதனால்தான் இங்கு வந்து சேர்ந்தோம்'' என்று குழைந்து குழைந்து பேசினான் ஒருவன்.

''அது சரி! நீங்கள் மூவரும் யாரென்று முதலில் சொல்லுங்கள். வருகிறவர்களை இன்னாரென்று தெரிந்து கொள்ளாமல் இங்கு யாருக்கும் இடம் கொடுப்பது வழக்கமில்லை'' என்றாள் கோதைநாச்சியார்.

வாசற்படியில் நின்ற அந்த மூவரும் பதில் சொல்லவில்லை. தங்களுக்குள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு ஆந்தையைப் போல் பேந்தப் பேந்த விழித்தனர்.

''ஒருவேளை நீங்கள் யாரென்று உங்களுக்கே தெரியாதோ?'' மனைவி பக்கத்தில் நிற்கிற தெம்பில் குத்தலாக இப்படி ஒரு போடு போட்டான் அண்டராதித்த வைணவன்.

''ஏய்! குடுமிக்காரச் சோழியா! இனிமேல் நீ குறுக்கே பேசினால் மண்டையைப் பிளந்து விடுவோம்'' என்று சினமடைந்து கத்தினான் ஒருவன்.

''யாராயிருந்தால் உங்களுக்கு என்ன? சத்திரத்தில் தங்க இடம் கேட்டால் பூர்வோத்தரமெல்லாம் சொல்லித்தான் ஆகவேண்டுமா?'' என்றான் இன்னொருவன்.

கோதை நாச்சியார் அவர்களை ஒருமுறை நன்றாகப் பார்த்தாள். அவர்கள் விவாதமும் குயுக்தியும் அவளுடைய மனத்தில் பலமாதிரியான சந்தேகங்களைக் கிளப்பின.



''ஐயா ! உலகத்தில் தங்களை இன்னாரெனச் சொல்லிக் கொள்ள விரும்பாதவர்கள் இவர்கள்தான் — திருடினவர்கள், திருட வந்தவர்கள், கொலை செய்தவர்கள், கொலை செய்யப் பாகிறவர்கள், வாழ்ந்து கெட்டவர்கள் ல்லது மான மிழந்தவர்கள் — இந்த கையைச் சேர்ந்தவர்கள்தாம் தங்களை ன்னாரென்று சொல்லிக் கொள்ளுவ ற்குநாணம் அடைய வேண்டும்'' என்று சால்லி விட்டுக் குறும்புத்தனமான ரிப்பொன்றைநெளியவிட்டாள் அவள்.

''என்ன சொன்னாய் ? எவ்வளவு திமிர் உனக்கு?'' என்று சொல்லிக் கொண்டே மூன்றுபேர்களும் சத்திரத்து வாசற்படியின் மேலே ஏறினர்.

''ஆமாம் ! சொன்னேன், சோற்றுக்கு உப்பில்லையென்று. சீ! போங்கள்வெளியே'' என்று சொல்லிக் கொண்டே கணவனை உட்புறம் இழுத்துக் கொண்டு முகத்தில் அறைந்தாற் போல் வாசல் கதவைப் பளீரென்று அடைத்துத் தாழிட்டாள்.

கதவு முகத்தில் இடித்து விடுமோ என்ற பயத்தில் அதிர்ச்சியடைந்து பின்னுக்கு நகர்ந்த மூவரும் வாசற்படிகளில் தடுமாறி நிலைகுலைந்து வீழ்ந்தனர்.

'' அயோக்கியப் பெண்பிள்ளை ! என்ன பேச்சு பேசி விட்டாள் !'' என்று கறுவிக் கொண்டான் ஒருவன்.

"வரட்டும்! வரட்டும்! எங்கே போய் விடப் போகிறான்? நாமும் சில நாட்கள் இந்தப் பிரதேசத்தில்தானே இருக்கப் போகிறோம்? இந்த அம்மையைக் கவனித்துக்கொள்ளலாம்" என்று சூளுரை கூறினான் இன்னொருவன்.

"அந்த ராணியைத் தீர்த்து விட்டுப் போகிற போக்கில் இந்தச் சத்திரத்து ராணியையும் தீர்த்துவிட வேண்டியது தான்" என்று பல்லைக் கடித்துக் கொண்டு உறுமினான் மூன்றாமவன்.

அப்போது மேலேயிருந்து மூன்று பேர்களின் தலையிலும் அருவி கொட்டுவது போல் மாட்டுச் சாணம் கரைத்த தண்ணீர்விழுந்தது. திடுக்கிட்டுநிமிர்ந்து பார்த்தனர். மேல் மாடத்தில் அந்தப் பெண் கோதை கலகலவென்று சிரித்துக் கொண்டு நின்றாள். அவள் கையிலிருந்த செப்புக் கொப்பரையை அவர்கள் தலைகளுக்குநேரே கவிழ்த்தாள். அந்த மூன்று ஆண் பிள்ளைகளின் இதயத்து நரம்புகள் யாவும் முறுக்கேறித் துடிதுடித்தன.

அத்தியாயம் 14

வசந்தமண்டபத்து ரகசியங்கள்

சின்னியா குமரியிலிருந்து எவ்வளவோ அருமையாகப் பாதுகாத்துக் கொண்டு வந்த அந்த ஓலை கடைசியில் மகாமண்டலேசுவரர் மாளிகையின் அந்தரங்க அறையில் எரிந்து சாம்பலாகப் போகும்படி நேரிடுமென்று தளபதி வல்லாளதேவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

ஓலையை எரித்துச் சாம்பலாக்கிவிட்ட பெருமையோ என்னவோ, இடையாற்று மங்கலம் நம்பி அவனைப் பார்த்து மிக அலட்சியமாகச் சிரித்தார்.

"என்ன தளபதி? நான் இப்படித் திடீரென்று உன்னுடைய அனுமதியில்லாமலே நீ கொண்டு வந்த ஓலையை அழித்து விட்டேன் என்ற வருத்தமா? ஏன் பேசாமல் உம்மென்று உட்கார்ந்திருக்கிறாய்? கவலையை விட்டு விட்டு உறங்கச் செல். மற்றவற்றைக் காலையில் பேசிக் கொள்ளலாம்."

அவருக்கு அவன் ஒரு பதிலும் சொல்லவில்லை. அதற்குள் அவரே மேலும் கூறினார்: "சேந்தா! பாவம் தளபதி இன்று மாலையிலிருந்து அடுத்தடுத்துப் பலஅதிர்ச்சிகளுக்கு ஆளாகித்தொல்லைப் பட்டிருக்கிறார். மிகவும் களைத்துப் போயிருப்பார். விடிந்தால் மந்திராலோசனைக் கூட்டத்துக்காக அரண்மனைக்குப் போயாக வேண்டும். சிறிது நேரமாவது உறங்கட்டும். போ! விருந்தினர் மாளிகையில் கொண்டு போய்ப் படுக்கை ஒழித்துக் கொடு. வேண்டிய வசதிகளைக் கவனித்துக் கொள்" என்று நாராயணன் சேந்தனை நோக்கிக் கூறிவிட்டு வல்லாளதேவன் பக்கமாகத் திரும்பி, "போ, வல்லாளதேவா! போய் ஓய்வெடுத்துக் கொள்" என்று சொன்னார். அவருடைய பேச்சின் விரைவும் அவசரமும் கண்டு அவனுக்கு மனத்தில் ஏதோ சந்தேகம் தோன்றியது.

எதற்காகவோ தன்னை அந்த இடத்திலிருந்து அவர் விரைவில் அனுப்பிவிட விரும்புகிறாரென்று அனுமானம் செய்தது அவனுடைய மனம்.

"நான் வருகிறேன், சுவாமி!" என்று அவருக்கு வணக்கம் செலுத்தி விட்டு, அங்கிருந்து எழுந்திருந்து நாராயணன் சேந்தனைப் பின்பற்றி விருந்தினர் மாளிகைக்கு நடந்தான் அவன். விருந்தினர் மாளிகை வசந்த மண்டபத்துக்கு அருகாமையில் இருந்தது.

தூக்கம்? அது அன்றிரவு மட்டுமல்ல, அதற்கு அப்புறமும் பத்து இரவுகளுக்குத் தன்னை நெருங்க முடியாத அவ்வளவு கவலைகளாலும், ஐயங்களாலும் குழப்பங்களாலும் மண்டை கனத்துப் பாரமாகி வெடித்து விடும் போலத் தோன்றியது தளபதிக்கு. விருந்தினர் மாளிகையில் கொண்டு வந்து விட்டுவிட்டு நாராயணன் சேந்தன் போய் விட்டான். தளபதி வல்லாளதேவனைச் சுற்றி அவனுக்குத் துணை இருந்தவை இருளும் தனிமையும்தான்.

சேர நாட்டு யானைத் தந்தத்தில் இழைத்துச் செய்த விருந்தினர் மாளிகையின் அழகான கட்டிலில் எண்ணெய் நுரையைப் போன்ற பஞ்சணை மெத்தையின் மேல் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான் வல்லாளதேவன்.

மாளிகையின் பின்புறத்துச் சுவரில் பறளியாற்று நீர் அலைகள் மோதும் ஒலி சுவர்க்கோழிகளின் 'ஙொய்' என்ற ரீங்காரம் இவற்றைத் தவிர எங்கும் நிசப்தம் சூழ்ந்திருந்தது. அவன் கட்டிலில் புரண்டதைப் போலவே அவன் மனத்திலும் பலப்பல எண்ணங்கள் புரண்டு கொண்டிருந்தன.

"எவ்வளவு அரும்பாடுபட்டு ஒற்றர்களிடமிருந்து அவன் அந்த இரகசிய ஓலையைக் கைப்பற்றினான்? அதனுள்



அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள்
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்



இதோ! பாமாலிவ்—
இந்தியாவின் மிகப்பிரசித்தியுற்ற
அழகுத் தைலங்களினால் செய்தது
உங்கள் வனப்பைக் காக்க
இந்த இருகுண அழகு முறையை இன்றுமுதல் கையாளுக!
1. சுத்தம் பெறுக பாமாலிவ்வின் நிறைந்த நுரையினால் அது சருமத்தை அணைத்து அழுக்கை இருந்த இடம் தெரியாமல் அகற்றுகிறது.
2. அழகு பெறுக பாமாலிவ்வில் உள்ள சுத்தமான, மணம் கமழும் எண்ணெய்களைத் தேய்ப்பதன்மூலம், பாமாலிவ் உங்கள் சருமத்தை மிருதுவாக, வழ வழப்பாக, இளமை ததும்ப வைக்க உதவட்டும்.
PALMOLIVE
PALMOLIVE
பாமாலிவ்
பியூடி சோப்
புதியது! நீடிக்கும்,
புஷ்பம்போன்ற புதுமை மணம்!



SANFORIZED
REGISTERED TRADE MARK
of CLUETT PEABODY & CO., INC., U.S.A.
Arvind
QUALITY FABRICS
ஷர்ட் துணிகள்
பாப்லின்கள்
கோட் துணிகள் &
பலவர்ண
பிரிண்டுகள்
அரவிந்த் மில்ஸ் லிட். ஆமதாபாத்-2
REGISTERED USER OF THE TRADE MARK 'SANFORIZED'

அடங்கியிருந்த செய்திதான் எவ்வளவு முக்கியமானது? பார்க்கப் போனால் எவ்வளவு பயங்கரமானது? அவனது திடமான உள்ளத்தின் நம்பிக்கையையே எரிப்பது போல் அல்லவா மகாமண்டலேசுவரர் அந்த ஓலையை எரித்து விட்டார்! அவருக்கு எவ்வளவு நெஞ்சுரம்? ஒருவேளை அவரே வடதிசைப் பேரரசர்களுக்கு உள் கையைப்போல இருந்து கொண்டு சதி செய்கிறாரோ? அதனால் தான் இந்த ஓலையை மகாராணியாரோ கூற்றத் தலைவர்களோ பார்க்கக் கூடாதென்று எரித்து விட்டாரோ?''

மகாமண்டலேசுவரரைப்பற்றி, தென பாண்டிநாட்டுத் தளபதி பதவியை ஏற்றுக் கொண்ட நாளிலிருந்து அவனுடைய மனத்தில் தோன்றியிராத சந்தேகங்களெல்லாம் இப்போது ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின.

எதை எதையோ நினைத்துக் கொண்டு படுக்கையில் தவித்துக்கொண்டு கிடந்தவன் குபீரென்று வாரிச் சுருட்டிக் கொண்டு துள்ளி எழுந்தான். அந்த மாளிகையின் இருட்டில் அவனுடைய செவிகள் எந்த ஒலியையோ கூர்ந்து கேட்பதற்கு முயன்றன. அவன் உடலில் நடுக்கமும் ரோமாஞ்சலியும் உண்டாயிற்று. உற்றுக் கேட்டான். இதுவரை இயற்கையாகக் கேட்ட பறளியாற்றுத் தண்ணீர் பாயும் ஓசையோ, சிள் வண்டுகளின்சப்தமோ அல்லஅது. அவனுடைய கட்டிலுக்கு அடியில் தளத்தின்மேல் யாரோ திடும்திடுமென்று கால் வைத்து நடப்பது போலக் கேட்டது. மாளிகைக்கு வெளியே நிலா ஒளி இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தாலும், உள்ளே இருட்டாகத்தான் இருந்தது. சாளரங்களெல்லாம் சுவரில் மிக உயரத்தில் இருந்ததனால் உள்ளே ஒளியைத் தர முடியவில்லை. அந்த அகால வேளையில் இருட்டில் அப்படிப்பட்ட ஓசையைக் கேட்டபோது தன் படுக்கைக்கு எதிரே நிற்கும் பெரிய வடிவுடன் கூடிய தூண்களெல்லாம் கருநெடும் பூதங்களாக மாறிக் கால் பெற்று மெதுவாக நடப்பன போல ஒரு பயங்கரப் பிரமை உண்டாயிற்று அவனுக்கு.

ஒரு விதமாக இடையிலிருந்து வாளை உருவிக் கையில் வைத்துக்கொண்டு வேகமாக அடித்துக் கொள்ளும் இதயத்துடன் படுக்கையிலிருந்து கீழே இறங்கினான் தளபதி. தயங்கித் தயங்கி அடி எடுத்து வைத்தான். அந்த ஒலி மெல்ல மெல்லத் தேய்ந்து மங்கியது. படுக்கையின் கீழே கேட்ட ஒலி இப்போது மேற்கு நோக்கிச் செல்வது போல் திசை மாறியது. அந்த ஒலி கேட்ட இடங்களிலெல்லாம் விருந்தினர் மாளிகையின் தரையே அதிர்வது போல் ஒரு வகைச் சலனம் உண்டாயிற்று. வல்லாள தேவனும் பொறுமை இழக்காமல், இருட்டில் தூண்களிலும், படிகளிலும், மோதித் தட்டுத் தடுமாறி, விழுந்து கொண்டு அந்த ஒலியைப் பின்பற்றிச் சென்றான்.

மாளிகை முற்றத்தின் கடைசிச் சுவர் வரை அந்த ஒலியைப் பின்தொடர முடிந்தது. அப்பால் முற்றத்துக் கதவைத் திறந்தபோது, கதவு நிலையின் கீழே வாசற்படியைத் தழுவினாற் போல் பறளியாறு பொங்கிப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.



நிலா ஒளியின் மோகன மயக்கத்தில் வானுலகத்து அமுதக் குழம்பே பொங்கிப் பாய்வது போலிருந்த ஆற்றின் அழகை அப்போது அவன் கண்கள் அனுபவிக்க முடியவில்லை.

''இந்த மாளிகையில் இரவு வேளைகளில் ஏதாவது பிசாசு நடமாட்டம் இருக்குமோ?'' என்று முதலில் ஒரு எண்ணம் எழுந்தது. ''சை! இதென்ன? சுத்த அசட்டுத்தனமான எண்ணம்? பிசாசாவது நடமாடுகிறதாவது? நாம் தான் இந்த அர்த்தராத்திரிப் போதுக்கு

மேலே இந்த இருண்ட மாளிகையில் பிசாசு போல் அலைந்து கொண்டிருக்கிறோம்'' என்று முதலில் தோன்றிய அந்த எண்ணத்தை அழிக்க முயன்றான்.

புது இடம்! எவ்வளவு களைப்பாக இருந்தாலும் உறக்கம் வராது என்று அவன் நினைத்திருந்தான். அதுவோ வெறும் புது இடமாக மட்டும் இருக்கவில்லை. புதுமைகளும் சூழ்ச்சிகளும் நிறைந்த இடமாகவும் இருந்தது.

'எப்படியாவது இருந்து தொலைத்து விட்டுப் போகட்டும். நான் போய்ப் படுக்கையில் புரண்டு இந்த இரவைக் கழித்து விடுகிறேன்' என்று தனக்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக முற்றத்துக் கதவை மறுபடியும் வேகமாகச் சாத்தி விட்டுத் திரும்பிப் படுக்கையில் வந்து உட்கார்ந்தான்.

ஒரு சில விநாடிகளே கழிந்திருக்கும். மீண்டும் அதே ஓசை! அதே இடத்திலிருந்து தொடங்கி மேற்கு நோக்கிச் சென்றது. இப்போது பாதாளக் கிணற்றுக்குள்ளேயிருந்து கேட்கிற மாதிரி 'கசுமுசு' வென்று பேச்சுக் குரலும் கேட்பது போலிருந்தது. மனப் பிரமை தானோ? என்று தன்னை நம்புவதற்கே மறுத்தது அவன் மனம். "இது உண்மையா? அல்லது நமக்கு மட்டுமே ஏற்படக் கூடிய மனப்பிரமையா? நாராயணன் சேந்தனைப் போய் அழைத்துக் கொண்டு வந்து இந்த மர்மத்தைச் சோதித்துப் பார்த்துவிட்டால் என்ன? இதற்கு முன்பு பகலில் எவ்வளவோ தடவைகள் இந்த மாளிகையில் வந்து தங்கியபோது இம்மாதிரி மர்மமான அனுபவம் எதுவும் ஏற்பட்டதில்லையே! 'என்ன ஆனாலும் சரி! நம்பியும், நம்பாமலும், இப்படித் தவிப்பதற்குள் நானே எழுந்திருந்து போய் நாராயணன் சேந்தனைக் கூப்பிட்டு வந்து விடுகிறேனே?' என்று ஒரு முடிவுக்கு வந்தவனாக விருந்தினர் மாளிகைக் கட்டிலிலிருந்து இறங்கி வெளியேறினான் அவன்.

இருட்டில் நிதானமாக நடந்து மாளிகையின் வாசற்படிக்கு அவன் வந்த போது ஆச்சரியத்தில் மூழ்கிப் போனான். எதிரே கையில் தீபத்துடன் நாராயணன் சேந்தனே அங்கு வந்து கொண்டிருந்தான். இதென்ன விந்தை? நெல் அளக்கும் நாழியை விடக் குட்டையான இந்த மனிதன் ஏதாவது, மாயம், மந்திரம் தெரிந்தவனா? இவனைச் சந்திக்கப் போனால் இவன் விழித்துக் கொண்டிருப்பானோ; அல்லது குறட்டை விட்டு ஆரம்பித்திருப்பானோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டே நான் புறப்படுகிறேன். இவனோ நினைப்பதற்கு முன்னால் தானே கையில் சுடர்விடும் விளக்கோடு என் முன்னால் வந்து நிற்கிறான்.'

இவ்வாறு எண்ணிக் கொண்டு மாளிகையின் வாசலிலேயே நின்று விட்டான் வல்லாள தேவன். ஆனால் மறு விநாடியே தன் அனுமானம் தவறு என்பது அவனுக்குப் புரிந்தது. அவன் ஏமாற்றமடைந்தான். அவன் நாராயணன் சேந்தன் வருவதைப் பார்த்துக்கொண்டு நின்றானே தவிர, வந்து கொண்டிருந்த நாராயணன் சேந்தன் அவன் நின்று கொண்டிருப்பதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. நேரே விருந்தினர்மாளிகையை நோக்கித்தான் அவன் வந்து கொண்டிருக்கிறானென்று வல்லாள தேவன் நினைத்தான்.



ஆனால் மாளிகைக்கு மிகப் பக்கத்தில் வந்ததும், சட்டென்று வலது பக்கமாகத் திரும்பி அங்கிருந்த கொடி மண்டபத்துக்குள் நுழைந்து விட்டான் நாராயணன் சேந்தன்.

"ஓ! சேந்தா! இப்படிக் கொஞ்சம் வந்து விட்டுப் போயேன்"—சொற்கள் நுனி நா வரைக்கும் வந்து விட்டன. என்ன தோன்றியதோ, தான் சொல்ல வந்ததை உடனடியாக அடக்கிக் கொண்டு விட்டான். நின்ற இடத்திலிருந்தே நிலவின் ஒளியில் மரகதக் குன்றமெனக் காட்சியளிக்கும் அந்தக் கொடி மண்டபத்தை நன்றாகப் பார்த்தான் தனபதி. அதற்குள்ளிருந்து முரசடிப்பதுபோல் ஒலிவந்தது.

மல்லிகை, முல்லை, மாதவி ஆகிய கொடிகளை இயற்கையாக அந்த இடத்தில் மரங்களில் படரச் செய்து முற்றிலும் பசுங்கொடிகளாலானதோர் கட்டடம் போலவே காட்சி தருமாறு அமைக்கப்பட்டிருந்தது லதாமண்டபமெனப்படும் அந்தக் கொடி மண்டபம்.

'மழைக் குளிரும், ஈரம் மிகுந்திருக்கும் சூழலுமுள்ள அந்தச் சமயத்தில், உலகம் உறங்கும் நடு இரவில் நாராயணன் சேந்தனுக்கு அங்கே என்ன வேலை? பால் போல் நிலா ஒளி பரவியிருக்கும் போது அவனுக்கு விளக்கு எதற்கு?'— என்று சிந்தித்துத் திகைத்தான் வல்லாள தேவன். "ஏ, அப்பா! இந்தக் குள்ளனும், இவனை ஆட்டிவைக்கும் இடையாற்று மங்கலம் நம்பியும் எவ்வளவு மர்மங்களை அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? இவைகளை முழுவதும் தெரிந்து கொள்வதற்கு வீரமும், வாளும், ஆள்பலமும் மட்டும் போதாது போலிருக்கிறது. அறிவு நுட்பத்தினாலும் சொந்தச் சாமர்த்தியம், சாதுரியம் இவைகளால் மாத்திரமே சாதிக்க முடிந்த காரியங்கள் இந்த உலகத்தில் நிறைய இருக்கின்றன. மகா மண்டலேசுவரரின் செயல்களெல்லாம் இந்த வகையைச் சேர்ந்தவை."— ஏனோ தெரியவில்லை. இடையாற்று மங்கலம் நம்பியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவனுடைய மனக் கண்ணுக்கு முன் உருவெளியில் உயரமும், அகலமும், பருமனும் அளக்கலாகா அளவும் பொருளும், துளக்கலாகா நிலையும் தோற்றமுமுள்ள மாபெரும்மலைச்சிகரமொன்றுதோன்றியது.



லதா மண்டபத்துக்குள் நுழைந்த நாராயணன் சேந்தன் வெகு நேரமாகியும் வெளியே திரும்பி வரவில்லை. "அங்கே அவன் என்னதான் செய்து கொண்டிருக்கிறான்? போய்ப் பார்ப்போமே" என்று வல்லாள தேவன் விருந்தினர் மாளிகை வாசலிலிருந்து பதுங்கிப் பதுங்கி நடந்து லதா மண்டபத்துக்குள் புகுந்தான். அவனுக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது. லதா மண்டபத்தில் நாராயணன் சேந்தன் இல்லை. "வந்த வழியே திரும்பாமல் இந்தக் கொடி மண்டபத்திலிருந்து வெளியேறுவதற்கு வேறு வழி ஏதேனும் இருக்குமோ? அப்படி இருக்குமானால் அந்த வழியாகச் சேந்தன் வெளியேறியிருப்பானோ? எதற்கும் சந்தேகமறச் சுற்றிப் பார்த்து விடலாம்" என்று எண்ணியவனாய் வட்ட வடிவமாய் அமைக்கப்பட்டிருந்த ஒரு மேடையை நெருங்கினான்.

பளிங்கு மேடையில் ஓரிடத்தில் தீபத்தைக் கீழே வைத்து எடுப்பதற்கு அடையாளமாகிய எண்ணெய்க் கறை படிந்திருப்பது இலேசாகத் தெரிந்தது.

பளிங்கு மேடையின் நட்டநடுவில் உட்கார்ந்த கோலத்தில் திருமகள் சிலை ஒன்று செதுக்கி வைக்கப்பட்டிருந்தது. சிலையின் கையிலிருந்த தாமரை மொட்டின் மேலும் கீழே படிந்திருந்தது போல் எண்ணெய்க் கறையின் தழும்பு தெரிந்தது. யாரோ எண்ணெய்பட்ட விரல்களால் தொட்டிருக்க வேண்டுமென்று சிரமமில்லாமல் ஊகிக்க முடிந்தது.

நாராயணன் சேந்தன் தன் கையில் கொண்டு வந்த எண்ணெய்த் தீபத்தைப் பளிங்குத் தரையில் வைத்து விட்டு அந்தக் கைவிரல்களால் திருமகள் சிலையின் கையிலுள்ள தாமரை மொட்டையும் தொட்டிருக்கிறான்.


தளபதி வல்லாள தேவனுக்கு மின் வெட்டும் நேரத்தில் ஒரு யோசனை உண்டாயிற்று. நடுங்கும் கையால் திருமகள் சிலையின் வலது புறத்துத் தாமரை அரும்பைத் தொட்டான். தொட்ட வேகத்தில் அது நன்றாகத் திருகுவதற்கு வந்தது. அது தானாகத் திருக முடியாமல் இறுகி நிற்கிறவரையில் அதைத் திருகினான் தளபதி.

பன்னிரண்டாவது முறையாக அவன் கைவிரல்கள் அந்த மலர் அரும்பைத் திருகுவதற்கு நெருடியபோது அவனுடைய உடலைச் சுமந்துகொண்டிருந்த பளிங்கு மேடை பூகம்பமடைந்தது போலக் கிடு கிடுவென்று ஆடியது. அடுத்தகணம் அந்தக் கருங்கல்லாலான திருமகள் சிலை யாரோ பிடித்து இழுத்துக் கொண்டு போவதைப் போலக் கிறுகிறுவென்று பின்னால் நகர்ந்தது. அது இருந்த இடத்தில் நாலு கோல் நீளமும் நாலு கோல் அகலமுமுள்ள சதுரமான இடைவெளி ஒன்று ஏற்பட்டது. மிரளும் கண்களால் குனிந்து பார்த்தான் அவன். வரிசையாகப் படிகள் தெரிந்தன. அதற்கப்பால் 'கருங்'கும் என்று ஒரு இருட்டுக் குகையாக இருந்தது. தன்னைச் சுற்றிலும் நாலுபுறமும் ஒரு பார்வை

பார்த்துவிட்டு அந்தச் சுரங்கத்துக்குள் துணிந்து இறங்கினான் அவன்.

பத்துப் பதினைந்து படிகள் இறங்கி உள்ளே சென்றதும் மேலே பார்த்தது போலவே ஒரு திருமகள் சிலை. சிலையின் இடது கைத்தாமரை அரும்பைத் திருகினான் அவன். தளபதியின் எண்ணம் சரியாக இருந்தது. அவன் அதைத் திருகி முடிந்ததும் மேலே சுரங்க வாயில் நகர்ந்து மூடிக்கொண்டு விட்டது. வெளியிலிருந்து வந்து கொண்டிருந்த சிறிதளவு நிலா ஒளியும் அடைபட்டுப் போகவே, மைக்குழம்பை வழித்து அப்பினாற்போல் இருட்டுகோரமாயிருந்தது.

எங்கோ ஒரு மூலையில் சிறு மின்மினிப் பூச்சிபோல் சுரங்கப் பாதையில் தொலை தூரத்தில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சம் சிறிதுசிறிதாக நகர்ந்து



மேலே சென்று கொண்டிருந்ததனால் நாராயணன் சேந்தன் தீபம் ஏந்திய கையுடன் முன்னே சென்று கொண்டிருக்கிறானென்று உய்த்துணர முடிந்தது.

தட்டுத் தடுமாறி வழியைத் தடவிக் கொண்டு தளபதி மேலே நடந்தான். சிறிது தூரம் சென்றதும் கீழே பாறையும் மணலுமாக இருந்தன. அங்கே கலகலவென்று தண்ணீர் கசிந்து இனிய ஜலதரங்க நாதத்துடன் பாய்ந்து கொண்டிருந்தது. அதன் காரணமாக வருகிறவர்கள் நடப்பதற்குக் கல்தூண்களை நிறுத்தி அவற்றின் மேல் வரிசையாக மரப் பலகைகளைப் பாலம் போலப் பிணைத்திருந்தார்கள். அதன் மேல் நடக்கும் போது 'திடும், திடும்' என்ற ஓசை உண்டாயிற்று. அது விருந்து மாளிகையில், தான் படுத்திருந்த பகுதிக்கு அடியில் இருக்க வேண்டுமென்று வல்லாளதேவன் நினைத்தான். தான் படுத்திருந்த இடத்தில் அந்தமாதிரி ஓசை உண்டானதற்குக் காரணம் அந்தச் சமயத்தில் சுரங்கத்துக்குள் அதே மரப்பாலத்தில் யாரோ நடந்து சென்றிருக்கிறார்களென்று அவனுக்குத் தோன்றியது. பறளியாற்றில் நீர் நிறைந்து பாய்வதால் அந்தச் சுரங்கத்துக்குள் நீர் ஊறிக் கசிவு ஏற்பட்டிருக்கிறதென்று தெரிந்துகொள்ள முடிந்தது.

முன்னால் விளக்குடன் போய்க்கொண்டிருக்கிற நாராயணன் சேந்தன் தான் நடக்கிற ஓசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்துவிடக் கூடாதே என்பதற்காக, மரப் பாலத்தில் பாதங்களை அழுத்தி ஊன்றாமல் மெள்ள நடந்து சென்றான் வல்லாளதேவன். கால் நாழிகை நடைக்குப் பின் பூமிக்கு அடியிலேயே கட்டப்பட்டிருந்த ஒரு விசாலமான மண்டபம் போன்ற இடம் அவனுடைய கண் பார்வையில் பட்டது.

அந்த மண்டபத்தில் வெளிச்சமாக இருந்தது. பேச்சுக் குரல்கள் கேட்டன. சுரங்கப் பாதையின் முடிவில் மண்டபத்துக்குள் நுழையும் இடத்தில் சுவரோடு சுவராகப் பதுங்கி நின்று கொண்டு பார்த்தான் தளபதி வல்லாளதேவன்.


அந்தப் பாதாள மண்டபத்தின் நாற்புறத்து இருண்ட மூலைகளிலும் அம்பாரம் அம்பாரமாகக் குவித்து வைக்கப்பட்டிருந்த வாள்களையும், வேல்களையும், கேடயங்களையும், ஈட்டிகளையும், கவசங்களையும் பார்த்தபோது அவனுக்குத் திகைப்பு ஏற்பட்டது.

சற்று முன் அந்தரங்க மண்டபத்திலிருந்து அவனுக்கு விடை கொடுத்து அனுப்பிய மகா மண்டலேசுவரர் இப்போது இந்தப் பாதாள மண்டபத்துக்குள் நின்று கொண்டிருந்தார். அவருடைய திருப்புதல்வி குழல்மொழி நாச்சியார் இருந்தாள். இருட்டில் கொள்ளி ஏந்தி நிற்கும் குட்டைப் பேய் போல் நாராயணன் சேந்தன் தீபத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான். இவர்கள் மட்டும் இங்கே இப்போது இருந்திருந்தால் தளபதிக்கு ஆச்சரியம் ஏற்பட்டிருக்கக் காரணமே இல்லையே!

வடதிசை மூவரசருக்கும், அரசபாரத்தைத் தாங்கும் சுமைக்கும், பயந்து சிங்களத் தீவுக்கு ஓடி விட்டதாக நினைக்கப்பட்ட குமார பாண்டியன் இராச சிம்மனும் இங்கே இவர்களோடு நின்று கொண்டிருந்தான்.

சுவரோரமாக நின்று கொண்டிருந்த தளபதிக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது!

(தொடரும்)



வலம்புரி பிக்சர்ஸ் தயாரிப்பான இந்தப் படத்தின் ஆரம்பத்தில்,

"ஆடியபாதம் மன்றாடிய பாதம்
ஆடிய பாதம் நின்றாடிய பாதம்"

என்ற சுவாமி ராமலிங்கப் பெருமானின் தீந்தமிழ்ப் பாடல், இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் குரலில், உள்ளம் குளிர, உடல் புல்லரிக்க ஒலிக்கிறது. அந்தப் பாடலுக்கேற்ற பக்திபரவசத்துடன் நாகையா நடராஜன் சன்னதியில் நடிக்கிறார்.

எந்த விஷயத்திலும் ஆரம்பம் நல்லமாதிரி இருந்து விட்டால் அதுவே விசேஷம் என்று கொள்ள வேண்டியதுதான். சில கைத்தறி ஆடைகளில் இரு தலைப்புகளிலும் நெசவு தரம் உயர்ந்து விளங்கும். தலைப்புக்கு அப்புறம் ஆடையில் உடலின் நெசவு ஒரு தினுசாய்த் தான் இருக்கும். எல்லோரும் தலைப்பைத் தானே பார்க்கிறார்கள்! பாத்திரத்தின் வெளிப்புறம் பளிரென்று துலக்கப்பட்டிருந்தால் சரிதான். அதன் உட்புறத்தை அப்புறம் தானே பார்க்கிறார்கள்!

படத்தின் கதாநாயகன் ஜெமினி கணேசன்; கதாநாயகி சாவித்திரி என்றதுமே கதையின் முடிவு திருமணம் என்று தமிழ்ப்பட ரசிகர்கள் முடிவுகட்டி விடுவார்கள்.

ஆங்கிலம் படிக்காத ஏழை இசைக்கலைஞன் நடராஜனாக வருகிறார் ஜெமினி கணேசன். அந்த இசைச் செல்வத்தை உபயோகப்படுத்தி வாழ்க்கையை நடத்த முடியாதபடி பூர்விக சாபம் குறுக்கிடுகிறது. அந்தச் சாபத்துக்கு நடராஜன் அதிகமாகப் பயப்படவில்லை. அவன் அண்ணா சிதம்பரம்தான் சதாசர்வ காலமும் பயந்து நடுங்குகிறான்.

சிதம்பரமாக வரும் நாகையாவுக்கு, வறுமையில் உழலவும், சாபத்தை நினைந்து பயப்படவும், குடும்ப வறுமையைப் போக்கத் தனக்குத் தெரியாமல் இசைக்கலையைப் பயன்படுத்திய தம்பிக்காகத் தன் உயிரைத் துறக்கவும் நேரிடுகிறது. நாகையாவின் பிரமாதமான நடிப்புகளை முன்பு பல படங்களில் பார்த்தவர்கள், இந்தப் படத்தில் அவருடைய நடிப்பைக் கண்டு அதிசயப்படுவதற்கு விசேஷமாக ஒன்றும் இல்லை.

டாக்டர் தாமோதரம் சிதம்பரத்தின் பால்ய நண்பர். நடராஜனை அவரிடம் அனுப்பி, அவனுக்கு ஏதாவது ஒரு வேலை பண்ணி வைக்கும்படி எழுதுகிறான்.

டாக்டரின் மகள் வாணி ஒரு புதுமைப்பெண். தன் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருக்கும் நடராஜன் பட்டிக்காட்டு மனிதனாயிருந்தாலும் அவனிடம் பல நற்பண்புகளும் குண விசேஷங்களும் இருப்பது கண்டு அவனைக் காதலிக்கிறாள்.

(இந்த இடத்தில், ராணி மயங்கும்படி நடராஜனிடம் எந்தக் குணாதிசயத்தையும் நாம் காண முடியவில்லை. ஆனால் அது கணவன் மனைவி விவகாரம். சாவித்திரி தம் கணவனைக் கண்டு மயங்குவதை யார் தவறாகச் சொல்ல முடியும்?)

சாவித்திரி காதலிக்கிறார், காதலனைப் பிரிந்து விம்முகிறார், கடைசியில் மீண்டும் அவனுடன் சேர்ந்து திருமணம் புரிந்து கொள்கிறார். அவ்வளவுதான்.

பட்டணத்துக்குப் புதிதாய்ப் பட்டிக்காட்டிலிருந்து வந்த நடராஜன் எப்படி நடந்து கொண்டிருப்பான் என்பதைப் பார்க்க வேண்டுமானால் ஜெமினி கணேசனைத்தான் பார்க்க வேண்டும். அந்தக் கட்டங்களில் அவர் நன்றாய் நடித்திருக்கிறார்.

டாக்டர் தாமோதரமாக எஸ். வி. ரங்காராவ் நடிக்கிறார். ஒரே பெண்ணின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதில் மிகமிக முற்போக்காயிருக்கிறார். பட்டிக்காட்டு யுவன் நடராஜனை வாணி காதலிப்பதும் மணந்து கொள்ளுவதும் அவருக்குச் சிறிதும் குறைவாகவே தோன்றவில்லை. அவர் நடிப்பிலும் விசேஷமாகக் கூற நமக்கு ஒன்றும் தோன்றவில்லை.

காந்தன்

நடராஜனின் ஊராகிய உமையாள்புரத்திலிருந்து ஆடம்பரம் என்பவன் பட்டணத்துக்குப் பிழைப்பைத் தேடிப் புறப்படுகிறான். தங்கவேலு அந்தப் பாகத்தை ஏற்றிருக்கிறார். ரயில்வே ஸ்டேஷனிலேயே முல்லை என்னும் இளம்பெண் ஆடம்பரத்தின் வாழ்வில் குறுக்கிடுகிறாள். அந்தப் பெண் நடராஜனை அண்ணனாகக் கொள்கிறாள்; அதனால் நடராஜன் மீது பொறாமை உண்டாகிறது.

முல்லையாக வரும் எம். என். ராஜம் நன்றாக நடித்திருக்கிறார். தங்கவேலுவுடன் தெருவில் சூதாட்ட விளையாட்டுக் கட்டத்தில் ''வை ராஜா வை'' என்னும் பாட்டை ராஜம் பாடாமல் இருந்திருந்தால் தரம் குறையாமல் இருந்திருக்கும்.

இந்தப் படத்தில் எந்த நடிகரும் பிரமாதமாய் நடிக்கவில்லை என்பதே விசேஷம்தான்!

திரைக்கதைக்கும் சாதாரணமாகப் பத்திரிகைகளில் வெளியாகும் கதைகளுக்கும் உள்ள வித்தியாசத்தைத் திரைக்கதை ஆசிரியர்கள் உணர வேண்டும். படிப்பதற்கு நன்றாயிருக்கும் கதை மேடையில் நடிப்பதற்கு நன்றாயிருக்குமோ என்பதை நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். திரைக்கதைப் பாத்திரங்களை ஏற்றுக்கொண்டு நடிக்கப் போகும் நடிக, நடிகையர்களின் திறமைக்கு ஏற்பக் கதையைச் சுவாரஸ்யமாக அமைக்க வேண்டும். இந்தப்படத்தை டைரக்ட் செய்திருப்பவர் ஏ. பீம்சிங்.

திருமணத்தின் திரைக்கதையையும் வசனத்தையும் வலம்புரி சோமநாதன் எழுதியிருக்கிறார்.

இந்தப் படத்தில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாயமைந்திருக்கும் காட்சி கோபிகிருஷ்ணா—கமலா லக்ஷ்மணன் புரியும் அற்புத நடனம்தான். அது வர்ணக்காட்சியா யமைந்திருப்பது மிகவும் கவர்ச்சியா யிருக்கிறது. கமலா, கோபிகிருஷ்ணன் இருவரிலும் யார் நடனம் உயர்வு என்று கூற முடியவில்லை. ஹஸ்த அபிநயங்களிலும், முக பாவங்களிலும் இருவரும் நிகரற்று விளங்குகிறார்கள்.



'மங்கியதோர் நிலவினிலே...' என்ற பாரதியார் கவிதையை ஜெமினி கணேசனுக்காக டி.எம். சௌந்தரராஜன் அற்புதமாகப் பாடியிருக்கிறார். அந்த ஒரு பாட்டைக் கேட்டதும் எத்தனையோ நல்ல பாட்டுக்களைக் கேட்டது போன்ற ஓர் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. அதுதானே நல்ல கவிதையின் இலக்கணம்!

நடராஜனுக்கு உடம்பு சரியில்லையென்றதும் டாக்டர் தாமோதரம் தாம் போகாமல் மகனை மட்டும் அனுப்புவது வேடிக்கையாய்த்தான் இருக்கிறது! இந்த மாதிரி இடங்களில் திரைக்கதையின் உண்மை நிலை கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது டைரக்டரின் பொறுப்பாகும். ஹாஸ்யப் பகுதியில் சிரிப்பதற்கு ஒன்றும் இல்லாவிட்டாலும், மற்றப் பகுதிகளிலாவது ரஸிப்பதற்கு இப்படி ஏதாவது சில காட்சிகள் வேண்டியதுதான்!

''தங்கநிலவில் கெண்டை இரண்டு
துள்ளித் திரிவதுண்டோ...''

என்ற பாடலைக் கண்ணதாசன் நன்றாக இயற்றியிருக்கிறார்; சிறந்த பின்னணிப் பாடகர்களான ஏ. எம். ராஜாவும் ஜிக்கியும், ஜெமினி கணேசனுக்காகவும் சாவித்திரிக்காகவும் அழகாகப் பாடியிருக்கிறார்கள்.

பலப்பல நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, ''திருமண''த்தில் வரும் காதலர்களுக்குச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் கடைசியில் திருமண வைபவம் சிறப்பாக நடந்து விடுகிறது.

இந்தப் படத்தைப் பற்றி விரிவாக விமர்சனம் செய்யப் புகுந்தால், ஒவ்வொரு காட்சியும் அவசியம் இல்லையெனத் தோன்றும்; காரணம், கதை மிக மிகச் சாதாரணக் கதை—எந்தப் பாத்திரமும் உணர்ச்சியுள்ள பாத்திரமாக அமையாதது ஒரு துரதிர்ஷ்டம்.





அவர் 'ஸான்ஃபோரைஸ்ட்' அடையாளமுள்ள துணி மட்டும் வாங்கியிருந்தால்...

உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கிப்போகும் தொல்லையை ஒழியுங்கள்! நீங்கள் பருத்தித் துணியோ அல்லது ரெடிமேட் உடைகளோ வாங்கும் பொழுது, அவைகளில் 'ஸான்ஃபோரைஸ்ட்' ('Sanforized') அடையாளமிருக்கிறதாவென கவனிக்கத் தவறாதீர்கள். இந்த அடையாளமிடப்பட்ட துணிகளில் தைய்த்த உடைகள் அநேக சலவைகளுக்குப் பிறகும் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒரு பொழுதும் சுருங்காது!

லேபிளில் 'ஸான்ஃபோரைஸ்ட்' அடையாளம் இருந்தால் உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒரு பொழுதும் சுருங்காது!

'ஸான்ஃபோரைஸ்ட்' என்ற சிறந்த ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட்மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுவட் பீபாடி அண்டு கோ., இன்கார்ப்பரேட்டட் (அமைக்கப்பட்ட பெற்றுப்புடன் யு.எஸ்.ஏ.வின் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த கம்பெனியின், சுருங்காது என்பதற்கான அதன் நிபந்தனைகளுக்குட்பட்டுச் சோதிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்ஃபோரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விபரங்களுக்கு: 'ஸான்ஃபோரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரீன் டிரைவ், பம்பாய்-2

"ராமா!"


கௌசல்யை கூப்பிட்டாள். ராமரும் மெதுவாக வந்தார்.

"என்னம்மா?"

"இவ்வளவு நேரம் எங்கேயடா சென்றிருந்தாய்?" எவ்வளவு நேரம் உனக்காகக் காத்துக் கொண்டிருப்பேன்?"

"காலையிலிருந்து இங்குதானே இருந்தேன்? சுமந்திரர் ஏதோ வேலையாகக் கூப்பிட்டார். அதற்காகச் சென்றிருந்தேன். இந்தப் பிரிவு கூடச் சகிக்கவில்லையா?" என்று ரகுநந்தனன் சிரித்தபடி கேட்டார்.

கைகேயி



இதற்குள் சுமித்திரை அங்கு வந்தாள். அவளுடன் அவள் அருமைக் கண்மணிகளான லக்ஷ்மணரும், சத்ருக்னரும் வந்தனர். லக்ஷ்மணர் சகோதரனின் பிரசன்ன வதனத்தைப் பார்த்து, "அண்ணா! என்ன குதூகலம்?" என்று கேட்டார்.

"அம்மாவைப் பார், லக்ஷ்மணா! ஒரு நிமிடம்கூட நான் விட்டுப் பிரியக் கூடாதாம். மீண்டும் வன வாசத்துக்குக் கிளம்பி விடுவேனோ என்ற பயம்!"

"இதோ பாருங்கள், அண்ணா! இப்பொழுது நீங்கள் வனவாசம் சென்றால் நான் தான் உங்களுடன் வருவேன். லக்ஷ்மணனை மறுபடியும் இழுத்துக் கொண்டு செல்லக் கூடாது. அண்ணன் சேவையில் எனக்கும் உரிமை உண்டு" என்றார் சத்ருக்னர்.

"ஆமாம்! வனவாசத்தில் லக்ஷ்மணர் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து விட்டார். கால் தேய, உடம்பு நெகிழ எங்கள் காரணமாக எவ்வளவு கஷ்டப்பட்டு விட்டார்? தானாக இவ்வளவு கஷ்டங்களை ஏற்றுக் கொண்ட அவரை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்!" - இடையில் சீதை கூறினாள்.

"போதும் மன்னி, புகழுரை. உங்கள் சகிப்புத் தன்மைக்கு இதெல்லாம் ஈடாகுமா? அசோக வனத்தில் நீங்கள் எவ்வளவு இம்சையைப் பொறுத்திருப்பீர்கள்! மீண்டும் வனவாசம் போனால்..." என்று லக்ஷ்மணர் கூறிக் கொண்டிருக்கும்போதே சுமித்திரை அவருடைய வாயைப் பொத்தினாள்.

பிறகு, "பிள்ளை மனம் கல் என்பது சரியாகத்தான் இருக்கிறது. நீயும் ராமனும் சீதையுடன் காட்டில் இருந்தபோது கௌசல்யை பட்டபாடு உங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள் வரும் வரை அவர் உயிருடன் இருக்கவேண்டுமென்று நான் தவித்துக் கொண்டிருந்தேன். 'மறுபடியும் வனவாசம் போனால்...' என்று கிளப்புகிறீர்கள். பெற்ற மனம் எப்படிச் சஞ்சலப்

படும் என்பதை நீங்கள் எங்கே அறியப் போகி றீர்கள்?'' என்றாள் சுமித்ரை. அந்த அனு பவம் அவளுக்கு நிறைய உண்டு.

'' அம்மா! மன்னித்து விடுங்கள். இனிமேல் அதைப்பற்றிப் பேச்செடுக்காமல் பார்த்துக் கொள்கிறேன் '' என்றார் ரகுராமன்.

வனவாசம் முடிந்து ஸ்ரீராமன் அயோத் திக்கு அரசனாக இருந்த சமயம் அது. ராம ராஜ்யம் வானளாவிய புகழுடன் ஓங்கி நின் றது. மக்கள் அனைவரும் அரசனுடைய முக தரிசனத்தைத் தங்கள் புண்ணியமாகக் கருதி வந்த காலம் அது. பிரஜா உரிமைக்கும், ஜன தந்திரத்துக்கும் அவசியமே இல்லாமல் இருந்தது. குறைவும், குறைபாடும் இருந்தா லல்லவோ உரிமைக்குப் போராட வேண்டும்?

கௌசல்யை ராமனை விட்டு ஒரு நிமிடம் கூடப் பிரிய முடியாமல் தவித்தாள். எவ் விதம் இவள் பதினான்கு வருடங்கள் ராமனை விட்டுப் பிரிந்து உயிருடன் இருந்தாள் என்று அனைவரும் வியந்தனர்.

மாலை உத்தியான வனத்தில் யாவரும் கூடுவர். உல்லாசப் பொழுது போக்கு. நடந்தது, நடப்பது, நடக்கப் போவது எல்லா வற்றையும் பற்றிப் பேசிக் கொண்டிருப் பார்கள். மருமக்கள் புடைசூழ மூன்று ராணி களும் கொம்மாளத்துடன் பேசுவார்கள். கைகேயியிடம் இன்று அவர்களுக்குப் பேச முடி யாத துவேஷமில்லை. சீதை, மாண்டவி, ஊர்மிளை, சுருதகீர்த்தி அனைவரும் வித்தியாச மில்லாமல் பழகி வந்தனர். சகோதரர்களும் ராமனுக்குப் பணிவிடை செய்வதில் போட்டி யிட்டு முன்வந்தனர்.

'' சுமித்ரை! இந்த லக்ஷ்மணன் இன்னும் ஏன் ராமனைச் சுற்றிச் சுற்றி வருகிறான்? பாவம், பதினான்கு வருடங்கள் அவனையே நினைத்து உருகி உள்ளம் தவித்துப் போனாளே, அந்த ஊர்மிளையுடன் உல்லாசமாக எங்கே யாவது போய் விட்டு வரக்கூடாதோ?'' என் றாள் கௌசல்யை பரிகாசமாக.

''சரிதான், மாண்டவி மன்னியையே உல் லாசப் பிரயாணத்துக்கு அவள் கணவர் அழைத்துச் செல்லவில்லையே? அவள் தியா கத்தைவிட என் தியாகம் பெரியதா? கணவர் அவளை உதாசீனம் செய்து விட்டபோதும் பொறுமையைக் கடைப்பிடித்து வெற்றி கண் டவளாயிற்றே!'' என்று மாண்டவியைப் புகழ்ந்தாள் ஊர்மிளை.

ஆனால் மாண்டவியோ, ''ஊர்மிளா! என் கணவரைப் பழி கூறாதே. அவர் உதாசீனத் துடன் இருந்ததும் நல்லதுதான். அவர் அரு கிலேயே இருந்து நான் பணிவிடை செய்யும் போது அந்த உதாசீனந்தான் அவரைச் சுற்றி நெருப்பு போலிருந்து அவர் விரதத் தைக் காப்பாற்றியது. இல்லாவிடில் விரதத் துக்குப் பங்கம் வராமலிருக்க அவரை விட்டு





பெற்ற பெருமை

எஸ். ரங்கநாயகி

நான் பிரிந்திருக்க வேண்டி யிருந்திருக்கும்; எல்லாம் நல்லதுக்கே என்று நாம் நினைத்து விடுவோம்'' என்றான். பதிபக்தியில் அவளுக்கும் உயர்ந்த ஸ்தானம் உண்டு.

'' ஆமாம்! அப்படித்தான் நினைக்க வேண்டும். லக்ஷ்மணனை உள்ளம் உருக ஆசிர்வதித்துச் சுமித்ரை அனுப்பிய போது 'இவளுக்குப் புத்திர பாசமே இல்லையோ!' என்று வியந்தேன். லக்ஷ்மணன் சென்றதும் நல்லதுதான். ராவணனை அழிப்பதில் எவ்வளவு உதவியிருக்கிறான் அவன். சுமித்ரை உள்ளத்தின் மேன்மை பிறகுதான் பிரகாசிக்கத் துவங்கியது. அருமைப் புதல்வனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு, எல்லாரையும் இன்முகத்துடன் தேற்றிய அழகு ஒன்றே போதும். அவளைப் பெற்றவள் கோடிப் புண்ணியம் செய்திருக்க வேண்டும்'' என்றாள் கௌசல்யை.

இதற்குள் பரதன் அங்கு வந்தார். அவரைப் பார்த்த சுமித்ரை, '' போதும், உங்கள் புகழுரைகள். அத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். புகழுக்கு முக்கிய பாத்திரம் பரதன் தான். ராமனோ பித்ருவாக்ய பரிபாலனத்துக்காக வனவாசத்தை மேற்கொண்டான். லக்ஷ்மணனுக்கு ராஜ்யம் கிடைக்கவில்லை. ஆனால் ராஜ்யம் தன் கைக்கு வந்தும், அந்த ராஜ்யலக்ஷ்மியை உதறித் தள்ளிவிட்டு பரதன் ராமனை அழைத்துவர ஓடினானே, அந்தத் தியாகத்துக்கு ஒப்பாக உலகில் ஒன்றுமே இல்லை'' என்றாள்.

''ஆமாம்! தந்தையின் சொல்லைக் காப்பாற்றுவதை விடத் தமையனுக்காகத் தியாக வாழ்க்கையை மேற்கொண்ட உத்தமன் என்று பரதன் புகழடைவான். என் பாதுகைகளையே ராஜ்யம் ஆளச் செய்து விட்டானே, இந்த மாயவன்!''—ராமர் புகழுரை கூறினார்.

பரதன் காதுகளை இறுகப் பொத்திக் கொண்டார். ''அம்மா! அண்ணா! இப்படி நீங்கள் புகழ்வது எனக்குத் துளியும் சகிக்கவில்லை. எல்லாக் கொடுமைகளுக்கும் ஆதி காரணம் நான். அப்படியிருக்கும்போது என்னைப் புகழாதீர்கள்'' என்றார்.

ராமர் சட்டென்று பரதனுடைய வாயைப் பொத்தினார். ''நல்ல விஷயமானால் கடந்த காலத்தைப் பற்றிப் பேசு. இல்லாவிடில் பேசாதே'' என்று பரதனுடைய காதில் கூறினார். பிறகு ராமனுடைய பார்வை சட்டென்று கைகேயியின் மீது விழுந்தது. இவ்வளவு நேரமாக அவள் ஒரு வார்த்தை கூடக் கூறவில்லையே!

கைகேயி ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். அவள் பதினான்கு வருடங்களுக்கு முன்பு, நடுவில் சில நாட்கள் தேவர்களின் கைகளில் சிக்கியிருந்த கைகேயி இல்லை இப்பொழுது. அவள் தன் செய்கைக்கு மனம் நொந்து கொண்டிருந்தாள். இப்பொழுது கௌசல்யை, சுமித்ரை மற்றும் புதல்வர்—மருமக்களிடம் இனிமையாகப் பழகுபவளாக ஆகி விட்டாள். தினமும் அவள் கலகலப்பாகப் பேசுவாள். இன்று அவள் பேசவில்லை.

என்ன பேச முடியும்? எல்லோரும் தங்கள் தங்கள் புகழைக் கேட்டு ஆனந்தம் எய்திக் கொண்டிருந்தனர். அவள் என்ன கூற முடியும்? அவளுக்குப் புகழ் ஏது? தூஷணை தான் மிஞ்சும். இதோ, பரதனே துடுக்காக ஒரு வார்த்தை சொல்லி விட்டானே! அவள் வாழ்க்கை வீணாகி விட்டது. அவள் கண்களில் நீர் துளித்தது.

ராமன் அவளிடம் சென்று, '' அம்மா!'' என்றார். ஆனால் சட்டென்று அவள் அங்கிருந்து வெளியே கிளம்பிச் சென்றுவிட்டாள்.

ராமர் மற்றவர்களைப் பார்த்து, ''புகழுரைப் பேச்சில் அநியாயமாக அன்னை கைகேயியின் மனத்தைப் புண்படுத்தி விட்டீர்களே!'' என்றார்.

* * *

இந்திர சபையில் ஒரே கோலாகலம். இனிமேலும் ஏன் ஆனந்தம் இருக்காது! இனி இராவணனைப் பற்றின சிந்தனை இல்லை.

இந்திரன் கொலுவில் வீற்றிருந்தான். அவன் முகத்தில் மந்தகாசம். அவனைச் சுற்றி தேவர்கள் நின்று கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் சபையில் பளிச்சென்று பிரகாசம் தோன்றியது. தேவ மாதுகள் நாட்டியமாடிக் கொண்டே உள்ளே நுழைந்தனர். அவர்களது பட்டாடைகள் சலசலத்தன. உடலை அலங்கரித்த ஆபரணங்கள் நாற்புறமும் மின்னலை வாரி வீசின. 'ஜலங்...ஜலங்...' எனச் சதங்கைகள் சப்தமிட, வீணை நாதம் இசைக்க, நாட்டியம் துவங்கி விட்டது.

'ஐயோ! இடிமென்று இதென்ன?' சபையே ஆட்டம் கண்டது. பூகம்பத்தால் கிடுகிடுத்தது. நாட்டிய அரங்குகள் தூக்கி எறியப்பட்டன. அப்ஸரஸுகள் கீழே தள்ளப்பட்டனர். வீணைத் தந்திகள் அறுந்து விழுந்தன. இந்திரன் தலை சுற்றியது.

சுற்றும் முற்றும் பார்த்தான் இந்திரன். இதற்குக் காரணம் யாரோ ஒருவருடைய தவத்தின் வேகம்தான் என்பதை அவன் அறிவான். எந்த ரிஷி இவ்வளவு கடுமையான தவத்தில் இறங்கி விட்டார்?

ராஜ வனத்தில் ஒரு ஸ்திரீ கடுமையான தவத்தில் ஈடுபட்டிருந்தாள். அவள் கைகேயி.

உடனே ஊர்வசியைக் கூப்பிட்டான் இந்திரன். ''ஊர்வசி! முதலில் கைகேயியின் தவத்தைக் கலைக்க வழி செய். நம் சபைக்கு ஏதோ கேடு வரவே அவள் தவம் செய்கிறாள். இல்லாவிடில் சபை இவ்வளவு ஆட்டம் ஆடாது'' என்றான்.

ஆனால் ஊர்வசி கிளம்பவில்லை. ''சுவாமி! மன்னிக்க வேண்டும். ரிஷிகளின் தவத்தைக் கலைக்க எங்களைப்போன்ற பெண்களை அனுப்புவது நியாயம். ஆனால் ஒரு பெண்ணின் தவத்தை என்ன உபாயம் செய்து நாங்கள் கலைக்க முடியும்? அதனால் நான் போக வழி இல்லை'' என்று கூறி விட்டாள்.

ரம்பையும் இந்த வேலைக்குத் தான் தகுதியில்லை எனக் கூறிவிட்டாள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணம் கூறினர். தேவேந்திரன் கோபமடைந்து தானே புறப்பட்டான்.

கைகேயி கண்களை இறுக மூடித் தியானத்தில் ஆழ்ந்திருந்தாள்.

'' தேவி!''

கைகேயி கண்களைத் திறக்கவே யில்லை.

மறுபடியும் இந்திரன், ''தேவி! மன்னிக்க வேண்டும்'' என்று குரல் கொடுத்தான்; கைகேயி மெதுவாகக் கண்களைத் திறந்தாள்;


சௌகரியமும்
திறமையும்
தருமாறு அமைக்
கப்பட்டுள்ளது.
பிரபாத்
பிராடெக்ஸ்
" இந்தியாவில் முதன்மை
யானவை, இன்றும்
முதல்தரமானவை. "
பிரபாத் (ஸ்டவ் & லாம்ப்) பிராடெக்ட்ஸ் கம்பெனி, பிரைவேட் லிட்.


மதுபாலாவின்
அழகின்
இரகசியம்
கோத்ரெஜ்
வத்னி*
சாவி மார்க்
VATNI
INDIA'S POPULAR SOAP
வத்னி
VATNI
100% ஸ்வதேசி
★ "தாய்நாடு"
என்று அர்த்தங்கொண்ட 'வதன்' என்ற
வார்த்தையிலிருந்து திரிபு பெற்றது.


மேலும்
மலிவானது!
குடும்பம்
முழுவதற்கும்
ஓரே டால்க்
PROTEX
All Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லட் பவுடர்
ஜயன்ட்சைஸ் அழகிய
பப்புடன் கிடைக்கும்!

இந்திரனைப் பார்த்ததும் ஒரு வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இந்திரன், ''தேவி! இந்த இந்திர சபையே அழியும்படி தாங்கள் தவம் செய்ய நாங்கள் செய்த குற்றம்தான் என்ன? கிருபை புரிந்து கூற வேண்டும்'' என்றான் பணிவாக.

''காரணம் உனக்குத் தெரியும். உங்கள் இந்திர சபையையே எரித்துப் பழிக்குப் பழி வாங்கப் போகிறேன்'' என்றாள் கைகேயி கோபக்கனல் தெறிக்க.

''தாயே! கோபிக்கக் கூடாது. புரிந்த குற்றத்தைக் கூறினால் நாங்கள் மன்னிப்பு கேட்கிறோம்!''

''மன்னிப்பு அடைந்து, மறையக் கூடிய குற்றம் அல்ல...என் கணவர் நிச்சயித்த ராமனது பட்டாபிஷேக வைபவம் வரை என்றாவது ராமனை நான் வெறுத்ததுண்டா? கணவரிடம் என்றாவது நிலை தவறி நடந்ததுண்டா?''

''இல்லை, அப்படிப்பட்ட குற்றம் உங்களிடம் இருந்ததே இல்லை'' என்றான் இந்திரன் நாத் தழுதழுக்க.

''அப்படியானால் உலகத்தார் என்னை நிந்திக்க, ராமனை வனத்துக்கு அனுப்பவும், அன்புக் கணவரை சுவர்க்கத்துக்கு அனுப்பவும் நானே காரணம் என்று இப்பொழுது உலகமும், வருங்காலச் சந்ததிகளும் தூற்றும் பழிக்கு என்னை ஆளாக்கியது யார்? என் இல்லத்திலேயே என்னிடம் எல்லோருக்கும் வெறுப்பு. ஒரு புகழுரைக்கு நான் பாத்திரமில்லை. இதற்கெல்லாம் மூல காரணம் என்ன?'' என்று மிகுந்த கோபத்துடன் கேட்டாள் கைகேயி.

''அம்மா! இதற்காகவா இவ்வளவு கடுந் தவம்? உங்கள் வாக்கினால் எவ்வளவு பெரிய காரியம் சித்தியாயிற்று, தெரியுமா? உங்களுடைய இந்த மகத்தான உதவியை நாங்கள் மறக்கவே முடியாது.''

''உங்கள் வாழ்க்கையை வளமாக்க சரஸ்வதி தேவியின் மூலம் என்னைக் கைப்பொம்மையாக்கிக் கொண்டீர்கள். என் நாக்கையும் வாக்கையும் புரட்டி என்னைக் கொடியவளாக்கி என்னை அதள பாதாளத்தில் தள்ளிவிட்டீர்கள். என் மனத்தை மாற்றிப் புத்தியைப் பிசகச் செய்து என் அருமை ராமனைக் காட்டுக்கு அனுப்பவும், அதன் காரணமாக என் நாதனை இழக்கும்படியும் செய்தீர்கள். என் வாழ்வைப் பாலைவனமாக்கிய உங்கள் குலத்தை நாசம் செய்யாமல் நான் விடப் போவதில்லை'' என்றாள் கைகேயி. பிறகு கண்களைக் கெட்டியாக மூடிக் கொண்டாள்.

இந்திரனுக்குக் கைகேயியைச் சமாதானப் படுத்தும் வழி புலப்படவில்லை. அவன் லக்ஷ்மிப் பிராட்டியைச் சரணமடைந்தான்.

* * *

எதிரில் மின்னலைப் போன்ற ஒளி கைகேயியின் கண்களைக் கூசச் செய்தது. மெதுவாகக் கண்களைத் திறந்தாள் கைகேயி. தேஜோமய சொரூபத்துடன் ஆதிலக்ஷ்மி நிற்பதைப் பார்த்து அவள் மனம் பூரித்தது.

''கைகேயி! இதென்ன கோலம்! அரண்மனைப் போகங்களைத் தியாகம் செய்து விட்டு இந்தத் தவநிலையில் ஏன் அமர்ந்து விட்டாய்?'' என்று கேட்டாள் ஆதிலக்ஷ்மி.

''சகல போகங்கள் இருந்தும் மனத்தில் நிம்மதியில்லை. தங்கள் தங்கள் மேன்மைகளைப் பற்றி ஒவ்வொருவரும் கூறிக் களிக்கும் போது, நான் என்னைப் பற்றி என்ன கூறிக் கொள்ள முடியும்? என் வாழ்நாள் முழுவதும் வீணாகிவிட்டது. தவத்தைத் தவிர இனி எனக்கு வேறு வழி ஏது?'' என்று நெஞ்சடைக்கக் கூறினாள் கைகேயி.

''கைகேயி! தன்னைப் பற்றிய மேன்மையை அறியாதவன் உலகில் உண்மையில் மேன்மையுடையவன் என்பதை இன்னும் நீ அறியவில்லை போலும். இரவின் தோற்றம் பகலுக்கு மேன்மை கொடுக்கவும், வெய்யிலின் கொடுமை நிழலுக்குப் புகழ் கொடுக்கவும், துக்கத்தின் அனுபவம் சுக அனுபவத்துக்கு வழிகாட்டிக் கொடுக்கவும். கெட்ட 'பாவ'



ங்கள் நற்பாவங்களை எடுத்துக் காட்டிக் கொடுக்கவும் இருக்கின்றன......''

''அதனால்......?''

''கைகேயி! ஒருவருடைய கஷ்டம் மற்றவர்களுக்குச் சுகம். இது உலக நியதி. கைகேயி, ரகு குலத்தில் நீ பெண்ணின் பெருமையை எடுத்துக் காட்டி விட்ட உத்தமி.''

''ஜகந்நாயகி, இது பரிகசிக்க நேரமா?''

''இது விளையாட்டு வார்த்தையல்ல, கைகேயி! நீ வருங்காலக் கவிகளுக்கு ஒரு அற்புத சிருஷ்டி. உன் வாக்கினில் வந்த கொடுமை வார்த்தைகள் உன் வம்சத்துக்குப் புகழ் தேடித் தந்தவை. அக் கொடிய வரங்களை நீ கேட்டிராவிடில் உன் அருமை மைந்தன் பரதன், சகோதரனுக்காகச் சிறந்த தியாகத்



"சபையில் வருபவர் சரஸ்வதி ஆடுகிறார் என்பது சரி. இப்படிப் புட்பால் ஆடினார் என்று ஒரு புராணத்திலேயும் சொன்னதாகத் தெரியவில்லையே, சார்!"

தைச் செய்து காட்டிப் பெரும் புகழ் அடைந்திருக்க முடியாது......"

கைகேயியின் மனத்தில் புத்திர பாசம் பொங்கெழுந்தோடியது.

பித்ருவாக்கிய பரிபாலனத்துக்கு வனம் ஏகிய ராமன் இப்பொழுது அடைந்துள்ள கீர்த்தியை அடைந்திருக்க முடியாது. சகோதரனைப் பின்பற்றி மங்காப் புகழ் அடைந்துள்ள லக்ஷ்மணனின் பெயரைக்கூட ஒருவரும் அறிந்திருக்க முடியாது......"

கைகேயியின் கண்களில் அன்புப் பிரவாகம் தேங்கி நின்றது. உள்ளத்தில் குதூகலம் நிரம்பி வழிந்தது.

'எல்லாவற்றுக்கும் மேலாக உன் கணவருக்கு உன் கொடிய செய்கையால் புகழ் கிடைத்து விட்டது. புத்திரனை நினைத்து நினைத்துப் பிராணனை விட்டதன் காரணமாக, ரகுகுலத்தில் பிறந்த அரசர்களை விட அவர் புகழ் ஓங்கி நிற்கிறது. இவ்விதம் கணவருக்கு உண்மைப் பத்தினியாகவும், குழந்தைகளுக்கு உண்மைத் தாயாகவும் பெருமை தாங்கி நிற்கும் நீ ஏங்குவதற்குக் காரணமே இல்லை. தங்கள்மீது எல்லாக் கஷ்ட பாரங்களையும் சுமந்து, கணவருக்கும் புத்திரர்களுக்கும் பெருமை தேடித் தருவதில்தானே பெண்ணின் பெருமை நிற்கிறது? தங்களைப் பற்றிய புகழைச் சிறிதும் விரும்ப மாட்டார்கள் பத்தினிப் பெண்கள்."

ஆதிலக்ஷ்மியின் சொற்களைச் சிந்தித்துப் பார்த்தாள் கைகேயி. அவள் ஒருத்தி பெற்ற அவச் சொல்தானே அவள் குடும்பத்தாருக்கு அளப்பற்கரிய புகழை அருளியது? பலர் பெருமைக்கு ஒருவர் தியாகம் செய்வது—அதுவே அவர்களுக்குப் பெருமையாக முடியும்.

இப்படி எண்ணிய கைகேயியின் மனம் சாந்தமடைந்தது. அவள் நேராகக் கலைவாணியின் இருக்குமிடத்தைத் தேடி நகர்ந்தாள்.

கைகேயியைத் தன்னுடைய இருப்பிடத்தில் பார்த்தபோது கலைமகள் சற்று அதிசயித்து விட்டாள்.

"தேவி!" என்றாள் கைகேயி.

"என்ன வேண்டும் கைகேயி? இனி ஒருவர் தாக்கிலும் வீற்றுக் கொடுமைச் சொல் கூறிப் பழிக்கு ஆளாக்க விரும்ப மாட்டேன்: நீ படும் கஷ்டம் என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை."

"இல்லை. தாங்கள் நினைப்பது தவறு: இனி என் உள்ளம் கஷ்டமடையாது. தேவி! இந்தச் சூரிய வம்சத்து நிகழ்ச்சிகள் கவிதை உருவில் உருவெடுக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். முக்கவிகள் இந்தக் காவியத்தை வரையும் போது தாங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்!"

"என்ன வேண்டும் கைகேயி?"

"என்னைப் பற்றின வார்த்தைகள் வரும் போது சற்றுக் கடுமையான பதங்களைப் பிரயோகிக்க வேண்டும்."

"என்ன...?" சரஸ்வதி மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஆமாம்! என் மீது கடுமை அதிகம் ஆக ஆக என் கணவர், என் கண்மணிகள் ஆகியோரின் புகழ் அதிகமாகும். இருட்டு அதிகமானால் வெளிச்சத்தை அதிகம் எதிர்பார்க்கிறோம். பயங்கரமான கறுப்பு மேகங்கள், சீதள ஜலத்தை அதிகம் பொழியும். இந்த ஒரு உபகாரம் மட்டும் நீங்கள் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்."

திரும்பிச் செல்லும் கைகேயியை வாணி ஆச்சரியத்துடன் நோக்கினாள்.

• • •

அன்றைய தினம் அயோத்தியின் அரண்மனையில் எங்கும் சோகம் நிரம்பியிருந்தது: கைகேயிக்கு இன்று அந்திம தினம். ஸ்ரீராமன் அருகில் இருந்து அவள் தலையைத் தம் மடியில் வைத்துக் கொண்டிருந்தார். பரதர் அவள் வாயில் ஸ்ரீமன் நாராயணனின் பாத துளிகளை விட்டுக் கொண்டிருந்தார். லக்ஷ்மணர் சாமரம் போடச் சத்ருக்னர் கால்களைப் பிடித்துக் கொண்டிருந்தார்.


"ராமா!"

"என்னம்மா வேண்டும்?" துயரக் குரலில் கேட்டார் ராமர்.

"குசலவர்களைக் கூப்பிட்டு வால்மீகி இயற்றிய காவியத்தைப் பாடச் சொல்கிறாயா?"

ராமருக்கு இது விருப்பமில்லை. கைகேயியைப் பற்றிக் கொடுமையாகக் கூறியிருக்கும் அக்காவியத்தை அந்திம காலத்தில் கேட்டு மனம் நொந்து அவள் இறப்பதை அவர் விரும்பவில்லை. ஆனால் கைகேயியோ பிடிவாதம் செய்தாள்.

வீணாகானம் இசைய இரு பாலகர்களும் இன்னிசையில் பாட ஆரம்பித்து விட்டனர்; கானத்தின் அடிகள் மேலே மேலே முன்னேற, கைகேயியின் முகத்தில் பிரகாசம் அதிகரித்தது. கண்கள் சுடர் விட்டுப் பிரகாசித்தன: வதனத்தில் புன்னகை அரும்பியது. ரகுகுலத்தில் உதித்த கண்மணிகளின் புகழைக் கேட்டு, பரவச நிலையில் அவள் உயிர் மெதுவாகப் பிரிந்து கொண்டிருந்தது. தன் கண்களுக்கு மட்டும் தெரிந்த தசரத சக்கரவர்த்தியுடன் அவள் ரதம் ஏறி விட்டாள்.


உங்கள் இஷ்டப்படி
உபயோகிக்கலாம்
நல்லவேகமான காற்றும் குறைந்த செலவும் உள்ள இந்த ஆல்-பர்பஸ் விசிறி, இதுவரை கண்டிராத வியாபகத்தன்மையில் சிறந்ததாகும்.
நம்பிக்கை யூட்டும் விசிறி இஃதொன்றே "ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு விசிறி."
16" ஸ்வீப்
ஏ. ஸி.
விலை ரூ. 70/-
எக்ஸைஸ் வரி ரூ. 5/-
உள்ளூர் வரி தனி
டேபிள் விசிறியாக
Orient
ஓரியண்ட் ஆல்-பர்பஸ் விசிறிகள்
சொல்வதைக் காட்டிலும் சேவையில் மிக்கவை
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
6, தேசர் பீபீ லேன், கல்கத்தா-11.
டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
ஹிந்துஸ்தான் மெஸர்ஸ் லிமிடெட், 4, ஸ்ட்ரிங்கர்ஸ் தெரு, சென்னை - போன். 2658

தியாகி



"நாகு!"

"என்னம்மா!"

"இந்தப் பிள்ளை கோயமுத்தூர் போய் விளையாட்டுப்போல் பதினைந்து நாட்களாகி விட்டதே! கடிதம்கூட வரக் காணோமே!"

"நானும் அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். எழுதிக் கேட்போமென்றாலும் அவன் சிநேகிதனின் விலாசம் தெரியவில்லை" என்றான் நாகநாதன்.

"அவனுக்கு இன்னும் லீவு இருக்கிறதா?" புரியாமல் கேட்டாள் பார்வதியம்மாள்.

"இல்லா விட்டால் ஆபீஸுக்கு எழுதி வாங்கிக் கொள்கிறான்" என்று கூறினான் மகன்.

"என்னமோ போ! எதற்கென்றுதான் கவலைப் படுவது?" என்று ஏக்கத்துடன் பார்வதியம்மாள் மொழிந்தாள்.

தன் தாயார் அப்பால் சென்றதும் நாகநாதனின் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. 'மூர்த்தி ஏன் இப்படி ஒரு கடிதம்கூடப் போடாமல் இருக்கிறான்?'

மூர்த்தி இதுபோல் குடும்பத்தை விட்டுப் பிரிந்து எங்கேயும் சென்று நீண்ட நாட்கள் தங்கியவனில்லை. அவனுடைய நண்பன் சீனு வந்தான். 'வாவேண்டா என்னுடன். கோயமுத்தூரில் ஒரு வாரம் வேடிக்கையாக இருந்து விட்டு வரலாம்' என்று அழைத்துச் சென்றான்.

'ஒரு வாரத்தில் திரும்பி வந்து விடுகிறேன், அண்ணா!' என்று சொல்லி விட்டுச் சென்றான் மூர்த்தி நாகநாதனிடம்.

ஆனந்தமாகச் சுற்றித் திரிய வேண்டிய இளம் வயதில் அளவுக்கு மிஞ்சிய குடும்பத் தொல்லைகளில் சதா உழன்று கொண்டிருக்கிறானே, கொஞ்சம் மாறுதலாகத்தான் இருக்கட்டுமே என்று, "அதற்கென்ன போய் வா!" என்று கூறினான் நாகநாதன். ஒரு வாரத்தில் வந்து விடுவதாகச் சொல்லிச் சென்றவன் இரண்டு வாரங்களாகியும் வந்தபாடில்லை. வரத்தானில்லை. ஒரு கடிதமாவது போடக்கூடாதா? அதுவுமில்லை. 'என்ன காரணமாக இருக்கும்?' என்று மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டான் நாகநாதன்.

"அண்ணா! சின்னண்ணா எழுதினா மாதிரி இருக்கிறது......" என்று கூறி ஒரு கவரைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனான் நாகநாதனின் கடைசித் தம்பி ரமணி.

கவரை உடைத்து உள்ளே யிருந்த கடிதத்தை எடுத்துப் படித்தான் நாகநாதன் ஆவலுடன்.

" அன்புள்ள அண்ணாவுக்கு, மூர்த்தி அநேக நமஸ்காரங்கள். நான் தங்களிடம் சொல்லி வந்தபடி ஒரு வாரத்தில் திரும்பி வராததற்கு மன்னிக்கவும். கடிதமாகிலும் எழுதியிருக்கலாம். எழுதாமல் இருந்து விட்டேன். ஆனால் அதற்குத் தக்க காரணம் இருக்கிறது.

நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். நான் அப்படியொரு எதிர்பாராத காரியம் செய்துவிட்டேன்: ஆம்! சென்ற ஞாயிறு அன்று நான் புவனா என்ற ஒரு யுவதியை மணந்துகொண்டு விட்டேன். உங்களுக்கெல்லாம் தெரிவிக்காமல் நான் இப்படிச் செய்யும்படி நேர்ந்து விட்டது. அதற்கு முதலில் தாங்களும் அம்மாவும் என்னை மன்னிக்க வேண்டும்.

நான் இன்னும் ஒரு வாரத்தில் அவ்விடம் வருகிறேன். என் மாமனார் ஒரு வயதான நோயாளி. அவர் உயிருடன் இருக்கிறவரையில் நான் அவரிடமே தங்கியிருக்க வேண்டும் என்பது அவருடைய வேண்டுகோள். நானும்



யார்?

ஜெயலக்ஷ்மி

அப்படியே செய்வதாக வாக்களித்திருக்கிறேன். அதனால் நான் அவ்விடம் வந்து கொஞ்சநாட்கள் தங்கி, என்னை இந்த ஊருக்கே மாற்றல் கேட்டுக் கொண்டு வர உத்தேசித்திருக்கிறேன். விஷயத்தை விவரமாக அம்மாவிடம் சொல்லவும். மற்றவை நேரில்.

அன்புள்ள
மூர்த்தி'

கடிதத்தைப் படித்து முடித்த நாகநாதன் எல்லையற்ற வியப்பினாலும் திகைப்பினாலும் செயலிழந்து உட்கார்ந்துவிட்டான்.

'மூத்தவன் நான் இன்னமும் மணம் செய்து கொள்ளாமல் இருக்கையில் யாருக்கும் தெரிவிக்காமல் இவன் கலியாணத்தை முடித்துக் கொண்டு பிறகு கடிதம் போடுகிறானே! என்ன துணிச்சல் இவனுக்கு' என்று வியந்தது அவனுடைய மனம்.

'இல்லாவிட்டால் அவனை உன்னைப்போல் வலுவிலே வந்த ஸ்ரீதேவியை உதறி விட்டு, குடும்பம் குடும்பம் என்று சதா குடும்பத்துக்காகவே உழைத்துக் கொண்டிருக்கச் சொல்லுகிறாயா? அவன் கெட்டிக்காரன்; காரியவாதி. சாமர்த்தியமாகத் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டான். உன்மாதிரி அவன் தன் ஆசைகளை யெல்லாம் தியாகம் செய்ய விரும்பவில்லை. அது அவன் குற்றமா?' என்று இடித்துரைத்தது நாகநாதனின் ஏமாற்றம் மிகுந்த நெஞ்சம்.

'குடும்பமும் கடமையும் எனக்கு மட்டும் தானா? அவனுக்கு இல்லையா? என்னைவிட எட்டு வயது இளையவன் என்பதற்காகக் கடமையில் பங்கு கிடையாதா? மூத்தவனாகப் பிறந்து விட்டேன் என்பதற்காக நானே முழுப் பாரத்தை ஏற்றுச் சிரமப்பட வேண்டுமா?' என்று அங்கலாய்த்தான் நாகநாதன். அவன் இதயம் இனந்தெரியாத வேதனையினாலும் கலவரத்தினாலும் துன்புற்றது. எண்ணம் பின்னோக்கிப் பறந்தது.

அவன் தகப்பனார் வேதமூர்த்தி காலமாகிப் பத்து வருஷங்கள் ஆகிவிட்டன. அவர் இறந்தபோது நாகநாதனுக்கு வயது இருபத்திரண்டு. மூர்த்திக்குப் பதினாறு. அதற்கு அடுத்தபடியாகக் கமலா, சாரதா, விசு, ரமணி எல்லோரும் இரண்டிரண்டு வயது வித்தியாசமுள்ளவர்கள். வேதமூர்த்தி பெரிய சம்சாரிதான். ஆறு குழந்தைகள். பார்வதி அவருக்கு இரண்டாந்தாரம்.

சாதாரண, ஆபீஸ் குமாஸ்தாவான அவர் இரண்டாவதாக மணம் செய்து கொண்டது மிகப் பெரிய தவறு. வரிசையாகக் குழந்தைகளைப் பெற்று நிறுத்தி விட்டுத் திடீரென்று ஒருநாள் கண்ணை மூடிவிட்டார் வேதமூர்த்தி.

குடும்பப் பொறுப்பு அவ்வளவும் வீட்டுக்கு மூத்த பையனான நாகநாதனின் தலையில் விழுந்தது. இக்குழக்காடினன் அவன். வெறும் எஸ். எஸ். எல். ஸி. படித்து விட்டு நூற்று இருபது ரூபாய் சம்பளத்துக்கே கைசயாடிக் கொண்டிருக்கும் அவனால் எப்படி இவ்வளவு பெரிய குடும்பத்தைக் காப்பாற்றி முன்னுக்குக் கொண்டுவர முடியும்? என்ன செய்வது என்ற தியாமல் கன்னத்தில் கையை வைத்

துக் கொண்டு திக்பிரமை பிடித்தவன்போல், உட்கார்ந்து விட்டான் நாகநாதன்.

அச் சமயம் பெரிய மனிதன் மாதிரி மூர்த்தி அவனிடம் வந்து, ''கவலைப்படாதே, அண்ணா! நீ மட்டும்தானா இருக்கிறாய்? நானும் இல்லையா? இருவருமாகச் சேர்ந்து இந்தக் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வந்து விட முடியும்; வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதே'' என்று தேற்றினான்.

வியப்புடன் தம்பியின் முகத்தை ஏறிட்டு நோக்கினான் நாகநாதன். தன்னை விடச் சின்னவன். அவனுக்கு இருக்கிற மன உறுதியும், தன்னம்பிக்கையும் தான் என்ன! நான் அவனைத் தேற்ற வேண்டியதிருக்க அவன் என்னைத் தேற்றுகிறானே! அவனல்லவா ஆண் மகன்! நான் அவன் முன் கோழையாகி விட்டேனே என்று உள்ளூற எண்ணமிட்டான். உடனே பாசம் மேலிடத் தன் தம்பியின் கைகளைப் பற்றித் தன் முகத்தில் பதித்துக் கொண்டு விம்மினான். பிறகு அவன் உள்ளம் எப்படியோ ஒருவாறாகத் தெளிவடைந்தது.



இதெல்லாம் நடந்து இன்று பத்து வருஷங்கள் பஞ்சாகப் பறந்து போய் விட்டன. இப்போது நாகநாதனுக்கு நூற்றி ஐம்பது ரூபாயும், மூர்த்திக்கு நூற்றி முப்பது ரூபாயும் வருமானம் வந்து கொண்டிருந்தது. கமலாவும் சாரதாவும் மதமதவென்று வளர்ந்து திருமணத்தை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தார்கள். விசுவும் ரமணியும் பள்ளிப் படிப்பை முடிக்கட்டுமா, வேண்டாமா என்பது போல் முட்டுக் கட்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.


பார்வதி எவ்வளவோ சிக்கனமாகத்தான் குடும்பத்தை நடத்தி வந்தாள். அப்படியும் அவளால் பெண்களின் கலியாணத்துக் கென்று கணிசமாக ஒரு ஆயிரம் ரூபாய் கூடச் சேர்க்க முடியவில்லை. காரணம் விலைவாசிகள் ஒரு பக்கம்; குழந்தைகளின் படிப்பு இன்னொரு பக்கம். கமலாவும் சாரதாவும் ஏதோ சுமாராகப் படித்து முடித்தார்கள். விசுவும் ரமணியுமோ மகா மோசம்! ஒவ்வொரு வகுப்பிலும் இருவரும் இரண்டு வருஷங்களுக்குக் குறையாமல் தங்கி, தங்கள் படிப்பைச் சாவதானமாகத் தொடர்ந்தார்கள். இதனால் ஒன்றுக்கு இரண்டு செலவு ஆகத்தானே செய்யும்? இவ்வளவுக்கும் நடுவில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஏதேனும் உடம்பு. இப்படியே சிறுகச் சிறுகக் குடும்பத்தில் அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டுக் கொண்டே வந்ததில் பார்வதியால் ரூபாயை என்ன முயன்றும் சேமித்து வைக்க முடியவில்லை; வயிற்றைக் குறைத்து வாயைக் கட்டினால் அந்தத் தொகையினால் ஏற்படும் மிச்சத்தைப் போல் மேலும் இரண்டு பங்கு சேர்த்து வைத்தியருக்குச் சமர்ப்பித்தாக வேண்டியிருந்தது; இது பார்வதியின் குடும்பத்துக்கு மட்டும் உரியதன்று. இன்றைய நடுத்தரக் குடும்பங்கள் பலவற்றிலும் இதே நிலைதான்.

இரண்டு தங்கைகளுக்குக் கலியாணம் செய்தாக வேண்டும். இரண்டு தம்பிகளின் மேல்படிப்பைக் கவனித்தாக வேண்டும். இந்த நிலைமையில் நாகநாதன் தன்னுடைய உள்ளத்து ஆசாபாசங்களுக்கெல்லாம் மதிப்பு கொடுப்பது எப்படி?

இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்தது. நாகநாதனின் ஆப்த நண்பன் கணபதி; அவனுடைய ஒரே தங்கை வசுமதி. ஏழை தான் என்றாலும் எழில் மிக்கவள். உத்தம குணங்கள் வாய்க்கப் பெற்றவள். கணபதி ஒரு நாள் திடுதிப்பென்று ஒருவித விஷ ஜுரத்துக்குள்ளானான்; வாழவேண்டிய வாலிபன் என்று பார்க்காமல் விதி அவன் உயிரைப் பறித்துக் கொண்டு சென்று விட்டது.

கணபதி தன் இறுதித் தறுவாயில், 'நாகநாதா! நான் மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை. ஆனால் வசுமதியை அனாதரவாக விட்டு விட்டுப் போவதற்குத்தான் வருந்துகிறேன். நீதான் அவளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அவளுக்கு உன் மீது கொள்ளை ஆசை. நீயும் அவளை விரும்பும் பட்சத்தில் நீங்கள் இருவரும் தம்பதிகளாகி விடலாம்; எனக்கு ரொம்பவும் திருப்தியாக இருக்கும்' என்று கூறிச் சென்றான்;

தமயனின் மறைவுக்குப் பிறகு வசுமதி எல்லாவற்றுக்கும் நாகநாதனையே முழுவதும் நம்பினாள். படிப்பை முடித்துக்கொண்டு 'டிரெயினிங்'கிலும் சேர்ந்தாள். அவளுடைய உள்ளம் நாகநாதன் என்று கலியாணத்தைப் பற்றிப் பேச்சைத் தொடங்குவான் என்று மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தது. ஆனால் நாகநாதன்! அவனுக்கும் வசுமதியின்மீது கொள்ளை ஆசைதான். அவளை மணந்து வாழ்க்கையில் மணவின்பம் பெற அவனுக்கு இருந்த ஆவல் சொல்லி முடியாது. ஆனால் குடும்பப் பொறுப்பு என்ற ஒரு பெரிய தடை அவனை அவன் இஷ்டப்படி நடக்கவொட்டாமல் தடுத்தது. ஆம்! வயது வந்த தங்கைகளுக்கு முதலில் கலியாணம் செய்து வைக்காமல் அவன் எப்படி முதலில் தன் கலியா



என் சேலையைப் பார்!
அது
TRAYONS
"டிரேயான்ஸ்"
ரேயான் நூல்களில்
நெய்யப்பட்டது
உங்கள் ஆடைகளில் அழகுக்கும் உழைப்புக்கும் ஏற்றது "டிரேயான்ஸ்" ரேயான் நூல்களே. நவீன முறையில் தயாரிக்கப்பட்ட இந்த "டிரேயான்ஸ்" ரேயான் நூல்கள் சிக்கன செலவில், பகட்டான ஆடைகள் அணிய உதவுகின்றது. "டிரேயான்ஸ்" ரேயான் நூல்கள் 120, 150 டினேயர்களில் தயாரிக்கப்பட்டு எங்கும் கிடைக்கின்றன.
ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்
27, பவழக்காரத் தெரு, சென்னை-1.
தந்தி: "CELYARN"
கிளைகள்
போன்: 253. தந்தி: "CELYARN" 58/416, மெயின் ரோடு செவ்வாய்பேட்டை சேலம்.
போன்: 598. தந்தி: "CELYARN" 114-A, தெற்கு மாசி வீதி மதுரை.
தந்தி: "RAYONS" கோவை.

ணத்தை நடத்திக் கொள்ள முடியும்? அதையும் தவிர இவன் ஒண்டிக் கட்டையாக இருந்து கொண்டிருக்கும்போதே செலவைக் குறைத்துச் சேமிக்க முடியாமல் இருக்கிறது. கலியாணம் வேறு செய்து கொண்டு விட்டால் பிறகு கேட்கவும் வேண்டுமா? மனைவி என்றும் குழந்தை என்றும் இவன் வீணே பெரியதாகக் கிளம்பி விடுமே! பிறகு இவன் பணம் எப்படிச் சேர்ப்பது? தங்கைகளின் கலியாணத்தை எப்படி நடத்துவது? பல வாறாக யோசித்தான் நாகநாதன். வேறு வழியில்லாமல் அவன் வசுமதியை மறக்கத் துணிந்தான். அத்துடன் தன் மணவாழ்வைப்பற்றியும் சிந்திப்பதை நிறுத்திவிடத் தீர்மானித்தான். கடமை அவனைக் காதலுக்குச் சமாதி கட்ட வைத்து விட்டது.

நாகநாதனின் இந்த முடிவு வசுமதிக்குப் பெரிய மன அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது: அவள் மனமுடைந்து போனாள். நாகநாதனிடம் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுப்பார்த்து விட்டாள். அவன் கடமையே பெரிதாக இருக்கத் தீர்மானித்து விட்டான். அவனை அவளால் அசைக்க முடியவில்லை. அவன் அவளை மணக்க மறுத்துவிட்ட பிறகும்கூட வசுமதி அவனை விடுத்து இன்னொருவனை மணக்க விரும்பவில்லை. என்றைக்கேனும் ஒரு நாள் அவன் மனம் மாறும்; அவனுடைய குடும்பத்தொல்லைகள் குறையும்; தன்னைத் தேடி வந்து மணம் புரிந்து கொள்வான் என்று அவள் நம்பினாள். அந்த நம்பிக்கையிலேயே அவள் தனி வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தாள்.

நாகநாதன் வசுமதி தனக்காக இப்படி வருஷக்கணக்காகக் காத்திருப்பதைக் கண்டு உள்ளம் வெதும்பினான். ஆனால் அவனால் அவள் விருப்பத்தைப் பூர்த்தி செய்விக்க முடியவில்லையே!

நாகநாதனின் இந்தக் காதல் விவகாரம் அவன் குடும்பத்தார் அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான்! அவர்களுக்குத் தெரிந்துதான் என்ன பயன்? அவர்கள்தான் என்ன செய்ய முடியும்? அவன் குடும்ப நலனுக்காகச் செய்து விட்டிருந்த இந்தத் தியாகத்தைக் கண்டு எல்லோரும் வியப்புடன், அவனுடைய பொறுப்புணர்ச்சியைக் கண்டு அவனைப் போற்றவும் செய்தார்கள். அவ்வளவுதான் அவர்கள் செய்யக் கூடியது!

'இவ்வளவையும் அறிந்திருந்தவன்தான் மூர்த்தி. திடுதிப்பென்று யாருக்கும் சொல்லாமல் வெளியூருக்குப் போய்க் காதும் காதும் வைத்தாற்போல் தன் கலியாணத்தை முடித்துக் கொண்டுவிட்டான். வயது வந்த தங்கைகள் இருவர் மணமாகாமல் வீட்டில் இருப்பதை மறந்து விட்டான். தனக்கும் தமையன் பிரம்மச்சாரியாக இருப்பதையும் மறந்துவிட்டான். தம்பிகளின் அரைகுறையான படிப்பை மறந்து விட்டான். சுயநலக்காரன். பத்து வருஷங்களுக்கு முன்பு இவன் பெரிய பேச்சுக்கள் என்ன? இப்போது இவன் நடந்து கொண்ட விதமென்ன?' என்று மிகவும் ஆச்சரியப்பட்டான் நாகநாதன். என்ன முயன்றும் அவனால் மூர்த்தி செய்தது சரியென்று எண்ண முடியவில்லை. தம்பியின்

மீது ஆத்திரப்படாமலும் அவனால் இருக்க முடியவில்லை. உடனே ஓடிப் போய் மூர்த்தியைப் பார்த்து அவனை வாயில் வந்தபடியெல்லாம் பேசித் தீர்க்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

"ஏண்டா! நாகநாதா! ஏதோ கடிதாக வந்ததாக ரமணி சொன்னானே?" என்று கேட்டபடி அங்கு வந்தாள் பார்வதியம்மாள்.

"ஆமாம், வந்தது!" என்று வெறுப்புடன் மொழிந்தான் நாகநாதன்.

"மூர்த்திதானே போட்டிருக்கிறான்?" தாயின் குரலில் ஆவல் மிகுந்து நின்றது.

"ம்" என்று எரிச்சலுடன் முனகினான்.

"என்ன போட்டிருக்கிறான்?" என்று கேட்டாள் பார்வதி.

"இந்தா!" என்று ஆத்திரத்துடன் கூறிய நாகநாதன் தன் தம்பியின் கடிதத்தை எடுத்துத் தாயை நோக்கி வீசியெறிந்தான்.

வேதனையினால் சுருங்கிய முகத்துடன் கடிதத்தை எடுத்துப் படித்தாள் பார்வதியம்மாள். மறு கணம், "என்னடா, இது! இதெல்லாம் நிஜந்தானா?" என்று வீறிட்டாள். தாயைச் சாவதானமாகப் பார்த்தான் நாகநாதன். அவனுக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. பிறகு, "பொய்யாகக் கூட இருக்குமென்று நினைக்கிறாயா, அம்மா?" என்று நிதானமாகக் கேட்டான்.

"இப்படியும் கூட ஒரு பிள்ளை செய்யுமா?" என்று ஆச்சர்யம் தாங்காமல் கேட்டாள் பார்வதியம்மாள்.

"செய்கிறானே..." என்றான் நாகநாதன், தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு.

"உனக்கும் அவனுக்கும் எவ்வளவு வித்தியாசம்?" ஏக்கம் பொங்கி வழிந்தது பார்வதியம்மாளின் குரலில்.

"அவன் கெட்டிக்காரன்" என்று சுருக்கமாகக் கூறிவிட்டு இடத்தை விட்டு எழுந்து வெளியே வேகமாகச் சென்றுவிட்டான் நாகநாதன். பார்வதியம்மாள் தன் விழிகளிலிருந்து பெருகி வழிந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் கலங்கினாள்.

★

ஒரு வாரம் விரைந்து சென்றது. அன்று விடுமுறைநாள். நாகநாதன் வீட்டில்தான் இருந்தான். பிற்பகல் மணி மூன்று இருக்கும். வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. அதிலிருந்து ஆடம்பரமாக உடையணிந்துகொண்டு கையில் 'சூட் கேஸு'டன் மூர்த்தி கீழே இறங்கினான்.

கமலாவும் சாரதாவும் அவன் முகத்தை நேருக்கு நேராகப் பார்க்கவிரும்பாமல் 'குபுக்' கென்று உள்ளே ஓடி ஒளிந்து கொண்டார்கள். ரமணியும் விசுவும் முகத்தைத் திருப்பிக் கொண்டு விளையாடச் சென்று விட்டார்கள்.

இவைகளில் எதையும் பொருட்படுத்தாமல் மூர்த்தி வீட்டினுள் நுழைந்தான். கூடத்தில் உட்கார்ந்து அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த பார்வதியம்மாள் மூர்த்தியைக் கண்டதும் முகத்தை முறத்தினுள் கவிழ்த்துக் கொண்டு விட்டாள்.

காலடியோசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் நாகநாதன். தம்பி வருவதைக்

கண்டான். மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''வா!'' என்றான்.

கைப்பெட்டியைக் கீழே வைத்து விட்டு விடுவிடு வென்று வந்து தன் அம்மாளையும் அண்ணனையும் நமஸ்கரித்தான்.

''மூர்த்தி!'' என்றான் நாகநாதன். அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை.

மூர்த்தியோ படபட வென்று தன் கைப்பெட்டியைத் திறந்தான். அதற்குள்ளிருந்து ஒரு நீண்ட பெரிய கவரை எடுத்துத் தன் தமயனிடம் கொடுத்தான்.

''அண்ணா! இதில் பதினையாயிரம் ரூபாய்கள் இருக்கின்றன. இதைக் கொண்டு கமலா, சாரதா இவர்களின் கலியாணத்தை முடித்து விடு. ரமணி, விசுவின் படிப்புக்கும் இதில் மிஞ்சும் என்று நினைக்கிறேன். நீ இனிமேல் வசுமதியைத் தாராளமாக மணந்து கொள்ளலாம்'' என்று படபட வென்று மூர்த்தி பேசிக் கொண்டே போனான்.

''ஏதுடா! இவ்வளவு பணம்!'' என்று வியப்புடன் வினவினான் நாகநாதன்.

''என் மாமனார் எனக்குக் கொடுத்த வரதட்சிணைப் பணம் இது!'' என்று சலனமற்ற குரலில் கூறினான் மூர்த்தி.

''இவ்வளவா?'' என்றான் பெரியவன் ஆச்சரியம் தாங்காமல்.

''ஆமாம்!'' என்றான் மூர்த்தி எங்கேயோ பார்த்தபடி.

''நம்ப முடியவில்லையே......'' என்றான் நாகநாதன்.

''அந்தப் பெண் வரவில்லையா?'' - நடுவில் குறுக்கிட்டுக் கேட்டாள் பார்வதியம்மாள்.

''அவளை ரயிலில் அழைத்துக்கொண்டு வர முடியாது. ரொம்பச் சிரமம் அம்மா!'' என்று கூறினான் மூர்த்தி.

''அப்படி யென்னடா அவளுக்கு?'' என்று கேட்டான் நாகநாதன்.

''அவளுக்கு இரண்டு கண்களும் தெரியாது'' என்றான் மூர்த்தி.

''என்ன!'' என்று ஏக காலத்தில் அலறினார்கள் பார்வதியம்மாளும் நாகநாதனும்.


''விஷயத்தை முன்னதாகவே சொன்னால் நீங்கள் இந்தக் கலியாணத்துக்குச் சம்மதிக்க மாட்டீர்கள் என்றுதான் கலியாணத்தை முடித்துக் கொண்டு பிறகு உங்களுக்குத் தெரிவித்தேன். என் மாமனாருக்குக் கோயம்புத்தூரில் ஒரு பெரிய வீடும், பாங்கியில் பணமும் இருக்கின்றன. எல்லாம் கடைசியில் எனக்குத்தான். நம் சம்பாத்தியத்தில் பணம் சேர்த்துக் கமலாவுக்கும் சாரதாவுக்கும் என்றைக்குக் கலியாயாணத்தை முடிப்பது? ரமணி, விசுவின் படிப்பைத்தான் எப்படிச் சமாளிப்பது? நீங்கள் தான் எவ்வளவு நாட்கள் பிரம்மசரிய விரதம் அனுஷ்டிக்க முடியும்? நான் பல வாறுக யோசித்துப் பார்த்து விட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்தேன். வலுவிலே வந்த சீதேவியை இழக்க விரும்பவில்லை நான். என் ஒருவனின் இந்தச் சிறு தியாகம் உங்கள் ஐந்து பேர்களையும் வாழ்விக்குமே! அது போதாதா எனக்கு!'' என்று கூறிய மூர்த்தியின் குரல் உணர்ச்சி மிகுதியால் கரகரத்தது.



திருமதி ஜயலக்ஷ்மி

பாய்ந்து சென்று தம்பியின் கரங்களைப் பற்றிக் கொண்டான் நாகநாதன். தழதழத்த குரலில், ''மூர்த்தி! என்றுமே நீ உயர்ந்தவன். உன்னைப் பற்றித் தவறாக எண்ணி விட்டேன். என்னை மன்னித்து விடு. நான்தான் பெரிய தியாகம் செய்துவிட்டதாக எண்ணிப் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தேன். உண்மையில் தியாகி நானல்ல. நீதான்!'' என்று கூறினான்: அவன் கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தது.

பார்வதியம்மாளும் மறைவில் ஒளிந்து கொண்டிருந்த கமலாவும் சாரதாவும் கூடத் தங்கள் தங்கள் கண்களில் பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நெஞ்சு வெடிக்க விம்மினார்கள். அவர்களது மனக் கண்களின் எதிரில் மூர்த்தி ஒரு மனிதனாகத் தோன்றாமல் தெய்வமாகக் காட்சி தந்து கொண்டிருந்தான்.



பின்னியின் காட்ஸ்வால்

உங்கள் சருமத்திற்கு சமசீதோஷ்ண நிலையளிக்கும் அதிசயத் துணி!

"கண்மணிகளே, நீங்கள் மென்மையும் அழகும் கலந்த"
காட்ஸ்வால் அணிந்திருப்பதால்
எவ்வளவு அழகாயிருக்கிறீர்கள்!"





காட்ஸ்வால் விசேஷ மதிப்புடையது :

அது உயர்ந்த ரகக் கம்பளியும் பருத்தியும் கலந்து அதி ஜாக்கிரதையுடன் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது.

நீடித்து உழைப்பதுடன் என்றும் மென்மையாக இருக்கிறது.

அது எல்லா குழந்தைகளுக்கும் ஏற்றது. மிகக மென்மையான சருமத்தைக்கூட உறுத்தாது.

சீதோஷ்ண நிலையில் ஏற்படும் திடீர் மாறுதல்களிலிருந்து பாதுகாக்கிறது.

அது எப்போதும் பார்க்க நேர்த்தியாக இருக்கும். எந்த பருவகாலத்துக்கும் ஏற்றது.


காட்ஸ்வால் சுருங்காதென உத்தரவாதம். காட்ஸ்வால் துணியை வீட்டிலேயே சலவை செய்யலாம்.

பலவித கலர்களிலும் டிஸைன்களிலும் கிடைப்பதால் உங்களுக்கு வேண்டிய ரகத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

காட்ஸ்வாலுக்கு ஈடு எதுவும் இல்லை! அதிகக் குளிரிலிருந்து பாதுகாக்க பின்னியின் அங்கோலாவை அணியுங்கள்.

உங்கள் அபிமானம் பெற்ற காட்ஸ்வால் விற்பனையாளரிடம் இலவச 'மாதிரி போல்டர்' கேளுங்கள்.

பங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் லிட்.
மானேஜிங் ஏஜெண்டுகள் : பின்னி & கம்பெனி (மதராஸ்) லிட்.



பேனா வீரர் மாநாடு

[நமது விசேஷ நிருபர்]

வீரர்களின் அணிவகுப்பு, போர்முரசம், படையெடுப்பு, அம்பு வீச்சு இவற்றைக் கேள்விப் பட்டாலே வழக்கமாக மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடுவார்கள். இதற்கு முற்றிலும் மாறுபட்டதோர் அதிசயம் இந்த ஜூலை மாதம் இருபத்தேழாம் தேதி திருச்சிமாநகரில் நடைபெற்றது. நகரத்தின் பல பகுதிகளிலிருந்து பிரமுகர்களும் தமிழன்பர்களும் திரள் திரளாகக் கூடி வந்து உருமு தனலட்சுமி வித்தியாலயத்தை முற்றுகை இடத்தொடங்கினார்கள். திருச்சி 'டௌன் ஸ்டேஷனு'க்கு அருகில் உள்ள அந்தப் பள்ளிக்கூடத்தின் பெரிய மைதானத்துப் பந்தலில் நிற்கக்கூட இடமில்லாமல் நெருக்கியடித்துக் கொண்டு குழுமிவிட்டனர் தமிழ்ப் பெருமக்கள். திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கத்தாரின் மூன்றுவது ஆண்டுவிழா மகாநாட்டில் கலந்து கொள்ளவும், பேனா வீரர்கள் அணிவகுப்பைக் காணவும், அவர்கள் வீசும் சொல்லம்புகளை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளவும்தான் அத்தனை ஆர்வத்துடன் திரண்டு வந்திருந்தார்கள் ரசிகப் பெருமக்கள்.

விழாவின் ஏற்பாடுகளால் 'டௌன் ஸ்டேஷ'னுக்குப் போகும் வழியெல்லாம் அலங்காரம் பெற்று விளங்கியது. மகாநாட்டுப் பந்தலுக்குச் செல்லும் வீதியெங்கும் ஒரே வாழை மர வரிசைகள், பச்சை இலைத் தோரணங்கள், 'வரவேற்பு' வளைவுகள்! மிகவும் கோலாகலமாகத் தெருவெல்லாம் தமிழ் முழக்கி விழாக் கொண்டாடினார்கள் திருச்சி தமிழ் எழுத்தாளர்கள்.

மலைக்கோட்டையைத் தங்கள் சின்னமாகக் கொண்டிருக்கும் திருச்சி எழுத்தாளர்கள், சென்னையிலிருந்து இரண்டு அறிஞர்களை விழாவுக்காகக் கொண்டு வந்து சேர்த்திருந்தார்கள். தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் தலைமை தாங்கவும், ஆனந்த விகடன் ஆசிரியர் எஸ். எஸ். வாசன் துவக்கி வைக்கவும், இன்னிசை வாத்திய முழக்கத்தோடும், குமாரி சரோஜாவின் தமிழ் வாழ்த்தோடும் காலை ஒன்பதரை மணிக்கெல்லாம் குதூகலத்துடன் விழா ஆரம்பமாகியது.

குத்துவிளக்கை ஏற்றி வைத்து விட்டு விழாவைத் துவக்கி வைத்தார் திரு எஸ். எஸ். வாசன் அவர்கள். அவர் தம்முடைய ரஸமான துவக்க உரையில் கூறினார் :

''நாட்டின் நல்வாழ்வு எழுத்தாளர் கையில் தான் இருக்கிறது. அழியாத இலக்கியங்களைப் படைக்கும் வாய்ப்பு உங்களுக்கு உண்டு. சமுதாயத்தின் காவலன் எழுத்தாளன். இன்றையச் சமுதாயத்தின் அச்சாணியே எழுத்தாளன்தான். பிரமன் எழுதும் எழுத்து ஆயுளுடன் முடிந்து விடுகிறது. பேனா பிடிப்பவரின் எழுத்தோ எத்தனையோ காலம் நிலைத்து நிற்கும் வலிமையைப் பெற்றது. ஆகவே நம்முடைய பேனா முனையை, எழுத்தின் சக்தியை நாம் சமுதாயத்தின் ஆக்கவேலையில் பயன்படுத்த வேண்டும்.''

இவ்வாறு கூறி திரு எஸ். எஸ். வாசன் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்த பிறகு, டாக்டர் மு. வரதராசன் அவர்களின் தலைமை உரை மணி மணியாக உதிர்ந்தது.



திரு அகிலன்

''தமிழ் எழுத்தாளர்களுக்குப் பின்னால் உயர்ந்ததோர் பரம்பரையும் அதன் பண்புகளும், மரபுகளும் இருக்கின்றன. பழைய இலக்கிய ஆசிரியர்களின் நற்கருத்துக்களை நாம் ஏற்றுக் கொண்டு, இன்றைய வாழ்க்கையை அலசி ஆராய்ந்து, என்றும் நிலைத்திருக்கக் கூடிய பேருண்மைகளுக்கு நாம் உருவம் கொடுத்துக் கதைகளாக, கட்டுரைகளாக, கவிதைகளாக, நாடகங்களாக வெளியிட வேண்டும்.

''இலக்கியம் பொழுதுபோக்குக்குத்தான்' என்று சொல்வோர் மன வளர்ச்சி பெறாத குழந்தைப் பருவத்தில் இருப்பவர்கள். 'இலக்கியம் அரசியல் கட்சிகளுக்காக' என்று சொல்வோர் உணர்ச்சிக் கொந்

மேலே மகாநாட்டைத் துவக்கிவைத்த திரு எஸ். எஸ். வாசன் அவர்களையும், தலைமை தாங்கிய டாக்டர் மு. வரதராசனார் அவர்களையும், விழாவுக்குத் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த எழுத்தாளர்களில் ஒரு பகுதியையும் காணலாம்.

தளிப்பு கொண்டவர்கள். மனித வாழ்க்கையின் பொதுவான அடிப்படை மனவளர்ச்சிக்கும், நிலையான முன்னேற்றத்துக்கும் வழி கோலுவதுதான் சிறந்த இலக்கியமாகும். நம்முடைய பழைய நற்பண்புகளைப் பாதுகாக்கவும், புதிய பண்புகளை உருவாக்கவும் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

'' பழைய காலத்தில் வில்லும் வாளும் கொண்டு போராடுவது புலவர்களால் புகழப் பெற்று வந்தது. இந்த அணுகுண்டு காலத்தில் போர் முறைகளையும், வன்முறை வெறிச் செயல்களையும் எழுத்துக்களால் தூண்டி விடுவது நாகரிகத்துக்குப் புறம்பானதாகும். சர்வாதிகாரிகளின் போர், அரசியல் கட்சியாரின் ஆதிக்க வெறி, சாதி சமய இனவெறி இவற்றிலிருந்து மக்களைத் திருப்பி அமைதியான நல்வாழ்வுப் பாதையில் சிந்திக்க வைக்க வேண்டும்.

'' எளிய தூய தமிழில் நாம் எழுத வேண்டும். கதைகளின் ஊடே கதாபாத்திரங்களின் பேச்சு மொழி வேண்டுமானால், சாதாரண வழக்கில் உள்ள மொழியாக இருக்கலாம். உரையாடல்களில் ஓரளவு பேச்சு வழக்கு மொழி கலந்துதான் தீரும். இது தவறில்லை.''

டாக்டர் மு. வ. அவர்களின் தலைமை உரைக்குப் பின் சிறப்புச் சொற்பொழிவாளர்களாகக் கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜ. வும், திருவாசகமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியமும் பேசினார்கள்.

மகாநாட்டின் தொடக்கத்தில் அனைவருக்கும் வரவேற்பு கூறிய வரவேற்புக் குழுச் செயலாளர் திரு கவி 'எழுத்தாளனை நாடு மதித்துப் போற்றாவிட்டால், அவன் பீரோ பீரோவாக மட்டரக நூல்களை எழுதித் தள்ளி, தன்னை மதிக்காத சமுதாயத்தையே வஞ்சம் தீர்த்துக் கொள்வான்' என்று எச்சரிக்கை செய்தார்.


வரவேற்புச் செயலாளர் திரு அகிலன் தமது ஆண்டறிக்கையில் சங்கத்தின் நோக்கத்தைக் குறிப்பிட்டு, '' நாட்டின் முரண்பாடுள்ள சக்திகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் போது, அவற்றால் நாட்டில் பகைமை உணர்ச்சி பரவாதிருக்க, பல நடுநிலைச் சிந்தனையாளர்களை ஒன்று கூட்டுவதே எங்கள் நோக்கம்'' என்று தெரிவித்தார். சங்கத்தின் துணைச் செயலாளர் திரு ஐ. சண்முகநாதன் மகாநாட்டுக்கு வந்திருந்த ஏராளமான வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்.

பிற்பகல் நிகழ்ச்சியாகத் தங்கள் சங்கத்து எழுத்தாளர்களையும், மதுரை, தஞ்சை, கரூர், சென்னை முதலிய இடங்களிலிருந்து வந்திருந்த எழுத்தாளர்களையும் கூட்டத்தினருக்கு அறிமுகம் செய்து வைத்தார் சங்கச் செயலாளர் திரு ஏ. எஸ். ராகவன். . அடுத்தாற்போல் எழுத்தாளர்களுக்குள் ஓர் சுவையான சொற்போர் தொடங்கியது. 'இலக்கியம் பொழுது போக்கவே' என்ற பொருள்பற்றிக் கவிஞர் திருலோக சீதாராம் தலைமையிலும், 'இலக்கியம் பயனுக்காகவே' என்பது பற்றிப் பேராசிரியர் சி. எஸ். கமலபதி தலைமையிலும் இரு பிரிவாகப் பிரிந்து விழா மேடையைப் பட்டிமன்றமாக்கினார்கள். திருவாளர்கள் துறைவன், மாறன், ரா. ஆறுமுகம், நா. பார்த்தசாரதி, மாயா, எஸ். பூமிநாதன், செல்லம்மாள், ரா. நீலமேகம், கே. ஆர். பசுபதி ரெட்டியார், கவி, அகிலன் இவர்களுடைய விவாதத்துக்குப் பின், தலைவர் திரு மு. வரதராசன் அவர்கள் '' இலக்கியம் மகிழ்ச்சி யூட்டிப் பயன்தர வேண்டும் '' என்று முடிவுரை கூற இனிது நிறைவேறியது.

தலைவர் ரெட்டியார் நன்றியுரையோடு, எஸ். சுப்பிரமணியம் தமிழ் வாழ்த்துப் பாட விழா வெற்றிகரமாக முடிந்தது. விழாவின் கருத்துக்களை நிரந்தரமாகப் பதிய வைப்பதைப் போன்று 'எழுத்தாளன் இலக்கியச் சிறப்பு மலர்' ஒன்றைச் சிறப்பாக வெளியிட்டிருந்தார்கள் சங்கத்தார்கள்.

மகாநாடு இத்தனை சிறப்பாகவும், கோலாகலமாகவும், கருத்துக்குவியல்களின் வெளியீடாகவும் அமைவதற்காக அரும்பாடு பட்டு உழைத்த சங்கத்தின் தலைவர் திரு அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், செயலாளர் திரு ஏ. எஸ். ராகவன், வரவேற்புக் குழுத் தலைவர் திரு கவி ஆகியவர்களை எவ்வளவு புகழ்ந்து பாராட்டினாலும் தகும்.

திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருமே இலக்கிய ஆர்வம் நிறைந்த இளைஞர்கள். தன்னலம் கருதாமல் தமிழ் நலம் ஒன்றையே கருதுபவர்கள். திருச்சி எழுத்தாளர் சங்கத்தின் வெற்றி ரகசியமே தமிழ் நலம் என்ற அவர்களுடைய லட்சியத்தில்தான் இருக்கிறது.


நீங்கள்
களைப்பு
அடையும்
பொழுது
தேநீர்
உங்களுக்கு
உற்சாக
மூட்டுகிறது
நான்தான் டீ

ஆறும் அத்தியாயம்


கதிர்வேலன் எங்கே?

கீழே விழுந்த வேகத்தில் திறந்து கொண்டிருந்த தோல் பெட்டியையும் சிதறிக் கிடந்த மருந்துப் புட்டிகளையும் பார்த்ததுமே நிர்மலாவுக்குப் போலீஸார் யாரைத் தேடி வந்திருக்கிறார்கள் என்பது புரிந்து விட்டது.

ஆனால் நடராஜனோ அல்லது மணி சேகரனோ அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. திடீரென்று போலீஸா

யிருக்கக் கதிர்வேலன் அங்கு இல்லை எ பதை எப்படிக் கவனிக்க முடியும்?

நிர்மலாவின் நிலையோ இதற்கு நே மாறாக இருந்தது. அந்த வீட்டுக்கு அடி எடுத்து வைத்தது முதல் அவ எதிரே ஒரு இளம் சிங்கத்தின் கம்பீர



ரைக் கண்டதும் ஏற்பட்ட மனக் குழப் பத்தினால் சற்று முன்னால் அங்கே நின்று கொண்டிருந்த நிட காத்திரனை மனிதனை இப்போது காணவில்லை என் பதை மணி உணரவில்லை. நடராஜனு டைய மனமாகிய வண்டு இன்னமும் மல்லிகாவின் செந்தாமரை முகத்தை வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அப்படி

துடன் அவன் நின்று அவள் சிந்தனை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான். தி ரென்று அவனைக் காணவில்லை. அத ருக் காரணம் இந்தப் போலீஸார் அன்ற வேறு என்னவாக இருக்க முடியும்?

"உங்களில் டைரக்டர் சுகுமார யார்?" என்று போலீஸ் இன்ஸ்பெக்ட அதிகாரத் தோரணையுடன் கேட்டார்.

"எங்களில் யாருமே சுகுமார இல்லை. அவர் உள்ளே இருக்கிறார்."

"சரி, உள்ளே போய் அவரைப் பார்க்கிறேன். எதற்கும் நீங்கள் எல்லாரும் பின்னோடு வாருங்கள்."

"இன்ஸ்பெக்டர் ஸார்! இதோ பாருங்கள். நான் டாக்டர். எனக்கு ஏராளமான வேலை யிருக்கிறது. இன்னும் எத்தனையோ நோயாளி களை நான் கவனிக்க வேண்டும். நேரம் ஆகிறது. எதற்கு என்னை



பொங்கிவரும் பெருநிலவு

அனாவசியமாக இழுக்கடிக்கிறீர்கள்?" என்று கேட்டான் நடராஜன்.

"தடைகளும் தடங்கல்களும் சொல்லாமல் இருந்தால் விசாரணை சீக்கிரமாக முடிந்து நீங்களும் விரைவில் உங்கள் காரியங்களைக் கவனிக்கச் செல்லலாம். தடைகள் சொல்லுவதால் உங்களுக்கு மட்டும் இல்லை, எனக்கும் நேரம் விரயமாகிறது" என்றார் இன்ஸ்பெக்டர். பணிவாகப் பேசிய போதிலும் குரலில் உறுதியும் கண்டிப்பும் தொனித்தன.

முகத்தில் பயம் கலந்த ஒரு கேள்விக் குறியுடன் வீட்டினுள் நுழைந்த அவர்களை வரவேற்றார் சுகுமாரன்.

"நீங்கள்தானே டைரக்டர் சுகுமாரன்?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம்!"

தன் கையில் இருந்த பிரம்பால் விலங்கிடப்பட்டிருந்த இருவரையும் சுட்டிக் காட்டினார் இன்ஸ்பெக்டர். "இவர்களை உங்களுக்குத் தெரியுமா?"



அவர்களைக் கூர்ந்து பார்த்தார் சுகுமாரன். மாமல்லபுரத்தில் கதிர்வேலவிடமிருந்து 'சீமைத் தண்ணீர்' பொட்டலத்தை வாங்கிச் சென்றவர்கள்தான் அவர்கள் என்று ஊகித்தார். ஆனால் அமாவாசை இருட்டில் அவர்களைப் பார்த்திருந்ததால் நிச்சயமாக அவரால் தீர்மானிக்க முடியவில்லை. 'அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை!'

"இந்த இருவரையும் உங்களுக்குத் தெரியுமா?" என்று மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"தெரியாது!"

"இதற்கு முன் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? அல்லது பார்த்தது போல் ஞாபகமாவது இருக்கிறதா?"

"இதற்கு முன் இவர்களை நான் பார்த்ததேயில்லை." ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தி நிதானமாக அழுத்தம்திருத்தமாகச் சொன்னார் சுகுமாரன்.

விலங்கு மாட்டப்பட்டிருந்த அந்த இருவரையும் பார்த்து, "இவர்தானா!" என்று சுகுமாரனைச் சுட்டிக் காண்பித்து இன்ஸ்பெக்டர் கேட்டார்.

'இல்லை' என்பதற்கு அடையாளமாக அவர்கள் உதட்டைப் பிதுக்கித் தலையை அசைத்தார்கள்.

மீண்டும் சுகுமாரன் பக்கமாகத் திரும்பினார் இன்ஸ்பெக்டர்.

"நேற்று நீங்கள் மாமல்லபுரம் போயிருந்தீர்களா?"

"ஆமாம்!"

"எதற்குப் போனீர்கள்?"

"மாமல்லபுரத்துக்கு எதற்காகப் போவார்கள்? சிற்பங்களைப் பார்த்துவிட்டு வரத்தான்."

"உண்மையில் அதற்கு மட்டும்தான் போனீர்களா? அதைத் தவிர வேறு ஏதாவது காரணம் உண்டா?"

"இன்ஸ்பெக்டர் ஸார்! இம்மாதிரி கேள்விமேல் கேள்வியாகக் கேட்பது எனக்குப் பிடிக்கவில்லை. நல்ல அந்தஸ்துடன் கௌரவமாக வாழ்பவன் நான். எதற்கு என்னை ஏதோ சந்தேகிப்பது போல் பேசவேண்டும்? என்ன விஷயம் என்று தெரிந்துகொள்வதற்கு முன்னால் நான் இனி எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியாது. வேண்டுமானால் என் வக்கீலுக்கு டெலிபோன் செய்து உடனே இங்கு வரச் சொல்கிறேன்.

உங்களுக்குச் சட்டம் தெரியவில்லையானால் அவர் சொல்லிக் கொடுப்பார்!''


''அவ்வளவு சிரமம் உங்களுக்கு வேண்டாம், ஸார்! சட்டத்தைப் பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும். தாங்கள் விரும்பவில்லையானால் என் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டாம். ஆனால் நான் சொல்ல வேண்டியதைக் கூறிவிடுகிறேன். அப்புறம் உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள். எங்களுடன் ஒத்துழைப்பதுதான் உங்களுக்கு நல்லது.

''மதுவிலக்குப் போலீஸாராகிய நாங்கள், கொஞ்ச நாட்களாகவே நகரில் தீவிரமாகச் சோதனைகள் நடத்தி வருகிறோம். நேற்று இந்த இருவரையும் கள்ளத்தனமாக லைசென்ஸ் இல்லாமல் விலை உயர்ந்த அன்னியச் சாராய வகைகளை விற்றதற்காகக் கைது செய்தோம். இவர்களிடமிருந்து பத்து சாராய புட்டிகளையும் கைப்பற்றினோம். 'எப்படி இவர்களுக்கு இந்தப் புட்டிகள் கிடைத்தன?' என்று யோசித்தபோது சுங்க அதிகாரிகளிடமிருந்து எங்களுக்கு ரகசியமாகக் கிடைத்திருந்த ஒரு தகவல் நினைவுக்கு வந்தது.

''கடற்கரையிலிருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் ஒவ்வொரு கப்பலும் ஒரு தனி ராஜ்யம். நாட்டின் சட்ட திட்டங்களெல்லாம் கடலில் மிதக்கும் அந்தக் கப்பல்களையோ அதில் உள்ளவர்களையோ பாதிக்காது. இதைப் பயன்படுத்திக் கொண்டு பலர் கரையிலிருந்து நான்கு அல்லது ஐந்து மைல்களுக்கு அப்பால் வரை படகில் செல்வார்கள். கப்பல்களை அணுகி அவற்றிலிருந்து பல பொருள்களை வாங்கிக் கொள்வார்கள். சுங்க இலாக்காவின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுத் துறைமுகத்துக்கு வராமல் வேறு ஏகாந்தமானதொரு இடத்துக்குச் சென்று கரை சேர்ந்து, அங்கிருந்து உள்நாட்டுக்குச் சென்று கப்பலிலிருந்து தாங்கள் கொண்டுவந்த பொருள்களை விற்று விடுவார்கள். இவர்களைக் கண்டுபிடிக்க எங்கள் ஒத்துழைப்பு வேண்டும் என்று சுங்க இலாக்காவினர் கேட்டிருந்தார்கள்.

''இந்த இருவரும் விற்பனை செய்த அயல் நாட்டுச் சாராயம் அந்த வகையில்தான் வந்ததோ என்று எண்ணி இவர்களை மிரட்டி விசாரித்தோம். எங்கள் ஊகம் சரிதான் என்று தெரிந்தது. ஒளிவுமறைவு இல்லாமல் எல்லாவற்றையும் சொல்லி விட்டார்கள்.

''மாமல்லபுரத்தில் இவர்களிடம் வியாபாரம் செய்தவனையும் பிடிக்க நினைத்துப் புலிக்குகை அருகே சென்று தேடினோம். கடற்கரை ஓரமாக மரங்



களுக்கும் புதர்களுக்கும் இடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த படகையும், அதைச் செலுத்துவதற்கான மோட்டார் இயந்திரத்தையும் கைப்பற்றினோம். ஆனால் அந்த ஆள் மட்டும் எப்படியோ தப்பி விட்டான். அவன் பெயர் கூட இவர்களுக்குத் தெரியாதாம். அதைச் சொல்ல மறுத்து விட்டானாம். அப்படியே சொல்லியிருந்தாலும் அது உண்மைப் பெயராக இருக்காது. ஆனால் ஆளைப் பார்த்தால் அடையாளம் சொல்வோம் என்றார்கள்.

'' அக்கம் பக்கத்தில் புலன் விசாரித்தோம். ஒருவருக்கும் தெரியவில்லை. 'தோற்றுப் போய் விட்டோம்' என்று நினைத்த சமயத்தில் கடற்கரைக் கோயிலில் இருந்த ஒரு வழிகாட்டி பிரபல சினிமா நட்சத்திரம் மல்லிகாவும் டைரக்டர் சுகுமாரனும் வந்திருந்தார்



கள் என்று சொன்னான். முதலில் எங்களுக்கு அதில் சிரத்தை இருக்கவில்லை. எத்தனையோ சினிமா 'ஸ்டார்'கள் மாமல்லபுரத்துக்கு வருவார்கள், போவார்கள். ஆனால் 'இரவு நான் வீட்டுக்குத் திரும்பும்போது அவர்களுடைய கார் புலிக் குகையிலிருந்து வந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். அதில் அந்த இருவரையும் தவிர மூன்றாவது ஆள் இருந்தான்' என்று அந்த வழிகாட்டி சொன்னதும் எங்களுக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது.''

சுகுமாரன் குறுக்கே புகுந்தார். '' அவன் கூறியது சரிதான். நாங்கள் மூன்று பேர்கள்தான் போயிருந்தோம். மல்லிகாவின் தங்கை சரஸ்வதியும் வந்திருந்தாள்'' என்றார்.

'' அது எங்களுக்குத் தெரியும். அந்தச் சிறுமியை மாலையில் தான் பார்த்ததாகவும் இரவு புலிக் குகையிலிருந்து கார் திரும்பும்போது பார்க்கவில்லை என்றும் அந்த வழிகாட்டி கூறினான். வேறு ஒரு புது ஆசாமி காரை ஓட்டிக் கொண்டு வந்ததைக் கண்டதாகவும் சொன்னான்.''

சரஸ்வதி பின்னால் படுத்துத் தூங்கி விட்டது நினைவு வந்தது சுகுமாரனுக்கு. '' வெறும் உளறல் '' என்றார் அவர். கோபமும் ஏளனமும் நிரம்பி இருந்தன அந்தச் சொற்களில்.

'' இருக்கலாம். நல்ல அமாவாசை இருட்டு. வேகமாகச் செல்லும் கார் உங்களை அவன் பார்த்தது ஒரே ஒரு கணம்தான் இருக்கும்.

' ஆனால் புலிக் குகை அருகே ஒரு கார் நின்றதையும் அதனுள் ஒருவர் உட்கார்ந்திருப்பது போல் தோன்றியது என்றும் இந்த இருவரும்கூடச் சொல்கிறார்கள். எதற்கும் விசாரித்து விடுவது நல்லது என்று உங்கள் வீட்டுக்குப் போனோம். நீங்கள் இங்கே இருப்பதாகச் சொன்னார்கள்.''

'' நீங்கள் குறிப்பிடுபவனைப் போல் ஒருவனையும் எனக்குத் தெரியாது. இதிலெல்லாம் நான் ஏன் தலையிடப் போகிறேன்?'' என்றார் சுகுமாரன்.

''நான் அப்படிச் சொல்லவில்லையே! இருந்தாலும் நாங்கள் அலட்சியமாக இருக்க முடியாதல்லவா? சட்டத்துக்கெதிரே பெரிய மனிதன், சின்ன மனிதன் என்றெல்லாம் கிடையாது.''

இத்தனை நேரமாக அவர்கள் பேசுவதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த மணிக்கு இப்போது திடீரென்று நிர்மலாவுடன் நின்று கொண்டிருந்த மனிதனின் நினைவு வந்தது.

அவனைப் பார்த்த போதே மணியின் மனத்தில் நல்லெண்ணம் ஏற்படவில்லை. அவனுடைய உடையும், அவன் நிர்மலாவை முறைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்ததும், தான் மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்ட பிறகுதான் அவன் அங்கிருந்து நகர்ந்ததும் நினைவுக்கு வந்தன.

'' நீங்கள் குறிப்பிடும் ஆள் எப்படியிருப்பான்?'' என்று கேட்டான் அவன்.

''நல்ல உயரம். பயில்வானைப்போல் திடகாத்திரனாக இருப்பான். அகன்ற மார்பு. திரண்ட தோள்கள். உடலோடு ஒட்டிய பனியன். கழுத்தில் சுற்றப்பட்ட கைக்குட்டை...'' என்று வர்ணித்துக் கொண்டே போனார்கள் விலங்கிடப்பட்ட அந்த இருவரும்.

'' மணி! ஸ்டூடியோவுக்கு போன் செய்தாயா? அந்த பம்பாய் நடிகன் கோபித்துக் கொள்வான், அப்பா!

எமது சுதந்திர தின

நல் வாழ்த்துக்கள் !

கந்தவடி

(நகை வியாபாரிகள்)

207/208, நேத்தாஜி சுபாஷ் போஸ் ரோட்

சென்னை

யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:

2. இந்தியா எக்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

•

கீழ்க்கண்ட இடங்களில் எமது பாங்கியின் கிளை ஆபீஸ்கள் திறக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1. புதுக்கோட்டை
(டி. எஸ். 3090, கீழ வீதி)
2. கும்பகோணம்
(136, பெரிய தெரு)
3. திருச்சிராப்பள்ளி
(56, கிலேதார் தெரு)

•

ஜி. டி. பிர்லா
சேர்மன்

எஸ். டி. சதாசிவன்
ஜெனரல் மானேஜர்

வசீகர தோற்றத்திற்கு

பிரஸிடெண்ட்

அழகு சாதனங்களை உபயோகியுங்கள்... என்று

பத்மினி சொல்லுகிறார்கள்





Manufacturers

RATHOD TRADING CO

MADRAS-1

உடனே போய் டெலிபோன் செய்து விட்டு வா!'' என்றார் சுகுமாரன்.

தான் இந்தச் சம்பாஷணையில் கலந்து கொள்வதைச் சுகுமாரன் விரும்பவில்லை என்று புரிந்து கொண்டான் மணி. அவர் பேச்சை மாற்றுவதைக் கவனித்த இன்ஸ்பெக்டரின் முகம் கடுமையாயிற்று.

அதே சமயத்தில் நடராஜன் எதிரே ஒரு மின்னல் மின்னியது. அதன் ஒளியில் சற்று நேரத்துக்கு முன்னால் நிர்மலாவின் கரங்களிலிருந்து மருந்துகள் அடங்கியதோர் பெட்டியை வாங்கிக்கொண்டு வந்த மனிதனைக் கண்டான். கீழே விழுந்து கிடந்த தோல் பெட்டி, சிதறி இருந்த மருந்துப் புட்டிகள் எல்லாம் அவன் கண் எதிரே தோன்றின.

"நீங்கள் குறிப்பிடும் மனிதனைச் சற்று முன்னால் பார்த்தேன், ஸார்!''

பதறிப் போனாள் நிர்மலா. போலீஸாரைக் கண்டது முதல் இதுவரையில் அவள் எது நடக்கக் கூடாது என்று பகவானை வேண்டிக் கொண்டிருந்தாளோ, அது நடந்து விட்டது.

''எங்கே? எங்கே பார்த்தீர்கள்?''

டைரக்டர் சுகுமாரன் நடராஜனின் விரல்களைப் பற்றி அழுத்தினார். அந்த சமிக்ஞையைப் புரிந்துகொண்ட நடராஜன் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தயங்கினான்.

அந்தத் தயக்கத்தைக் கண்ட இன்ஸ்பெக்டர் போலீஸ்காரர்கள் பக்கமாகத் திரும்பினார். தலையை அசைத்து 'உம்' என்று குரல் கொடுத்தார். மூன்று போலீஸ்காரர்களும் வீட்டில் நுழைந்து கதிர்வேலனைத் தேட ஆரம்பித்தார்கள். எல்லா அறைகளிலும் மின்சார விளக்குகள் 'பளீர் பளீர்' என்று எரிந்தன. நாற்காலிகளை இழுக்கும் சத்தமும் அலமாரிகளை நகர்த்தும் சத்தமும் ஒரே களேபரமாக இருந்தது.

பத்து நிமிஷத்துக்குப் பிறகு, திரும்பி வந்து, ''இந்த வீட்டில் அந்த மனிதன் இல்லை, ஸார்!'' என்றார்கள் போலீஸார்.

நிம்மதியான ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள் நிர்மலா.

போலீஸார் அங்கிருந்து போன பிறகு ''இதெல்லாம் என்ன ரகளை?'' என்று கேட்டான் நடராஜன்.

''இந்த ரகளை யெல்லாம் என்ன வென்றுதான் எனக்கும் புரியவில்லை'' என்றார் சுகுமாரன்.

நர்ஸிங் ஹோமுக்குத் திரும்பும்போது இதுவரை வாசலில் நின்று கொண்டிருந்த டைரக்டர் சுகுமாரனுடைய மோட்டார்காரை இப்போது காணவில்லை என்பதைக் கவனித்தாள் நிர்மலா. அவள் முகம் மலர்ந்தது. 'உள்ளே போலீஸார் மும்முரமாக விசாரணை நடத்திக் கொண்டிருந்த போது அவர் அந்தக் காரில் தப்பிப் போயிருக்க வேண்டும். எங்கே போயிருப்பார்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

ஏழாம் அத்தியாயம்

இருளில் ஒரு உருவம்

'கும்!' என்று இருந்தது இருட்டு. ராஜன் நர்ஸிங் ஹோமில் அமைதி நிறைந்திருந்தது. சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் 'டாண்!' என்று ஒரு முறை அடித்து ஓய்ந்தது. நர்ஸ் நிர்மலா தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தாள், 'இரவு மணி ஒன்றாகி விட்டதா?' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டாள். தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டு எழுந்தாள். மல்லிகா படுத்திருந்த அறைக்குள் ஓசைப்படாமல் சென்றாள். ஒரேஒரு சிவப்புநிற இரவு விளக்கு மட்டும் அந்த அறையில் எரிந்து கொண்டிருந்தது. மங்கலான அந்த ஒளியில் எதிலாவது இடித்துக் கொண்டு சத்தம் செய்து மல்லிகாவை எழுப்பி விட விரும்பாமல் சர்வ ஜாக்கிரதையாக அவளை அணுகினாள்.

நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் மல்லிகா. மேலே சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறியின் காற்றினால் அவள் நெற்றியில் புரண்ட கேசச் சுருள் இலேசாகப் படபடத்தது. அந்த நெற்றியில் சுருக்கமே இல்லாதது 'அமைதியான தூக்கம்' என்று கூறியது. அவளுடைய நீண்ட கண் இமைகள் கன்னங்களைக் கொஞ்சின. ஒரே நிதானமாக அவளுடைய சுவாசம் வெளிப்பட்டது.

கலைந்திருந்த போர்வையைச் சரிப்படுத்திக் கழுத்து வரையில் இழுத்துப் போர்த்திவிட்டுத் திரும்பினாள் நிர்மலா. திரும்பிய அவள் ஏதோ ஒரு ஆவலால் உந்தப்பட்டவளைப் போல் மறுபடியும் அந்த முகத்தைத் திரும்பிப் பார்த்தாள். நிம்மதியான தூக்கத்தில் அமைதியுடன் விளங்கிய அந்த முகத்தில் இலேசான புன்னகை தவழ ஒரு பெருமூச்சுடன் மல்லிகா புரண்டுபடுப்பதைக் கண்டாள்.

''என்ன இன்பக் கனவோ? யார் கண்டது? உனக்கென்ன வந்தது? களிப்

பனிக்கும் கனவு கண்டு, அயர்ந்து தூங்குகிறாய். ஆனால் நீ இங்கு வந்தது முதல், சென்ற ஐந்து நாட்களாக, உன்னால் தூக்கமின்றிப் பரிதவிக்கும் இரண்டுபேர்களைப் பற்றி உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியாது! அதைப் பற்றி உனக்கு அக்கறையும் கிடையாது! ஆனால் அவர்களைப்பற்றி எனக்குத் தெரியும்.

'எனக்குத் தெரியாது; ஏன் வேறு ஒருவருக்குமே தெரியாது' என்றுதான் துடியாகத் துடிக்கும் அந்த இரு உள்ளங்களும் நினைக்கின்றன. ஆனால் பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாமலா போய் விடும். நடராஜனின் உள்ளம் எனக்குத் தெரியாதா? அன்று உன்னைப் பார்த்ததுமே, அவர் உள்ளம் தடுமாறிப் போனதை நான் அறிவேன்.

'எத்தனையோ நோயாளிகளுக்கு அவர் வைத்தியம் செய்திருக்கிறார். நானும் அருகில் இருந்திருக்கிறேன். அப்போதெல்லாம் அதை ஒரு கடமையாகக் கருதித்தான் செய்து வந்தார். ஆனால் உன்னிடம் அதெல்லாம் கொஞ்சமும் பலிக்கவில்லை. உன்னைச் சரியாகக் கூடப் பரிசோதிக்க வில்லை.

'எந்த டாக்டரும் தான் வைத்தியம் புரியும் நோயாளியிடம் இம்மாதிரியான உணர்ச்சிகளுக்கு இடம் அளிக்கக் கூடாது. இது நடராஜனுக்குத் தெரியாதது அல்ல. ஆனால் தெய்வ மங்கை போன்ற எழிலுடன் விளங்கும் உன்னிடம் அந்தச் சட்ட திட்டங்கள் வரையறைகள் எல்லாம் தூள் தூளாகத் தெறித்து விழுந்து விட்டன.

'இன்னொரு உள்ளம் விமலா. என் சகோதரியைப் போன்றவள். அவள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாள் தெரியுமா? தூங்கவில்லை. படுக்கையிலிருந்து எழுந்து சன்னல் வழியே வானத்தில் மின்னும் நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அந்த நட்சத்திரங்களின் கண் சிமிட்டலில் எத்தனை முறை தன் அத்தானுடன் காதல் மொழி பேசியிருக்கிறாள்? ஆனால் அதே அத்தான் அவளோடு பேசி இன்றோடு ஐந்து நாட்களாகின்றன! ஆம்! உன்னைக் கண்டது முதல்தான்!

'நீரை நம்பி வாழும் மீனைப் போலத் தன்னை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கிற அவளை ஏய்த்து அவன் மனம் உன்னை நாடுகிறது. அன்பு நிறைந்த ஒரு உத்தமப் பெண்ணை ஏமாற்றுகிறோம் என்ற எண்ணத்தால் விமலாவிடம் பேசவே அவனுக்கு வெட்கம்! ஆனால் அந்த உணர்ச்சியைத் தவிர்க்க முடியவில்லை அவனால்.

'முன்பொருநாள் அவள் என்னையும் நடராஜனையுமே சந்தேகித்தாள். அவர் உள்ளம் தெளிந்தது தெரியாமல் மணிசேகரனிடம் சொல்ல என்னவெல்லாம் விபரீதங்கள் நேர்ந்து விட்டன! அதனாலேயே இப்போது அவள் அனுபவிக்கும் மன வேதனையை யாரிடமும் சொல்லாமல் தனக்குள்ளேயே புழுங்குகிறாள். சொன்னால் மீண்டும் என்ன விபரீதங்கள் நேருமோ என்று பயம்.

'நேற்று உன்னைப் பார்க்க வந்தாள். தன்னிடம் போட்டி போடுபவளைக் காண என்று சொல்லலாம். அப்போதும் இதேபோல் தான் நீ நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாய். நீண்ட நேரம் பார்த்துவிட்டுத் திரும்பிய

பிரபல சங்கீத வித்வான் ஸ்ரீ வெங்கடேசய்யர்



சங்கீத உலகில் புகழ்பெற்று விளங்கிய கர்நாடக சங்கீத வித்துவான் ஆலத்தூர் வெங்கடேசய்யர் அவர்கள் மறைந்தார் என்ற செய்தி ரசிகர்களை யெல்லாம் துக்கத்தில் ஆழ்த்திவிட்டது. சிறுவயதில் வேத அத்யயனம் செய்து தேர்ச்சிபெற்ற ஸ்ரீ வெங்கடேசய்யர், இசைக் கலையிலும் தேர்ச்சிபெற்று, நல்ல ஆசிரியராகவும் விளங்கி, தாம் கற்ற வித்தையை அநேகம் பேர்களுக்குப் பயிற்றுவித்து, சங்கீத உலகில் தமக்கு நிரந்தர இடம் தேடிக் கொண்டார். ஸ்ரீ வெங்கடேசய்யர் தெய்வ பக்தியும், குரு பக்தியும், தர்ம சிந்தனையும் உள்ளவர். திருவாரூரில் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் வசித்து வந்த மனையை விலை கொடுத்து வாங்கி மும்மூர்த்தி விழாக் கொண்டாட்ட சபைக்குத் தான சாஸனம் செய்ததிலிருந்து அவரது பக்தியைத் தெரிந்துகொள்ளலாம். சங்கீத உலகில் பிரபலமாக விளங்கும் ஆலத்தூர் சகோதரர்களில் ஒருவரான ஸ்ரீ சிவசுப்ரமண்ய அய்யர் அவர்களுக்குத் தந்தையும் குருவுமாவார். அன்னாரின் மறைவு சங்கீத உலகுக்கு மகத்தான நஷ்டம்.

அவள் முகத்தில் தோல்வியின் சாயல் தான் படர்ந்திருந்ததைக் கண்டேன்.

'பரிதாப உணர்ச்சி பெருகியது என் உள்ளத்தில். அவளுக்கு ஆறுதல் சொல்ல விரும்பவில்லை நான். தைரிய மூட்டி உற்சாகப்படுத்த விரும்பினேன். 'விட்டுக் கொடுக்காமல் போட்டியில் இறங்கு. உன் திறமையை எல்லாம் பிரயோகித்து வெற்றி பெற முயற்சி செய். போட்டியில் ஈடுபடாமலே தோல்வி மனப்பான்மையுடன் பின் வாங்காதே' என்று சொல்லத்தான் எண்ணினேன். ஆனால் ஏனோ சொல்ல முடியவில்லை. எப்படிச் சொல்வது? தன் உள்ளப் போராட்டம் எனக்குத் தெரியாது என்று அவள் எண்ணுகிறாள். மூடி மறைக்கிறாள். நானாகவே வலுவில்போய் எனக்கு எல்லாம் தெரியும் என்று ஆரம்பித்துச் சொல்வதா? அப்படிச் சொன்னால் அவள் அத்தானைப் பற்றி அவளிடமே குறை சொல்வதாக அல்லவா முடியும்? அதை அவள் வரவேற்பாளா?

'ஏன் இப்படியெல்லாம் செய்கிறாய் நீ? இவ்வளவும் செய்துவிட்டு நிம்மதியாகக் கண்ணயர்ந்து இன்பக் கனவு கண்டு களிப்புப் பெருமூச்சுடன் புன்னகை வேறு புரிகிறாயே?

'நடராஜன் மனத்துக்குள் அனுபவிக்கும் வெட்கத்தைப் பார்த்து ஏளனப் புன்னகையா? விமலா துன்பப்படுவதைக் கண்டு களிப்புப் பெருமூச்சா? அல்லது உண்மையாகவே நடராஜனை நேசித்து அவன் காதலைப் பெற்று விட்டதினால் உண்டான இன்பக் கனவா?

'புரியாத புதிர் நீ! நீங்காத துன்பம் நீ! ஜோடிப் புறாக்கள் கொஞ்சிக் குலவி மகிழும் வேளையிலே ஊர்ந்து நெளிந்து வரும் கருநாகம் நீ! உன்னை என்ன செய்தாலும் பரவாயில்லை!

'சீச்சீ! இப்படியெல்லாம் நினைக்க நான் யார்? அவளுக்குப் பணிவிடை செய்ய அமர்த்தப்பட்ட பணிப்பெண் நான். எனக்கு ஏது அந்த உரிமை?'

மூன்று விரல்களால் இலேசாக அவள் கரங்களைப் பற்றி நாடியைப் பார்த்தாள் நிர்மலா. அருகே தொங்கிய ஒரு அட்டையில் அதைக் குறித்துவிட்டு, அவள் புரண்டு படுத்ததால் மறுபடியும் கலைந்த போர்வையை இழுத்துப் போர்த்தினாள்.

மல்லிகாவின் அழகு பொங்கும் முகத்தை ஒரு முறை உற்றுப் பார்த்து விட்டு அந்த அறையைவிட்டு அகன்றாள்.

* * *

"நர்ஸ்!" என்ற குரல் கேட்டது.

நிர்மலா சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை.

"நர்ஸ்!" மீண்டும் அதே குரல்.

மல்லிகா நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். கூப்பிட்டது அவள் இல்லை. பின் யார்? இது என்ன பிரமை?

"நர்ஸ்! நர்ஸ்! இதோ இங்கே பார்! பின்னால் இருக்கும் ஜன்னல் அருகே!"

ஜன்னலுக்கு வெளியே தெரிந்த க்ரோட்டன்ஸ் செடிகள் மெதுவாக அசைந்தாடின. அவற்றுக்கிடையே இருளில் ஒரு உருவம் தெரிந்தது.

நிர்மலாவின் இதயம் படபட வென்று அடித்துக் கொண்டது.

"பயப்படாதே! நர்ஸ்! நான்தான்."

'பயப்படாதே' என்ற வார்த்தையைக் கேட்டதுமே அவள் நடுக்கம் சற்றுக் குறைந்து விட்டது. சட்டென்று டார்ச் லைட்டை எடுத்து. அந்த உருவத்தின் மீது ஒளியைச் செலுத்தினாள்.

"நீங்களா?"


"ஆமாம். நான்தான்" என்று பதில் வந்தது.

(தொடரும்)



ஸ்ரீ லட்சுமிநாராயண பாகவதர்

சங்கீத பரம்பரையில் பிறந்து, இளைஞர் கோஷ்டியில் முன்னணிக்கு வந்துகொண்டிருந்த தஞ்சாவூர் நாணு என்ற செல்லப் பெயரால் அழைக்கப்பட்ட ஸ்ரீ லட்சுமி நாராயண பாகவதர் அகால மரணம் அடைந்தது சங்கீத உலகுக்குப் பெரும் நஷ்டமாகும். சில மாதங்களாக நோயுற்றிருந்த அவர் விரைவில் குணம் அடைவார் என்று அவரது அபிமானிகள் நம்பியிருந்தனர். ஆனால், விதி வேறு விதமாகி விட்டது. அவரது மறைவினால் துக்கத்தில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



பாலர் மலர்



எகிப்து



காங்கோ



ஸமோவா தீவுகள்

விநோதத் தலை அணிகள்

பண்டைக் காலத்திலிருந்தே மக்கள் தலைக்கு அணிந்து கொள்ளும் 'குல்லாய்'களில் ஆர்வம் காட்டி வந்துள்ளார்கள். கிரீடம், முண்டாசு இப்படிப் பலவிதமாக நம் நாட்டிலே தலை அணிகள் இருந்து வருவதுபோல இந்தப் பக்கத்தில் சில அயல்நாட்டு மக்களின் விசித்திர மான தலையணிகளைக் காணலாம்.



ஆஸ்திரியா



ஸ்பெயின்



டுனிஸ்



செவ்விந்தியர்



டச்சு இந்தியத் தீவுகள்



ஹங்கேரி



திபெத்



ஸாலமன் தீவுகள்



1. பாதாளச் சிறையில்

நிர்மலமான ஆகாயம் - நிலவானம். பௌர்ணமிக்கு முதல் நாள். வெள்ளியை உருக்கி விட்டது போல நிலவு காய்ந்து கொண்டிருந்தது. இரவு மணி பதினொன்றுக்கு மேலிருக்கும். ஊர் அடங்கி விட்ட நேரம். மணி உல்லாசமாக சினிமா பார்த்து விட்டு வந்து கொண்டிருந்தான். இரண்டாவது ஆட்டம். வழக்கமாக சினிமா விடும் நேரமல்ல அது. ஆனால் படம் திருப்திகரமாக இல்லாததால் மணி பாதியிலேயே கிளம்பி விட்டான் வீட்டுக்கு.

மணிக்குப் பதினாறு வயதுதான். பத்தாவது படித்துக் கொண்டிருந்தான். வாட்டசாட்டமான உடல். பள்ளிக்கூட விளையாட்டுக்களிலெல்லாம் அவன் தான் முதல். அதே போல் படிப்பிலும் கெட்டிக்காரன். மணியின் அப்பா இறந்து போய் விட்டார். தகப்பனார் இல்லாத குறை தெரியாமல் வளர்த்திருந்தாள் அவன் தாயார்.

டிராயர் பையில் கைகளை நுழைத்தபடி, வானத்திலே கோட்டை கட்டிக் கொண்டு ஆட்சி செலுத்தும் சந்திரனையே பார்த்தவாறு நடந்து கொண்டிருந்தான் மணி. ஏதோ ஒரு பாட்டைச் சீட்டியில் இசைத்துக் கொண்டிருந்தது வாய். நிலாவையே பார்த்தபடி நடந்து கொண்டிருந்த அவனுக்கு அதுவும் முன்னால் நகர்ந்து செல்வது போலத் தோன்றியது. பிரமைதான்! ஆனாலும் அதை ரசித்தபடியே நடந்து கொண்டிருந்தான் மணி. புலித்தேவன் தோப்புக்குள் நுழைந்த பிறகும் சந்திரனிடமிருந்து அவன் தன் பார்வையை எடுக்கவில்லை. அசைந்தாடும் மரங்களின் உச்சியில் ஒளிந்தும் மறைந்தும் ஓடிக் கொண்டிருந்தது நிலா.

திடீரென்று மணிக்குத் தான் எங்கோ அதல பாதாளத்தில் விழுந்து விட்டது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. அடுத்த விநாடி அவன் கால்களின் கீழே பூமி இல்லை. பாதங்கள் எதிலும் படியவில்லை. பீதியினால் கூச்சலிட வேண்டுமென்ற உணர்வு இருந்தாலும் தொண்டையிலிருந்து சப்தம் வெளிப்படவில்லை. கும்மிருட்டான பாதாளத்திலே பாறைகளின் குவியல்மீது பொத்தென்று விழுந்த உணர்வை அடுத்து, சறுக்கிச் சமாளிக்க முடியாமல் தலை குப்புற உருண்டு போய்க் கொண்டிருந்தான் மணி.

உருண்டு புரண்டு ஒரு விதமாகச் சமதரையில் அவன் உடல் நிலைத்து விழுந்த பிறகுதான் அவனுக்கு மூச்சு வந்தது. அந்த அதிர்ச்சியினால் உடல் நடுங்கிக் கொண்டிருந்தாலும் மணி தைரியசாலி. இதே நிலையில் வேறு பையனாக இருந்தால் தவித்துக் கூச்சல் போட்டு மூர்ச்சையாகிக் கூட இருப்பான். ஆனால் மணி கூச்சல் போடவில்லை. 'இது எப்படி ஏற்பட்டது? நாம் இப்பொழுது எங்கிருக்கிறோம்?' என்பதை அவன் சட்டென்று யூகித்து அறிந்து கொண்டு விட்டான்.

புலித்தேவன் அரண்மனையைப் பற்றி அந்த வட்டாரத்தில் எல்லாருக்கும் தெரி


யும். அது மிக மிகப் பழங்காலத்துக் கட்டடம். சோழர்கள் காலத்திலே யாரோ ஒரு பெரிய படைத் தலைவரின் வாசஸ்தலமாக இருந்ததாம் அது. பிற்காலத்தில் அந்தப் பரம்பரையில் வந்த புலித்தேவன் என்ற வீரன் அந்த அரண்மனையில் வாழ்ந்து வந்ததால் அவன் பெயரே அதற்கு நிலைத்து விட்டது. அரண்மனை ஒரு காலத்தில் கம்பீரமாக இருந்திருக்க வேண்டும் என்பதற்கான அறிகுறிகள் அதில் காணப்பட்டன. ஆனால் இப்போது அது ஒரு பாழடைந்த பங்களா. இடிந்தும் விரிந்தும் செடிகள் முளைத்தும் பார்க்கப் பரிதாபமாகக் காட்சி யளித்தது அந்தக் கட்டடம். அந்தப் பங்களாவைச் சுற்றிப் பெரிய தோப்பு இருந்தது.

புலித்தேவன் பங்களாவின் ஒரு விசேஷம் அதில் பெரிய பெரிய நிலவறைகள் இருந்ததுதான். ஒரு காலத்தில் அந்தப் பங்களாவும் தஞ்சாவூர் அரண்மனையும் சுரங்கப் பாதை மூலம் இணைக்கப்பட்டிருந்ததாம். அது உண்மையோ இல்லையோ? இப்போதுள்ள பாழடைந்த பங்களாவைச் சுற்றிக் கீழே விசாலமான நிலவறைகள் இருந்தது மட்டும் உண்மை. யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அங்கங்கே விமானத் தாக்குதலுக்குப் பதுங்குமிடம் கட்டவில்லையா? அப்போது இந்தப் பிராந்திய மக்களுக்கு இந்த நிலவறைகளையே பழுது பார்த்து ஏ. ஆர். பி. ஷெல்டராகப் பயன்படுத்தினார்கள். பூமிக்குள் இறங்க இரண்டு மூன்று வழிகள் உண்டு. உள்ளே இறங்கினால் பல கூடங்களும் அறைகளுமாகக் காட்சியளிக்கும். யுத்தத்துக்குப் பின் அதுவும்கூடக் கவனிப்பாரற்றுக் கல்லும் மண்ணும் அடைந்து கிடந்தது. அதற்குள் இறங்கும் துவாரத்தைப் பலகைபோட்டு அடைத்து வைத்திருந்தார்கள்.

''அந்தப் பாதாள அறையின் மூடியை யாரோ அகற்றி இருக்க வேண்டும். ''ஆகாயத்தையே பார்த்துக் கொண்டு நடந்துவந்ததனால் நாம் அதில் தவறிப்போய் விழுந்து விட்டோம்'' என்ற முடிவுக்கு மணி வருவதற்கும் மெல்ல அந்தப் பாதாள அறையில் வெளிச்சம் பரவுவதற்கும் சரியாக இருந்தது. அடுத்துள்ள கூடத்திலிருந்துதான் அந்த வெளிச்சம் இவன் விழுந்து கிடந்த சுவரில் படிந்தது. மணியின் மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. 'பாழடைந்த இந்தப் பாதாள அறையில் வெளிச்சம் ஏது? பகலிலேயே இந்தப் பக்கத்தில் ஜனங்கள் தனியாக வரப் பயப்படுவார்களே! அப்படியிருக்க, இங்கு இந்த வேளையில் யார் வந்திருக்கக்கூடும்?' என்று தவிப்போடு மணி யோசித்துக் கொண்டிருக்கும் போதே வெள்ளைச் சுவரிலே ஒரு நிழல்—மனித உடலின் நிழல் தெரிந்தது. மறு பக்கத்திலிருந்த விளக்கின் ஆட்டத்தினால் அந்த நிழலும் பயங்கரமாகச் சுவரில் அங்கும் இங்குமாகப் பேயாட்டம் ஆடியது. அந்த நிழல் உருவத்தின் கையில் ஒரு துப்பாக்கி வேறு இருந்தது.

மணிக்கு எப்படி இருக்கும்? பீதியினால் பேச முடியாமல் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. உடலிலிருந்து வியர்வை வெள்ளமாக வழிந்தது. விழிகள் பிதுங்க அந்த அசைந்தாடும் பூதாகாரமான நிழலையே, அதன் கையிலுள்ள துப்பாக்கியையே பார்த்துக் கொண்டு அசைவற்று வெலவெலத்து உட்கார்ந்திருந்தான்.

ஆனால் மணி இப்படி அதிக நேரம் உட்கார்ந்திருக்கவில்லை. அந்தச் சில விநாடிகளுக்குள்ளேயே அவன் மூளை துரிதமாக வேலை செய்தது. அந்த நிழல் உருவத்திடமிருந்து, அந்தப் பேராபத்திலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்ளுவது என்று திட்டமிடலானான்.






பிடியை உதறிவிட்டு எழுந்தான். நிழல் உருவம் மெள்ள மெள்ள இவனை நெருங்கிக் கொண்டிருந்தது. அதாவது வெளிச்சம் வந்து கொண்டிருந்த அந்தத் இருப்பத்திலிருந்து அது இவனை நோக்கி நகர்ந்து வந்தது. மணி இருந்த இடத்திலோ கும்மிருட்டு. இருட்டிலே கைகளைத் துழாவினான், அருகில் ஏதாவது தட்டுப்படுகிறதா என்று. முயற்சி வீண் போகவில்லை. கரடுமுரடான ஏதோ ஒரு மேடு தட்டுப்பட்டது. ஒரு செங்கல்லை அவன் கை இறுகப்பற்றியது. அது ஒரு கற்குவியல். இடிந்து விழுந்திருந்த ஒரு சுவரின் கல்லும் மண்ணும் கலந்த மேடு. மணி தன் கையில் தட்டுப்பட்ட அந்தச் செங்கல்லை இழுத்தான். வரவில்லை. எதிலோ சிக்கிக் கொண்டிருந்திருக்கிறது. பலமாக இழுத்ததும் தடதடவென்று கற்கள் சரளை, மேலிருந்து சரிந்து கீழே விழும் ஓசையோடு செங்கல் அவன் கைக்கு வந்தது. அந்தச் சத்தத்தையே பயன்படுத்திக் கொண்டு மணி உரத்த குரலில் கத்தினான்.


"அதோ. அந்த நிழல் உருவந்தான். வாருங்கள். மெதுவாக, ஜாக்கிரதை. கலங்காதீர்கள்." மணியின் தந்திரம் பலித்தது. முன்னேறி வந்து கொண்டிருந்த நிழல் உருவம் சட்டென்று நின்றது. தான் ஒருவனல்ல, தன்னோடு இன்னும் பலர் இருக்கிறார்கள் என்று அந்த உருவம் அறிய வேண்டும் என்று தான் மணி அப்படி உரக்கச் சத்தமிட்டான். "அவன் கையில் துப்பாக்கி இருக்கிறதே என்று யோசிக்காதீர்கள். ஒரு துப்பாக்கியால் எத்தனை பேரைச் சுட முடியும்? அல்லது எத்தனை தடவை சுடுவான்? அப்படியே வளைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக் கொண்டே தன் கையிலிருந்த அரைச் செங்கல்லைச் சுவரிலுள்ள நிழலின் மீது குறி பார்த்து வீசினான். அடுத்த விநாடி அந்த நிலவறையே அதிரும்படியாக 'டுமீல்' என்று துப்பாக்கி வெடி அதிர்ந்தது. அதே நிமிஷம் தாங்க முடியாத ஒரு வலி மணியின் முழங்கால் வழியே உடலெங்கும் பரவியது. (தொடரும்)

வேடிக்கை விளையாட்டு

'மூர்த்தி'



முகம் பார்க்கும் கண்ணாடித் துண்டு இரண்டு எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஒன்றின் பின்னால் உள்ள ரசத்தைச் சிறிய வட்ட வடிவில் சுரண்டி விடுங்கள். (படம் 1) சுரண்டிய வட்ட வடிவமான பாகத்தின் மூலம் இப்போது மறு பக்கத்திலுள்ள பொருள்கள் தெரியும். ஒரு அட்டைப் பெட்டியை எடுத்து இரண்டு கண்ணாடிகளையும் ஒன்றை ஒன்று பார்த்திருக்கும்படி இரு பக்கங்களிலும் பசை கொண்டு உறுதியாக ஒட்டி விடுங்கள். ரசம் சுரண்டிய கண்ணாடி உள்ள பக்கத்தில் அதற்கு நேரே பெட்டியின் அட்டைப் பக்கத்தைக் கத்திரித்து விட வேண்டும். (அதன் வழியாகப் பெட்டிக்குள் பார்ப்பதற்காக) ஏதாவது ஒரு சிறிய பிளாஸ்டிக் பொம்மையைப் பெட்டியின் ஒரு பக்கத்தில் (படம் 3) பொருத்தி விடுங்கள். இனி மூடியில் (படம் 2ல் காட்டியது போல்) ப மாதிரி கத்திரித்து அந்தப் பாகத்தைச் சிறிது உயர்த்தி மடித்து விட்டுப் பெட்டியை மூடி விட வேண்டும். இப்போது துவாரத்தின் வழியே உள்ளே பாருங்கள். ஒரு அதிசயமான காட்சியைக் காண்பீர்கள்.



ராமுவுக்கும் சீதாவுக்கும் வீட்டுக்குப் போக வழி தெரியவில்லையாம். அவர்களுக்கு உங்களால் உதவ முடியுமா?



அரவிந்த் லாபரட்டரீஸாரின் அழகு சாதனங்கள்

ஐடெக்ஸ் (EYETEX) கண் மை
அரவிந்த் பிந்தி (ARAVIND - BINDI)
குங்கும சாந்து (ஆறு கலர்களில்)

பெண்மணிகளின் மருளுதலுடன் கூடிய மீன் விழிபோன்ற கண்களுக்கு ஐடெக்ஸ்(EYETEX) கண்மையும், கூன் பிறை போன்ற ரஞ்சிதமான சோபையும் களையும் கூடிய நெற்றிக்கு அரவிந்த் பிந்தி (ARAVIND - BINDI) குங்கும வாசனை சாந்தும் (மஜந்தா, ரோஸ், கரும் சிவப்பு, பச்சை, வயலட், கருப்பு முதலிய ஆறு தனித் தனி கலர்களில்) உபயோகித்து வந்தால் நீங்களும் பூரண சந்திரவதனம் போன்ற மிருதுவான மேனியுடன் விளங்குவீர்கள்.

குறிப்பு: கடைகளில் கிடைப்பதெல்லாம் 'ஐடெக்ஸ்' (EYETEX) கண் மை, அரவிந்த் பிந்தி (ARAVIND - BINDI) குங்கும சாந்து அல்ல. கண் மை வாங்கும்போது பெட்டியிலும், உள்ளிருக்கும் டப்பியிலும் 'EYETEX' என்ற பெயரும், சாந்து புட்டியில் அரவிந்த் பிந்தி என்றிருக்கிறதா வென்று சரியாகப் பார்த்து வாங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எங்கும் கிடைக்கும்

மட்டமான போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்



தயாரித்து விநியோகிப்பவர்கள் :

அரவிந்த் லாபரட்டரீஸ்
ஆற்காடு ரோடு :: சென்னை - 26

G. P.



கூந்தல் மற்றும் மூளை அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபக சக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில்	ரூ. 4/-
சிறிய பாட்டில்	ரூ. 2/-

எங்கும் கிடைக்கும்



ராம்தீர்த் யோகாஷ்ரமம்
பம்பாய் 14. (C. Rly)

ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க யோகாசனங்களை விளக்கும் எங்கள் அழகான ஆசனப் படத்திற்கு எழுதுங்கள். தபால் செலவு உள்பட ரூ. 2-50, மணியார்டரில் தொகை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். வீட்டிலேயே ஆசனங்களைச் சுலபமாகப் பழகலாம்.

சென்னை டெப்போ :
4/441, தங்கசாலைத் தெரு, சென்னை

துரோகியின் மகள்

சம்யுக்தா தேவியின் கண்களில் அனல் பறந்தது. உள்ளக் கொதிப்புடன் அவள் பேசிய வார்த்தைகள் கொதிக்கும் எண்ணெய்த் துளிகள் சிதறித் தெறிப்பது போல் தெறித்தன.

''ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தி மறைந்து ஒரு வருஷம்கூட ஆகவில்லை. அதற்குள் இத்தனை துரோகிகள் நாடெங்கும் தோன்றி விட்டார்களே! சிம்மாசனத்துக்குத் துராசைப்படும் மந்திரிகளும், இளம் பெண்களை அந்நிய நாட்டுக் கொள்ளைக் கூட்டத்தினரிடம் பிடித்துக் கொடுக்கும் இளஞ் சிங்கங்களும் இருக்கும்பொழுது இந்தப் பாரத வர்ஷம் ரத்தக் கண்ணீர் வடிக்காமல் என்ன செய்யும்? புனிதமான கங்கா நதி நீரத்தில்கூட உங்களைப் போன்ற துரோகிகள் இருப்பார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்று மொழிந்தாள். சம்யுக்தா தேவியின் குரல் இனிமையாக ஒலித்த போதிலும், இடி இடித்து ஓய்ந்தாற் போல இருந்தது.

சம்யுக்தா தேவியின் அழகிய செங்காந்தள் விரல்களிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவளுக்குப் பின்னால் அவளுடைய தோழிகள் இருவர் பயத்துடன் நின்றார்கள்.

அவளுக்கு முன்னால் இரண்டுபேர்கள் நின்று கொண்டிருந்தார்கள். சற்று வயதானவராகக் காணப்பட்டவர் வேறு நாட்டைச் சேர்ந்தவர் என்பது பளிச்சென்று தெரிந்தது. சப்பை மூக்கும், இடுங்கிய கண்களும் அவர் காமரூபத்துக்கு அப்பால் உள்ள ஏதோ ஒரு நாட்டைச் சேர்ந்தவரென்று பறைசாற்றியது. 'ஒருவேளை சீன தேசம் என்று புகழ்கிறார்களே, அந்த நாட்டைச் சேர்ந்தவராக இருக்குமோ' என்று எண்ணமிட்டாள் சம்யுக்தாதேவி.



ஆனந்தி



அருகில் நின்றவன் பாரத தேசத்து இளைஞன். தன்னைச் சகோதரியாக எண்ணிக் காப்பாற்ற வேண்டியவன். அவனே இந்த அயல் நாட்டினிடம் பிடித்துக் கொடுத்து விட்டான். சம்யுக்தாதேவியால் தாங்க முடியவில்லை. ஆத்திரம் அதிகமாகி, தன் செயலற்ற நிலையை எண்ணியதும் கண்ணீர் பொங்கி வழிந்து விட்டது. தான் பயந்து போய் அழுவதாக அவர்கள் நினைத்து விடக்கூடாதே என்று அவமானமடைந்தாள். வாள் வீச்சில் தான் செத்துப் போயிருக்கக் கூடாதா? இந்த மாதிரி அகப்பட்டுக் கொள்ள வேண்டுமா? தன்மீது கத்திபட வேண்டுமென்று அவள் எவ்வளவோ முயற்சி செய்தும் எதிரே நின்ற அந்த வீரன் தன்மீது வாள்வீச்சு படாமலேயேதான் சுழற்றினான். கையில் ஒரே ஒரு காயம் பட்டுவிட்டது. உடனே கையிலிருந்த வாள் பறந்து போய் விழுந்துவிட்டது.

எதிரில் நின்ற இளைஞன் புன்னகை புரிந்தான். அவளுடைய எண்ணங்களை அவன் தெரிந்து கொண்டு விட்டது போலத் தோன்றியது.

அந்தச் சீனர் சம்யுக்தா தேவியைப்பார்த்து, "இப்படி அநியாயமாய் எங்கள்மீது குற்றஞ் சாட்டலாமா? உங்களை நாங்கள் சிறையிலிருந்து விடுதலை அல்லவா செய்திருக்கிறோம். சிறைப் பிடித்திருக்கிறோம் என்று நினைப்பது நியாயமே இல்லை" என்றார்.

சம்யுக்தாதேவிக்கு அப்படியே தூக்கிவாரிப் போட்டது. 'இவர் யார்? எப்படி இவ்வளவு நன்றாகப் பாலி பாஷை பேசுகிறார்? உச்சரிப்பு விநோதமாக இருந்தபோதிலும் பேசுவது நமது பாஷைதான்.' அவள் மனம் சற்றுச் சாந்தமடைந்தது. வெந்நீரைப்போல் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் தன் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

அந்த யுவன் அவளைப் பார்த்து, "சம்யுக்தா தேவி! நீங்கள் நினைப்பதுபோல் இவர் கொள்ளைக்காரர் அல்ல. இவர் வாங்-ஹ்யூன்-ட்ஸே என்னும் சீன தேசத்து வீரர். ஹர்ஷ மகா சக்கரவர்த்தியைத் தரிசிக்கவேண்டும் என்றும், சீனத்துக்கும், பாரத வர்ஷத்துக்கும் இடையே நல்லுறவு ஏற்படச் செய்ய வேண்டுமென்றும் சீனத்து அரசர் அனுப்பிய தூதர். தமது பரிவாரங்களுடன் இங்கு வந்தபிறகு தான் சக்கரவர்த்தி மறைந்த விஷயம் அவருக்குத் தெரிந்திருக்கிறது. கன்னோஜியின் அடுத்த அரசரைப் பார்க்கவும், புத்தர் பெருமானின் பொன்னடிகள் பட்ட இடங்களைத் தரிசிக்கவும்தான் காத்துக் கொண்டிருக்கிறார். அதற்குள் எத்தனையோ கலவரங்கள் நடந்துவிட்டன" என்றான்.

சம்யுக்தா தலை குனிந்தாள். தன் தந்தை செய்த துரோகத்தால் தன் குடும்பத்துக்கு நேர்ந்து விட்ட களங்கத்தை எண்ணிக் குன்றினாள். எதிரே நிற்பவர்தான் ராஜ விசுவாசி. தான்தான் துரோகியின் மகள் என்று நினைத்து வருந்தினாள்.

"சம்யுக்தா தேவி! நீங்கள் கவலைப்பட வேண்டாம். மகாராஜா தாரசேனரின் உற்ற நண்பன் நான். உங்களுக்கு எங்கே செல்ல விருப்பமோ, அங்கே பத்திரமாகக் கொண்டு சேர்த்து விடுகிறேன். அதைப் பற்றிச் சந்தேகம் வேண்டாம். ஆனால் அருணேச்வரனுடைய படைகளை எதிர்க்க என்னிடம் போதிய சைன்யம் இல்லை. சில நாட்கள் நாம் இந்த இமயமலைச் சாரலில் ஒளிந்திருக்கும்படி நேர்ந்திருக்கிறது. அதற்கு என்னை மன்னிக்க வேண்டும். உதவி வந்ததும் நாம் இங்கிருந்து புறப்பட்டு விடலாம்" என்றார் அந்தச் சீனர்.

"என்னை ஹர்ஷவர்த்தனரது அருமை மகளும், மகாராஜா துருவ பட்டரின் தேவியுமான வீரபூரீ மகாராணியிடம் கொண்டு சேர்த்து விடுங்கள். அவரிடம் அடைக்கலம் புகவே நான் ஆசைப்படுகிறேன்" என்றாள் சம்யுக்தா தேவி.

"ரொம்ப சந்தோஷம். அவரையும், அவருடைய குமாரரையும் பார்க்கத்தானே நானும் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் வாங்-ஹ்யூன் ட்ஸே மகிழ்ச்சியுடன்.

* * *

சம்யுக்தாதேவிக்காகத் தனிப் பாசறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இரவு நேரத்தில் குளிர் தாங்க முடியவில்லை. கூடாரத்தின் நடுவில் கணப்பு எரிந்து கொண்டிருந்தது.

சம்யுக்தாவின் மனத்தில் அந்த யுவனுடைய உருவம் தெரிந்தது. 'என்ன களை பொருந்திய முகம். அவரைப் போய்த் துரோகி என்று சொன்னேனே! ஹர்ஷவர்த்தனரைப் பற்றி என்ன உயர்வாகப் பேசினார்?'

சீன தேசத்திலிருந்து வந்திருப்பவருக்குத்தான் சக்கரவர்த்தியிடம் என்ன பக்தி! சக்கரவர்த்தியின் புகழ் உலகமெல்லாம் பரவி



யிருப்பதை எண்ணிய போது சம்யுக்தையின் மனம் பொங்கிப் பெருகியது.

"என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் தோழி மாளவிகா.

"என் தலைவிதியைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஒரு ராஜத் துரோகியின் மகளாகப் பிறந்து விட்டேனே, மாளவிகா! யானை இருந்த இடத்தில் பூனை உட்கார முடியுமா? சக்கரவர்த்தியிடம் நேற்று கைகட்டிச் சேவகம் செய்து கொண்டிருந்த என் தந்தை இன்று கன்னோஜி அரியணையின் மேல் அமர ஆசைப்படுகிறாரே! இது நடக்கக் கூடிய விஷயமா? இந்தப் பேராசையை மூடி மறைக்க இந்துக்களைத் தம் கட்சியில் சேர்த்

துக் கொண்டு பௌத்தர்களுடன் சண்டை போடுவதாகப் பாசாங்கு செய்து கொண்டிருக்கிறீரே! அதை மனச்சாட்சியுள்ளவர்கள் எப்படிச் சகிக்க முடியும்?'' என்றாள்.

''தேவி! நீங்கள் ஒருமுறை இவ்வாறு பேசியதன் விளைவுதான் நாம் இங்கே இந்தக் குளிரில் நடுங்கிக் கொண்டு திண்டாடுகிறோம். மறுபடியும் அதையே நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்களே?'' என்றாள் மாளவிகா.

''உண்மை எப்போதும் மாறாது, மாளவிகா! நான் என் தந்தையிடமும் இதைத்தான் சொன்னேன். அதற்குப் பலனாகத்தான் சிறைவாசமும் காவலும் கிடைத்தன. நான் அதைப் பொருட்படுத்தவில்லை. என்னிடம் அளவில்லாத அன்பு காட்டிய விர ஸ்ரீமகாராணியை ஒரே ஒரு முறை சந்தித்து நான் இதற்கு உடந்தையாக இல்லை என்பதைத் தெரிவித்துவிட வேண்டும்'' என்றாள். அவள் மனக்கண் முன்னால் நடந்ததெல்லாம் விரிந்தது.

* * *

ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியும், அவருடைய தங்கை ராஜ்யஸ்ரீயும் பௌத்த தர்மத்தில் அசையாத நம்பிக்கை உடையவர்கள். ஆயினும் இந்துக்களை அவர்கள் சரிசமமாகவே பாவித்து வந்தார்கள். இந்துப்



பண்டிகைகளிலும் சமமாகவே கலந்து கொண்டார் சக்கரவர்த்தி. ஆயினும் ஹிந்துக்களின் மனத்தில் பொறாமை வளர்ந்து வந்தது. அவர்களைத் தூண்டிக் கொண்டிருந்தவர்கள் யார் என்பது தெரியவில்லை. பாரெல்லாம் நீதிமான் என்று பெயர் பெற்ற ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியைக் கன்னோசியில் நடந்த பௌத்த மகாநாட்டில் கொல்வதற்குக்கூடச் சூழ்ச்சி நடந்தது. நல்லவேளையாக அது பலிக்காமல் போய் விட்டது.

ஹர்ஷவர்த்தனருடைய ஒரே மகள் விரஸ்ரீ மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த வலபி நாட்டரசர் துருவபட்டருக்கு வாழ்க்கைப் பட்டிருந்தார். விரஸ்ரீ மகாராணி விவாகமாகிப் போனதெல்லாம் ஸம்யுக்தைக்குத் தெரியாது. சில வருஷங்களுக்குப் பின்னர் கன்னோசியைத் தம் அருமை மகன் தாரசேனனுக்குக் காட்ட வேண்டுமென்று விரஸ்ரீ மகாராணி பிறந்தகம் வந்திருந்தார். மகாராஜா துருவபட்டரும் வந்திருந்தார். சக்கரவர்த்தியின் மந்திரியான அருணேச்வரனின் மகள் என்பதாலும், தாயில்லாக் குழந்தை யானபடியாலும் சம்யுக்தையிடம் அளவில்லாப் பிரியம் காட்டினார் விரஸ்ரீ மகாராணி. அப்போது அவள் பாவாடை உடுத்திய சிறுமி. அவளைவிடச் சற்றுப் பெரியவனான தாரசேனனுடன் கன்னோசி அரண்மனைத் தோட்டத்தில் தினமும் விளையாடுவாள் சம்யுக்தா. மகாராணி அவளுக்குப் பல பரிசுகள் கொடுப்பார். சில சமயங்களில் கதைகள் சொல்வார். பாரத வர்ஷத்தை மகோன்னதமடையச் செய்த சக்கரவர்த்திகளான பிம்பிசாரன், அசோகர் முதலியவர்களுடைய கதைகளைச் சொல்வார். புத்தர் பெருமானைப் பற்றிய கதைகளையும் முதன் முதலில் அப்பொழுது தான் கேட்டாள் சம்யுக்தா. இவையெல்லாம் அவளுடைய மனத்தில் பசுமையாக இருந்தன.

மகாராணி திரும்பிச் சென்ற பிறகு பல நாட்கள் சம்யுக்தா கண்ணீர் விட்டு அழுதிருக்கிறாள். தாயை மறுபடியும் இழந்ததுபோலவே இருந்தது அவளுக்கு.

அப்போதெல்லாம் ஹர்ஷவர்த்தனருக்குப் பின் பட்டத்துக்கு வரக் கூடியவன் தாரசேனன்தான் என்று பெரியவர்கள் சில சமயம் பேசிக் கேட்டிருக்கிறாள். அதை யாராவது சொல்லும்போது விரஸ்ரீ மகாராணியின் முகம் மலர்வதையும் கண்டிருக்கிறாள்.

அவர்கள் திரும்பிச் சென்று நாலைந்து வருடங்களுக்குப் பின்னால் துருவபட்ட மகாராஜா இறந்து போனதாகச் செய்தி வந்தது. மகாராணிக்கு நேர்ந்த துயரத்தை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்தாள் சம்யுக்தா.

நிலைமை இப்படியிருக்க, சக்கரவர்த்தி மறைந்தவுடன் தன் தந்தை அருணேசுவரனே கங்கைக் கரையில் சில பிரதேசங்களைக் கைப் பற்றிக் கொண்டும், ஹிந்துக்களைத் தன் வசப் படுத்திக் கொண்டும் சிம்மாசனத்தில் ஏறுவதற்குச் சூழ்ச்சி செய்யவே சம்யுக்தா தேவியால் அதைப் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. அரசருடைய பரந்த நோக்கமும், விசாலமான கொள்கையும் அற்புதத்தியுடையவர்களுக்குப் புரியுமா?

அதைத்தான் அவள் தன் தந்தையிடம் கூறினாள். இந்த ராஜ்யத்துக்கு உரிமையுள்ளவர் துருவபட்ட மகாராஜாவின் குமாரர் ஒருவர் தான். அவர்தான் சக்கரவர்த்தியின் ரத்தத்துடன் தொடர்பு உடையவர் என்று சொன்னாள். ஆகா! அப்போதுதான் அவருக்கு என்னமாய்க் கோபம் வந்தது. சொந்த மகளைச் சிறையில் போடும் அளவுக்கு அல்லவா அந்தத் துராசை வளர்ந்து அவர் மனத்தைக் கெடுத்து விட்டது.

மகாராணி விரஸ்ரீயும் யுவராஜா தாரசேனரும் வலபி நாட்டிலிருந்து கன்னோசிக்கு மாறு வேஷத்தில் வருகிறார்கள் என்று அருணேச்வரனுக்குச் செய்தி கிடைத்தது. ஆகவே தம் மகளைத் தகுந்த காவலுடன் கன்னோசியிலிருந்து சிராவஸ்தி நகருக்கு அனுப்பி வைத்தார் அருணேசுவரன். அதை ஒற்றர்கள் மூலம் எப்படியோ சிலாதித்யனும் அந்தச் சீனரும் தெரிந்துகொண்டு வழிமறித்து அவர்களைத் தப்புவித்தார்கள். அவர்களைத்தான் கொள்ளைக் கூட்டத்தார் என்று நினைத்து எதிர்த்துப் போராட ஆரம்பித்து விட்டாள் சம்யுக்தா.

* * *

நாட்கள் ஓடி மறைந்தன. அருணேசுவரனுக்கு எதிராகப்படைகளைத்திரட்ட நேபாளத்துக்குச் சென்ற அந்த யுவன் சிலாதித்யன், பல நாட்களுக்குப் பின்னால் திரும்பி வந்தான். அதுவரையில் அந்தப் பாசறையிலேயே அவனுக்காகக் காத்திருந்த சம்யுக்தாவின் மனத்தில் இப்போது குதூகலம் நிறைந்தது.

வைகறைப் பொழுது இமயமலைச் சாரலில் அற்புதமாகத்தான் இருந்தது. உதயசூரியன் பனிப்படலத்தின் வழியாக மங்கலாகத் தான் தெரிந்தது. அந்த ஒளியில் தூரத்தில் தெரிந்த தாவளகிரி, பொன்மயமாகப் பிரகாசித்தது. பனி மூடிய சிகரத்தின் அற்புத அழகும், விடியற்கால நேரத்தின் இனிமையும், கந்தகி நதியின் புனிதமான நீர்ப் பிரவாகமும், எல்லாவற்றுக்கும் மேலாகக் காதலர்களின் இதயமும் உள்ளங்களும் அந்த இடத்துக்கு ஒரு புதிய சோபையை அளித்தன.

"உன் கைகளில் பட்ட காயம் ஆறி விட்டதா?" என்று கேட்டுக் கொண்டே கைகளை நீட்டினான் சிலாதித்யன். அவனுடைய இரும்பை ஒத்த கரங்களில், மலர் போன்ற மென்மை வாய்ந்த சம்யுக்தா தேவியின் கரங்கள் அடைக்கலம் புகுந்தன; ஆவலுடன் அவளுடைய விரல்களைப் பிரித்துப் பார்த்தான் சிலாதித்யன். நான்கு விரல்களில் கத்திக் காயத்தின் வடுக்கள் இருந்தன.

"ஆகா! தாமரைப் பூவைப்போன்ற உன் கரத்தில் இப்படி ஒரு வடு ஏற்பட்டு விட்டதே?" என்று உண்மையான வருத்தத்துடன் கூறினான் சிலாதித்யன்.

"அந்த வடுக்கள் ஒவ்வொன்றும் எனக்கு ஒரு இனிய சம்பவத்தை என்றும் ஞாபகப் படுத்திக் கொண்டிருக்கும்."

"நீ அன்று பல்லக்கிலிருந்து இறங்கிப் பக்கத்தில் விழுந்திருந்த வீரனுடைய வாளை உருவிக் கொண்டு தாவி வந்தபொழுது, ஒரு பெண்புலியைப் போலல்லவா தோன்றினாய்? உன்னைப் போன்ற வீரப் பெண்மணிகள் இருப்பதால் தான் இந்த பாரத வர்ஷத்துக்குப் புண்ணிய பூமி என்ற பெயர் விளங்குகிறது" என்றான் சிலாதித்யன்.


அனஸின்
தலைவலி, ஜலதோஷம், ஜுரம்
மற்றும் தசைவலிகளிலிருந்து
நிவாரணமளிப்பதில் சிறந்தது
னெனில் அதில் நான்கு மருந்துகள் சேர்ந்துள்ளன.
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
WHITEHALL PHARMACAL COMPANY, NEW YORK
வைத்திய விஞ்ஞானிகள், 'அனஸின்' என்பது வலியை அகற்றும் தீவிர சக்திவாய்ந்த அநேக மருந்துகளின் சரியான விகிதாச்சார கலவை என்று கூறுகிறார்கள். அது வேறெந்த ஒரே மருந்து கலவையைவிட அதிதுரிதமாயும், அபாயமின்றியும், நிச்சயமாயும் நிவாரணமளிக்கிறது என்று ஞாபகத்தில் வையுங்கள்! 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலவையாகும். ஆகவே 'அனஸினை', தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைவலிகளிலிருந்து துரிதமாயும், முற்றிலும் குணமளிப்பதில் சிறந்தது. எப்பொழுதும் வீட்டில் 'அனஸின்' வைத்திருங்கள்.
GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. REGISTERED USER
(R) TAM.

''உங்களைப் போன்ற தர்ம வீரர்கள் இருப்பதால்தான் இந்த நாடு உலகப் பிரசித்தி பெற்றிருக்கிறது!'' என்றாள் சம்யுக்தா.

''பாவம்! உன் பல்லக்கையும், உன்னை அழைத்துச் சென்றவர்களையும் சப்பை மூக்கும், இடுங்கிய கண்ணுமுடையவர்கள் சூழ்ந்து கொண்டதும் உனக்கு எப்படி இருந்திருக்கும்?'' என்றான் அவன்.

''எப்படி இருந்தது என்று வார்த்தைகளால் விவரிக்க முடியுமா? அவர்களிடம் அகப்பட்டுக் கொள்வதைவிட, சண்டை போட்டு இறந்து போவதே மேல் என்று தோன்றியது. இமயமலைச் சாரலில் எங்கே ஓடி ஒளிய முடியும்? ஆனால் நான் கத்தியை நான்கு முறை சுழற்றுவதற்குள்தான் நீங்கள் எங்கிருந்தோ ஓடி வந்து கத்தியைத் தட்டி விட்டீர்களே. உங்களுடைய உடைவாளின் அடையாளம் அழியாமல் பதிந்து விட்டதே!'' என்றாள் ஸம்யுக்தா தேவி.

''பாவம்! உனக்கு எப்படி வலித்திருக்கும்?'' என்று சொல்லிக் கொண்டே அவளுடைய கரத்தைக் கண்களில் ஒற்றிக் கொண்டான் சீலாதித்யன்.

சம்யுக்தாதேவியின் முகத்தில் நாணப் புன்னகை மிளிர்ந்தது. கைகளை மெதுவாக அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டே, ''இது கிடக்கட்டும். நேபாளத்துக்குப் போய் வந்தீர்களே! என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள்.

''அதைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? நேபாள தேசத்து மன்னர் படை அனுப்பியிருக்கிறார். அது வந்துசேர இரண்டு நாட்கள் ஆகும். காமரூபத்திலிருந்தும் ஒரு சேனை வருவதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே கன்யாகுப்ஜத்தை நாம் மீட்பது நிச்சயம்'' என்றான் சீலாதித்யன்.


சீலாதித்யன் இவ்வாறு சொல்லும்போதே பல குதிரைகள் பாய்ந்து வரும் சத்தம் கேட்டது. அங்கங்கே போடப்பட்டிருந்த கூடாரங்களிலிருந்து சீன வீரர்கள் வேகமாக ஓடி வந்தார்கள்.

''நீ பாசறைக்குப் போய்விடு. வருவது யாரென்று தெரியவில்லை. உதவிப் படை இப்போது வர நியாயமில்லை. நான் போய்ப் பார்க்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே ஓடினான் சீலாதித்யன்.

சம்யுக்தா தேவி தயங்கி நின்றாள். காட்டுப் பாதையின் வழியே குதிரைகள் பல ஓடி வந்தன. அதில் முன்னணியில் பாய்ந்து வந்த குதிரை மீது ஆரோகணித்திருந்தவரைப் பார்த்ததும் ''ஆ'' என்று அவள் அலறிவிட்டாள். நின்ற இடத்திலிருந்து நகரவும் சக்தியில்லாமல் ஸ்தம்பித்துப் போய் நின்றாள்.

பக்கத்துப் பாசறைக்குள் ஓடிச் சென்று ஆயுதங்களுடன் வெளியே ஓடிவந்த சீலாதித்யன், பாய்ந்து வரும் குதிரைகளையும், சம்யுக்தை செயலிழந்து நிற்பதையும் ஒரே கணத்தில் பார்த்து விட்டான்.

அவனுக்கு விஷயம் அந்தக் கணத்திலேயே புரிந்து விட்டது. சம்யுக்தா தேவி தன் தந்தையைப் பார்த்து விட்டுத்தான் அப்படி நின்றாள். குதிரைகள் காட்டுக்குள்ளே கட்டப்



''கண் தெரியவில்லையா உமக்கு? கண்ணாடி போட்டுக்கொள்வதுதானே!''

பட்டிருந்தன. ஆகையால், அவற்றை அவிழ்த்து ஏற முடியாது. முதலில் ஓடி வந்த குதிரையை நோக்கித் தாவிச் சென்றான் சீலாதித்யன். அதே கணத்தில் அருணேச்வரருடைய கையிலிருந்த சிறிய கத்தி ஒன்று பளபளவென்று ஜொலித்துக் கொண்டு பறந்தது. அது நேரே சம்யுக்தா தேவியின் தோளில் பாய்ந்தது.

''துரோகி!'' என்று உறுமினான் அருணேச்வரன். ''ஐயோ!'' என்ற அலறலுடன் சாய்ந்தாள் சம்யுக்தா. அவளுடைய பாசறையிலிருந்து தோழி மாளவிகா ஓடிவந்தாள்.

அதற்குள் கந்தகி நதிக் கரையில் ரத்த வெள்ளம் பெருக ஆரம்பித்து விட்டது.

அருணேச்வரரும் ஏமாந்துதான் போனார். எதிர்ப்பவன் இளைஞன் என்ற அலட்சியத்துடன் கத்தி வீச ஆரம்பித்தார். சீலாதித்யனின் முதல் வாள் வீச்சில் குதிரை விழுந்து விடவே, அவரும் கீழே நின்று சண்டை போட வேண்டியதாயிற்று. வாள் வீச்சில் அவனுக்குத் தாம் நிகரில்லை என்பதைச் சீக்கிரத்தில் உணர்ந்து கொண்டார்.

அவருக்குக் கை சளைக்கும் சமயத்தில் உதவிக்கு இரண்டு வீரர்கள் வந்து விட்டார்கள். அவர் பின் வாங்கிக் கொண்டார்.

சீன வீரர்களுடைய கை சளைத்துக்கொண்டு வந்தது. வாங்-ஹ்யூன்-ட்ஸேயின் தோளில் பலத்த காயம் பட்டுவிட்டது. அவரை இரண்டு பேர்கள் தூக்கிக் கொண்டு போனதைப் பார்த்தான் சீலாதித்யன். அவன் மனமும் தளர்ந்து விட்டது.

அந்தச் சமயத்தில் மறுபடியும் குதிரைகள் ஓடி வரும் சத்தம் கேட்டது. சீலாதித்யனின் முகம் மலர்ச்சியுற்றது. அருணேச்வரனின் முகம் சிறுத்துப் போயிற்று.

ஓநாய்க் கூட்டத்தை யானைகள் விரட்டுவது போல் அருணேச்வரனின் படைகளை விரட்டி விட்டார்கள் புதிய வீரர்கள். அருணேச்வரனின்கதி பரிதாபத்துக்குரியதாகியது. அடிபட்டுக் கீழே விழுந்த அவனை யாரும் கவனிக்காமல் ஓடிப் போய் விட்டார்கள்.

சீலாதித்யன் பாசறைக்குப் பறந்து சென்றான். சம்யுக்தா தேவிக்குப் பிரக்ஞை இல்லாத போதிலும் உயிருக்கு ஆபத்தில்லை என்று தெரிந்து ஆறுதல் அடைந்தான்.

பிரக்ஞை அற்ற நிலையிலேயே சம்யுக்தா இரண்டு நாட்கள் இருந்தாள். வாங்-ஹ்யூன்ட்ஸேயின் வைத்தியர் அவளையும் கவனித்து

வந்தார். மூன்றாவது நாள் அவள் கண்களைத் திறந்த போதுதான் சிலாதித்யனின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

• • •

கன்னோசியை நெருங்கியாகி விட்டது. சம்புக்தையின் பல்லக்கின் அருகில், வெண்புரவி மீது கம்பீரமாக வந்து கொண்டிருந்தான் சிலாதித்யன்.

''மகாராணியைப் பார்க்கப் போகிறோம் என்று எனக்கு ஒரே குதூகலமாக இருக்கிறது'' என்றாள் சம்புக்தா. ''இப்போது அரண்மனையில்தானே இருப்பார்?''

''ஆமாம்! மகாராஜா தாரஸேனர் எப்படி இருக்கிறார்? நான் குழந்தையாக இருந்த போது பார்த்தது. சகஜமாக இருப்பாரா? அல்லது கடுமையாக இருப்பாரா?''

''தாரஸேனர் கொஞ்சம் சிடுமூஞ்சி என்று தான் சொல்வார்கள். சரியாகவே பேச மாட்டாராம். அவர் இந்த ராஜ்ய பாரத்தை நிர்வகித்து நல்ல பெயரெடுக்க வேண்டுமே என்று கவலையாகத்தான் இருக்கிறது'' என்றான் சிலாதித்யன்.

அரண்மனை வாசலில் ஒரே கூட்டமாக இருந்தது. வாங்-ஷ்யூன்-ட்ஸே முதலியவர்கள் நெருங்கியதும், மகாராஜாதி ராஜ பரம பட்டாரக பரமேச்வர சக்கரவர்த்தி தாரஸேனர் வாழ்க'' என்ற கோஷம் வானளாவ எழுந்தது.

எல்லோரும் அரண்மனைக்குள் சென்றார்கள்.

மகாராணி விரஸ்ரீ அங்கே காத்துக் கொண்டிருந்தார். சம்புக்தாவுக்கு அவரைப் பார்த்ததும் புல்லரிப்பு ஏற்பட்டது. ஓடிச் சென்று அவரை நமஸ்கரித்தாள். மகாராணி அவளைத் தூக்கி அணைத்து ஆசிர்வதித்தார்.

பிறகு சம்புக்தாவின் கண்கள் சபையைச் சுற்றி வட்டமிட்டன. 'சின்னஞ்சிறு வயதிலே தான் விளையாடி மகிழ்ந்த அரசர் தாரஸேனர் 'எங்கே?' என்ற கேள்வி உள்ளத்தில் பிறந்தது.

அப்போது சிலாதித்யன் வேகமாக வந்து மகாராணியின் கால்களில் விழுந்து எழுந்தான். மகாராணி அவனையும் தூக்கி நிறுத்தி உச்சிமுகர்வதை ஆச்சரியத்துடன் பார்த்தாள் சம்புக்தா. ''சௌக்கியமாக இருக்கிறாயா, அப்பா? நீ சென்றது முதல் என்னைக் கவலை பிடுங்கித் தின்றுவிட்டது. குலக்கொழுந்தான உனக்கு எதுவும் வராமல் இருக்க வேண்டுமே என்று ஆண்டவனைப் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தேன்'' என்றார்.

சம்புக்தாவுக்கு இதயம் வெடித்து விடும் போல் ஆகி விட்டது. வெடித்து வந்த கண்ணீரைச் சிரமப்பட்டு அவள் வெளியே கொட்டாமல் அடக்கிக் கொண்டாள்.

• • •

நந்தவனத்துத் தோட்டத்தில் கண்ணீருடன் அமர்ந்திருந்தாள் சம்புக்தா. அவள் மனம் பல குழப்பமான எண்ணங்களால் அலைப்புண்டிருந்தது. 'சிலாதித்யனிடம் பழகியபோது அவன் மகாராஜா என்று அறியாமலிருந்தது எவ்வளவு அசட்டுத்தனம்? அது தெரிந்திருந்தால் இப்படித் தன் மனத்துக்கு இடங் கொடுத்திருப்பாளா? தான் மகாராணியாவதற்குத் தகுதியற்றவள் என்பது தெரியாதா? அவரை ஒருநாளும் மணந்துகொள்ள முடியாது. மகாராணியே சொன்னாலும் முடியாது. ஆனால் சம்புக்தையின் இந்த முடிவுக்கு இன்னொரு காரணமும் இருந்தது. மகாராஜா தாரஸேனர் அவளுடைய தந்தை அருணேச்வரனை அந்த வாங்-ஷ்யூன்-ட்ஸேயுடன் சீன தேசத்துக்குக் கைதியாக அனுப்பியதை அவளால் மன்னிக்கவே முடியவில்லை. சீன தேசத்தில் போனதும் தன் தந்தையை ''இந்தியாவிலிருந்து பிடித்துக் கொண்டுவந்த அடிமை'' என்று ஒரு மிருகத்தைக் காட்டுவது போல எல்லாரிடமும் காட்டுவார்கள். அதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை அவளால். காலடி ஓசை கேட்டுத் திரும்பினாள்.

இப்போது கன்னோசியின் அரசனான சிலாதித்யன் புன்னகையுடன் வந்து கொண்டிருந்தான். ''ஏன் அம்மா தனியாக இருக்கிறாய்?'' என்று கேட்டான். சம்புக்தா பதில் எதுவும் சொல்லவில்லை.

''என்னிடம் பேச மாட்டாயா?''

''என்னை மன்னித்து விடுங்கள், பிரபு! எனக்கு நீங்கள் யாரென்பது தெரியாது'' என்று விசும்பினாள் சம்புக்தாதேவி.

குறும்புச் சிரிப்புடன் தாரஸேனர், ''ஒரு காரியத்துக்கு நீ ஒப்புக் கொண்டால் உன்னை மன்னித்து விடுகிறேன்'' என்றார்.

''என்ன?''

''மகாராணி உன்னைத் தன் மருமகளாக்கிக் கொள்ள விரும்புகிறார்'' என்றார் தாரஸேனர்.

''பிரபோ! நேற்றுவரை உங்களை நான் அரசருடைய சிநேகிதர் என்று நினைத்து வந்தேன். அப்போது என் மன நிலை வேறுவிதமாக இருந்தது. இப்போது என் மனம் மாறிவிட்டது. அதற்கு நான் அருகதை அற்றவள், பிரபோ!'' என்றாள்.


''ஏன் அப்படிச் சொல்கிறாய்? நான் உனக்கு என்றும் சிலாதித்யன்தான்.''

''எனக்கு சரி, ஸ்வாமி! ஆனால் உலகம் அதை ஒப்புக் கொள்ளாது. தாங்கள் புகழ் பெற்ற கன்னோசியின் அரசர். புஷ்யபூதி வம்சத்தினர் அரசாண்ட சிம்மாஸனத்துக்கு உரிமை உடையவர். நானோ ஒரு துரோகியின் மகள். என் தந்தை தேசத்துரோகம், ராஜத்துரோகம், குலத்துரோகம் மூன்றும் செய்தவர். என்னைத் தாங்கள் மணந்துகொண்டால் நாளைக்கு உலகம் உங்களை ஏசும். என்னை ஏற்றுக் கொண்டால் உங்களைச் சேர்ந்தவர்களே கலகம் செய்வார்கள். பௌத்தர்களும் ஆத்திரமடைவார்கள். ஹிந்துக்கள் மறுபடியும் சதி செய்வார்கள். வேண்டாம், நான் தங்களை அடையும் பாக்கியம் பெற்றவள் அல்ல. என்னை மறந்து விடுங்கள்'' என்று கண்ணீருக்கிடையே கூறினாள் சம்புக்தா.

''சம்புக்தா! வேண்டாம். இது அசட்டுத்தனம்'' என்றார் தாரஸேனர்.

''இல்லை, பிரபோ! நான் போய் வருகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியேறினாள் சம்புக்தா. அவளுடைய நடையிலேயே ஒரு உறுதி தெரிந்தது.

சில நாட்களுக்குப் பிறகு கன்னோசியை அடுத்துள்ள புத்தர்பெருமான் கோயிலில் ஒரு இளம் பிக்ஷுணி, ''காமே ஸிமித்யா சாரா வேரமணி ஸிக்காபதம் ஸமாதியாமி'' என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.


புத்தகங்களை விரும்புவோர் சிலரே . . .
GESTALT PSYCHOLOGY
ஆனால் எல்லோரும் விரும்புவது
Parry's
பாரிஸ்
மிட்டாய்களே
ஏனெனில் அவை ருசியுள்ளவை, ஆரோக்கியமானவை,
சுத்தமானவை.
தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்



நாகநாதன் எழும்பூரிலே ரயில் வண்டியில் ஏறியபோது கூட்டம் தாங்க முடியவில்லை. வண்டி வண்டியாகப் பார்த்துச் சோர்வடைந்தான். கடைசியாக ஒரு வண்டியில் முண்டியடித்து அவனும் அவன் மனைவி கேதாரியும் ஏறிக் கொண்டார்கள்.

உட்கார இடமின்றி ஒரு பெண் நின்று கொண்டிருப்பதைக் கண்ட ஓர் இளைஞன் இடத்திலிருந்து எழுந்து, "இங்கு உட்காரச் சொல்லுங்கள், ஸார்!" என்றான் நாகரிகமாக.

உடனே நாகநாதன், "கேதாரி! அங்கு உட்கார்ந்து கொள்" என்றான்.

கேதாரி பதுமை போல் நின்றாள். நாகநாதனைப் பார்க்கவுமில்லை, பதில் பேசவுமில்லை; உட்காரவுமில்லை.

ஒன்றிரண்டு நிமிஷங்கள் சென்றன. இளைஞன் எழுந்த இடம் இன்னும் காலியாகவே இருந்தது.

"நான் சொல்வது காது கேட்கவில்லை? அங்கு உட்கார்ந்து கொள் என்றேனே!" என்றான் நாகநாதன் மறுபடியும். இப்போது அவனுடைய குரலில் சிறிது கடுமை தொனித்தது.

"உம்" என்றாள் கேதாரி.

நாகநாதன் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டான். கேதாரி அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வை அவன்மீது அவளுக்குள்ள வெறுப்பைப் பறைசாற்றியது.


இந்த ஊடலைக் கண்ட இரு பிரயாணிகள் ஒருவரையொருவர் பார்த்துப் புன்முறுவல் செய்தனர். அப்பால் உட்கார்ந்திருந்த நடுத்தர வயதுடைய ஒருவர், "என்ன அம்மா இது! பாவம், அவன் நல்ல பையன். உட்கார இடம் கொடுத்தான். வீட்டுக்காரர் இவ்வளவு தூரம் சொல்லுகிறார். பேசாமல் இன்னும் நின்று கொண்டிருக்கிறாயே?" என்று கடிந்து கொண்டார்.

அதன் பிறகுதான் கேதாரி 'நக்' என்று அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

வண்டி வெகுதூரம் செல்லும் வரையில் நாகநாதன் கேதாரி உட்கார்ந்திருந்த பக்கம் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. அவளும் சளைக்கவில்லை. வண்டிக்கு வெளியில் இருளுக்குள் எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

வண்டியில் கூட்டம் சிறிது சிறிதாகக் குறைந்து, சிதம்பரம் சென்றபிறகுதான் நாகநாதன் படுப்பதற்குச் சிறிது இடம் கிடைத்தது.

எனினும், அவன் படுத்துக் கொள்ளவில்லை. படுத்து என்னபயன்? மாயவரத்



இல் வண்டி மாறவேண்டும்; மறுபடியும் திருவாரூரிலும் வண்டி மாறித் தொலைக்க வேண்டும். கேதாரியை அடியக்கமங்கலத்தில் உள்ள அவளுடைய பிறந்தகத்தில் ஒரே அடியாகக் கொண்டு போய் விட்டு வருவதற்காக நாகநாதன் சென்று கொண்டிருந்தான்.

நாகநாதனின் வாழ்க்கை விசித்திரமானது. அவன் நல்ல உத்தியோகத்தில் இருந்தான். அத்துடன் வடிவழகியான கேதாரி அவனுக்கு மனைவியாக வாய்த்திருந்தும் கூட வாழ்க்கையில் சிறிதாவது இன்பம் காணும் பாக்கியம் அவனுக்குக் கிடைக்கவில்லை. கேதாரியின் வனப்பைக் கண்டு மயங்கி, குலம் கோத்திரம் தெரியாத இடத்தில் போய் மணம் செய்து கொண்டோமே என்று அவன் அடிக்கடி வேதனைப்பட்டது உண்டு.

ஒரே வார்த்தையில் கூறுவதாயின், நாகநாதனின் தாம்பத்ய வாழ்க்கை தினசரி வாக்குவாதத்திலும் தர்க்கத்திலுமே சென்று கொண்டிருந்தது.

நாகநாதன் உயர்ந்த குணம் படைத்தவன். மனைவியை அடிமையாக நடத்துவதோ, கொடுமைப் படுத்துவதோ மகா பாதகமானது என்று கருதுபவன்.

"இந்தக் காளி அவனிடம் நடந்து கொள்வதற்கு, வேறொருவனாக இருந்தால் அவளை விரட்டித் தொலைத்துத் தலைமுழுகி யிருப்பான்" என்று அடிக்கடி நாகநாதனின் தாயார் கூறித் தன் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொள்வாள்.

ஒரு சமயம் நாகநாதனுக்கும் கேதாரிக்கும் வாக்குவாதம் வலுத்தது. நாகநாதன் பொறுமை இழந்தான். "ஸர்ப்பம் பார்வைக்கு அழகாக இருப்பது போல் நீயும் அழகாக இருக்கிறாய். ஆனால், ஸர்ப்பத்துக்கு வாயில்தான் விஷம். உனக்கோ உடல் முழுவதும் விஷம்" என்றான்.

"நீங்கள் இப்படி விஷத்தைக் கக்குவது போல் பேசுவது, உங்கள் பெயருக்குப் பொருத்தமாகத்தான் இருக்கிறது" என்றாள் கேதாரி பதிலுக்கு.

என்ன துணிச்சல்! அம்பு போன்ற இந்த வார்த்தைகளைக் கேட்டதும் நாகநாதனின் தாயார், "அடி, பாவி!" என்று பதறி விட்டாள்.

கேதாரியின் வார்த்தைகள் சவுக்கால் அடிப்பது போல் இருந்தன நாகநாதனுக்கு. கேதாரியின் கன்னத்தில் 'பளீர்' என்று ஓர் அறை விழுந்தது. அழகிய அவளது முகம் குங்குமமாகச் சிவந்து விட்டது. கண்ணீர் பெருகியது. குப்புறப் படுத்துக் கொண்டு விம்மினாள்.

அதன்பின் கேதாரியின் வக்ரபுத்தி அதிகமாயிற்றே ஒழிய, அவளது போக்கில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

கேதாரிக்கு ஏதோ உள்ளூறக் கொடிய நோய் இருக்கிறதென்று வைத்தியர்கள் கூறினார்கள். அவளுக்குப் பிசாசுதான் பிடித்திருக்கிறதென்று மாந்திரீகர்கள் கூறினார்கள்.

கடைசியில் நாகநாதன் அவளை அவளது பிறந்தகத்தில் கொண்டுபோய் விட்டுவிடத் தீர்மானித்தான். பிறந்தகத்தில் சில மாதங்கள் இருந்தால், அவளது மனம் மாறலாமென்ற நம்பிக்கை நாகநாதனுக்குச் சிறிதளவு இருந்தது. அந்த ஆசையையும் பார்த்து விடத் தீர்மானித்தான்.

* * *

ரயில் வண்டியில் நாகநாதன் வேதனையே உருவாக உட்கார்ந்திருந்தான். கேதாரி எதிரில் உள்ள பெஞ்சியில் படுத்திருந்தாள். அவளையே நாகநாதன் பார்த்துக் கொண்டிருந்தான். "இவள் சிறிதளவாவது என் மனத்துக்கு இதமாக நடந்து கொள்ளத் தொடங்கினால், என் வாழ்க்கை எவ்வளவு பிரகாசம் அடையும்?" என்று அவன் மனம் எண்ணியது.

ஒரு பெருமூச்சு விட்டான். அந்த எண்ணம் வெறும் பிரமை என்று கூறுவதுபோல் இருந்தது அவனது நீண்ட பெருமூச்சு.

மாயவரத்தில் வண்டி மாறியபோது வண்டியில் கூட்டமே இல்லை. 'சென்னையிலிருந்து கூட்டத்தில் கஷ்டப்பட்டு வந்ததற்குப் பிராயச்சித்தமாக ஒரு தனி

வண்டியே கிடைத்து விட்டது' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான். அந்த நிலையிலும் அது அவனுக்கு அற்ப சந்தோஷத்தைக் கொடுத்தது!

ஒரு பெஞ்சியில் நாகநாதன் போய் உட்கார்ந்தான். மற்றொரு பெஞ்சியில் கேதாரி அவனுக்கு எதிர்ப்புறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு படுத்தாள்.

அவளது அலட்சியம் நாகநாதனுக்கு ஒரு புறம் ஆத்திரத்தையும் மற்றொரு புறம் சகிக்க முடியாத வேதனையையும் உண்டுபண்ணியது. இருந்தாலும் பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தான். அவனது தாம்பத்ய வாழ்க்கை ஆரம்பமாகிப் பல வருஷங்களாகியும் அவள் அவனிடம் ஒருதடவைகூட இன்பமாகப்பேசியது கிடையாது. 'சே, என்ன இல்லற வாழ்க்கை!' என அவன் அலுத்துக் கொண்டான். கார் மேகங்கள் சூழ்ந்த வானம்போல் அவன் மனம் இருள் சூழ்ந்து கிடந்தது.

நாகநாதனுக்கு அந்த இடத்தில் உட்கார மனம் கொள்ளவில்லை. வெறுப்புடன், அந்த வண்டியிலேயே வேறொரு புறத்தில் காலியாக இருந்த இடத்தில் போய் உட்கார்ந்தான். அவனது மனம் தனிமையை நாடியது. எவ்வளவு ஆனந்தமாக இருக்க வேண்டிய வாழ்வை ஒரு பெண்ணின் அர்த்தமற்ற வீம்பும் வெறுப்பும் எவ்விதம் விஷமாக்கி விட்டன என்பதை நினைக்க நினைக்க நாகநாதனின் மனம் வெதும்பியது.

பாவம், அவனது துரதிர்ஷ்டம் அவன் நாடிய தனிமைக்கும் இடம் கொடுக்கவில்லை. யாரோ ஓர் இளம் தம்பதிகள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்கள். இருவரும் குதூகலமாகப் பேசிக் கொண்டு உட்கார்ந்தார்கள். உடனே நாகநாதன் அவ்விடத்திலிருந்து எழுந்து ஏற்கெனவே உட்கார்ந்திருந்த இடத்துக்கே திரும்பி வந்துவிட்டான்.

நாகநாதன் மனம் தங்களையும் அந்தத் தம்பதிகளையும் எடை போட்டுப் பார்த்தது. அவர்கள் மீது அவனுக்குச் சிறிது பொறாமை கூட ஏற்பட்டது.

வெளித்தோற்றம் சம்பந்தப்பட்ட வரையில் அவர்களைப் பொருத்தமற்ற தம்பதிகள் என்று கூடச் சொல்லலாம். அந்த யுவதி நல்ல லட்சணம் வாய்ந்தவளாகவும் திடகாத்திரத்துடனும் இருந்தாள். இளைஞன் நோயாளியைப் போல் மெலிந்து இருந்தான். எனினும், அவர்கள் எவ்வளவு அன்னியோன்னியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்! அவள் அடிக்கடி குழைந்து குழைந்து பேசி அந்த இளைஞனைச் சிரிக்கும்படி செய்தாள். உடனே அவன் மனத்தில் ஒரு வேகம் உண்டாயிற்று. கேதாரியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய், ''இந்தத் தம்பதிகளைப் பார்'' என்று இடித்துக் கூற வேண்டும் போலிருந்தது.


இதையெல்லாம் சிறிதும் லட்சியம் செய்யாமல் ரயில் வண்டி அதற்கே உரித்தான சத்தத்துடன் சென்று கொண்டிருந்தது. அடியக்கமங்கலத்தில் வண்டி நின்றதும், இருவரும் இறங்கி ஒரு மாட்டு வண்டி வைத்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

* * *


அவர்களைக் கேதாரியின் பெற்றோர் அன்பாக வரவேற்றனர். நாகநாதன் அன்று மாலையே அங்கிருந்து சென்னைக்குத் திரும்பி விடத் தீர்மானித்திருந்தான். ஆனால், இரண்டு நாட்கள் தங்கிச் செல்லும்படி கேதாரியின் பெற்றோர்கள் வற்புறுத்தினர். மாமனாரின் வேண்டுகோளும், மாமியாரின் கண்ணீரும் அவன் மனத்தை மாற்றிவிட்டன. அவர்களுக்காக இரண்டு நாட்கள் அங்கே தங்கிச் செல்வதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை.

வீட்டில் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருப்பது? தாயார் வீட்டுக்குச் சென்ற




ஆர்யன்
டூத் பிரஷின்
நெடுங்காலச்
சிறப்பு
...ஆர்யன் பிரஷின்
சிறப்பு 25 வருஷத்
திய தளரா உழைப்
பின் பயன்தான்.
இன்று ஒவ்வொரு
வீட்டிலும் இதை
மிகவும் விரும்பி
வாங்குவதின் கார
ணம் இதுவே.
Aryan
Regd.
சரியான
வடிவமுள்ள
டூத்
பிரஷ்!
நன்றாகத் துலக்கி —
நெடுநாள் உழைக்கிறது


TIGER
TEA
புலி
மார்க்கு
தேயிலை
வலிமைக்கு புலி
மார்க்கு தேயிலை
LIPTON (INDIA) LIMITED (Incorporated in England)



நாகபுரி பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியின் ஐந்தாவது ஆண்டு விழா ஜூலை 13ம் தேதி திரு சங்கராச்சாரி அவர்கள் தலைமையில் நடந்தேறியது. விழா ஸ்ரீமதி மாலினி கிருஷ்ணசாமி அவர்களின் துதி வணக்கத்துடன் ஆரம்பமாயிற்று. இவ்விழாவில் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். சபை அங்கத்தினர்கள் நடித்த 'ஸ்ரீமான் சுதர்சனம்' என்ற நாடகம் விழாவின் வெற்றிக்குச் சிகரமாக அமைந்தது.

பின் கேதாரி அவன் கண்ணில் படவேயில்லை. எனவே, கேதாரியுடன் தன் வாழ்வு இறுதிக் கட்டத்துக்கு வந்து விட்டதாகவே அவன் கருதினான்.

மாலையில் நாகநாதன் வெளியே உலாவச் சென்றபோதுதான், கேதாரியின் தாயாருக்குத் தன் மகளுடன் மனம் விட்டுப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது.

"அடி, அசட்டுப் பெண்ணே! கண்ணுக்குக் கண்ணான நல்ல கணவனை அடைந்தும், யானை நிவாந்திரத்தை நினைத்து ஏங்குவதுபோல், இப்படி நல்வாழ்வைப் பாழ்படுத்திக் கொள்கிறாயே!" என்று ஆரம்பித்தாள் தாயார். அவள் குரல் அவளது சகிக்க முடியாத மன வேதனையைப் பிரதிபலித்தது. வெகு நேரம் மகளிடம் அவள் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

கேதாரிக்கு அழுது அழுது முகம் வீங்கி விட்டது. "போதும், போதும். அவன் வரும்போது அழுதுகொண்டு நிற்காதே. அவனிடம் நல்ல வார்த்தை சொல்லி உள்ளே அழைத்து வா!" என்றாள்.

வாசலில் போய்ப் பார்த்தவள், ஓடி உள்ளே வந்து, "தெருக்கோடியில் வருகிறான். போ, வாசலுக்கு" என்று கேதாரியை விரட்டினாள்.

கேதாரி சேலையைச் சரிப்படுத்திக் கொண்டாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, வெளியே சென்றாள்.

கேதாரி, தன் வரவைப் பார்த்துக் கொண்டு வாசலில் நிற்பதைக் கண்ட நாகநாதனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. ஒருவேளை அவள் வேறு தோழிகள் யாரையாவது எதிர்பார்த்துக்கொண்டு நிற்கலாம் அல்லவா?

அவள் தன்னையே உற்றுப் பார்ப்பதைக் கண்ட நாகநாதன் முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே சென்றான்.

அவனைத் தொடர்ந்து பின்னால் உள்ளே வந்த கேதாரி, "நீங்கள் எது வரையில் சென்றிருந்தீர்கள்?" என்று கேட்டாள் நாத் தழுதழுக்க.

நாகநாதன் திரும்பி அவளைப் பார்த்தான். அவளிடத்தில் ஏதோ திடீர் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டான். தான் வெளியே சென்றபோது, அவள் தாயார் அவளுக்குப் புத்திமதி சொல்லியிருக்கலாம். எனினும், அவ்வளவு சுலபமாக அவள் மனத்தை மாற்ற முடியுமா? நாகநாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

கேதாரியின் ஒவ்வொரு செய்கையும் புண்பட்ட அவனது மனத்துக்கு மிகவும் இதமாக இருந்தது. எல்லோரும் சாப்பிட்டபின் நாகநாதன் படுக்கச் சென்றபோது, கேதாரி ஓடி வந்து அவனது இரு கைகளையும் பிடித்துக் கொண்டு கண்களில் ஒற்றிக் கொண்டு விம்மினாள். "என்னை மன்னித்து விடுங்கள். என்னைப் பிடித்திருந்த பிசாசு என்னை விட்டு விட்டது" என்றாள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. அவளது கண்ணீர்தான் அவனுடன் பேசியது!

எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட கேதாரியின் மனமாற்றத்தைக் கண்டு நாகநாதன் ஆச்சரியம் அடைந்தான். தன் வாழ்க்கையிலே முதன் முதலாக இன்ப போதையில் ஆழ்ந்தான்.

அவள் மனம் திடீரென்று சில மணி நேரத்தில் மாறி விட்டதற்குக் காரணம் என்ன? கேதாரி தன் பிடிவாதத்தை விட்டு விடும்படி அவள் தாயார் என்ன

தான் புத்தி சொல்லியிருக்க முடியும்? ஏழு வருஷங்களாக யாராலும் எந்த விதத்திலும் மாற்ற முடியாத கேதாரியின் இரும்பு இருதயம் சிறிது நேரத்தில் வெண்ணெய்போல் உருகிவிட்டது. அவனுக்கு அவிழ்க்க முடியாத ஒரு புதிராக இருந்தது.

இரண்டு நாட்கள் கழித்து நாகநாதன் சென்னைக்குப் புறப்பட்டபோது, கேதாரியும் கூடப் புறப்பட்டு விட்டாள். அவளை விட்டுவிட்டுப் புறப்படவும் அவனுக்கு மனமில்லை. கேதாரி சென்னையிலிருந்து வந்து அந்த வீட்டுக்குள் நுழைந்தபோது அங்குள்ள ஒவ்வொருவருடைய முகமும் சோகத்தினால் ஒளி இழந்திருந்தது. ஆனால், சில மணி நேரத்தில் எத்தகைய அதிசயமான மாற்றம்!

சென்னையிலிருந்து சென்றபோது நாகநாதன் நரகவேதனை என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொண்டது போலவே, சென்னைக்குத் திரும்பியபோது அவன் ஆனந்தத்தின் சிகரத்தை அடைந்தான்.

நாகநாதன் கேதாரியுடன் திரும்பி விட்டதையும் அவளது மனமாற்றத்தையும் கண்டபோது, நாகநாதன் தாய்க்கு நிலை கொள்ளவில்லை. "நான்தான் அப்போதே சொன்னேனே—அவள் நல்ல பெண்தான். அவளைப் பிடித்திருந்த ஆலமரத்துப் பிசாசுதான் ஆட்டி வைத்தது" என்று கூறிப் புளகாங்கிதம் அடைந்தாள்.

மறுநாள் நாகநாதன் ஆபீசுக்குச் சென்ற பின் கேதாரி, அவள் தாய் அவனிடம் கொடுத்த கடிதத்தைப் பத்தாவது தடவையாகவும் கடைசித் தடவையாகவும் வாசித்தாள்.

"அன்பார்ந்த மாமா அவர்களுக்கு,

மலாய் நாட்டில் யுத்தம் ஆரம்பமாகு முன், கோவக்கிள்ளான் துறைமுகத்தில் உங்களையும் மாமியையும் கேதாரியையும் வழி அனுப்புவதற்காக வந்து கண்ணீருடன் தங்களை விட்டுப் பிரிந்த கேசவன் எழுதும் இக்கடிதம் தங்களைத் திடுக்கிட வைக்கலாம். தங்கள் குடும்பம் சம்பந்தப்பட்ட வரையில், நான் மலாயா யுத்தத்தில் இறந்து விட்டவனாகவே இருக்க விரும்பினேன். ஆனால், சமீபத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவம் நான் உயிருடன் இருக்கிறேன் என்பதைத் தங்களுக்கு அறிவிக்கும்படி செய்து விட்டது. தங்கள் ஊரில் இருந்து இங்கு வந்து புதிய உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டுள்ள டாக்டர் ஹரனிடமிருந்து தங்கள் குடும்ப சம்பந்தமான எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டேன். நான் கேதாரியையே எண்ணி எண்ணி ஏங்கி இறந்ததாகக் கேதாரி நினைத்துச் சில வருஷங்கள் வரையில் கல்யாணம் செய்து கொள்ள மறுத்து வந்ததாக டாக்டர் கூறினார். பிறகு தாங்கள் மிகவும் வற்புறுத்தியதால் வேண்டா வெறுப்பாக ஒருவரைக் கல்யாணம் செய்து கொண்டு சோக வாழ்க்கை நடத்துவதாகக் கேள்விப்பட்டேன். யுத்தம் முடிந்த பின் இந்தியாவுக்கு வந்து கேதாரியை மணம் செய்து கொள்வதாக நான் வாக்குக் கொடுத்தது உண்மையே. ஆனால், யுத்தத்தின் போது என்னுடைய வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

கோலாலம்பூரில் உள்ள கான்வென்டில் புகுந்து ஜப்பானிய சிப்பாய்கள் சூறையாடியபோது, அங்கிருந்த பல அனாதைப் பெண்கள் மூலைக்கொருவராக ஓடி ஒவ்வொரு குடும்பத்தில் அடைக்கலம் புகுந்தனர். சந்தர்ப்பவசத்தால், அவர்களில் ஒரு பெண்ணுக்கு நான் அடைக்கலம் அளிக்க நேர்ந்தது. அதிகம் வளர்த்துவானேன்! அந்தப் பெண்ணை நான் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டேன். எனக்குத் தற்போது மூன்று குழந்தைகள் இருக்கின்றன. என் குடும்ப வாழ்க்கை இன்பமயமாக இருந்து வருகிறது என்று தங்களிடம் கூற நான் வெட்கப்படவில்லை. மலேயா பிரஜையாக இங்கேயே ஸ்தாபித்து விட்டேன். கேதாரியைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாமற் போனதைக் குறித்து நான் வருந்தாதபோது, அவள் என்னை எண்ணி ஏன் ஏங்க வேண்டும் என்பதுதான் தெரியவில்லை. ஒருவேளை நான் உயிருடன் பிள்ளையும் குட்டியுமாக இருக்கிறேன் என்று தெரிந்த பிறகாவது கேதாரியின் பைத்தியக்காரப் போக்கு மாறுமென்று நம்புகிறேன். நான் செய்தது தவறு என்று தாங்கள் எண்ணினால், தங்களிடம் மன்னிப்பு கோருகிறேன்.

இப்படிக்கு,

கேசவன்"

இதைப் படித்து முடிந்ததும், கேதாரி புதிய சக்தி பெற்று ஏதோ ஓர் உறுதியான தீர்மானத்துக்கு வந்தவள்போல் எழுந்தாள். அந்தக் கடிதத்தைக் கிழித்துக் குப்பையில் எறிந்தபோது, இது வரையில் அவளை வாட்டி வந்த மனப் பிரமையாகிற பிசாசு, தன்னை விட்டு விட்டது போல் தோன்றியது.

"என் முட்டாள்தனத்தால், வாழ்க்கையில் ஏழு வருஷங்களை அனாவசியமாகப் பாழாக்கிக் கொண்டேனே! ரங்கூன் வைரத்தில் ஆசை வைத்து, விலை மதிக்க முடியாத அசல் வைரத்தை இழந்து விட இருந்தேனே!" என்று அவள் வாய் முணுமுணுத்தது.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam


நாள்முழுவதும்
கவர்ச்சிகரமாக
தோற்றமளிக்க
"GOKUL"
SANTOL
ET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டல்வுட் டாய்லட் பவுடர்
சுத்தமான தனி சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது.
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய டால்கம் பவுடர்
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்
A.K.GOPAL & CO.,

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

உத்தமமானவள் பெண்!
உதாசீனம் செய்யப்பட்டாலோ — கண்ணகி!



ஒரு குடும்பப் பெண்மணிதான் . . . எனினும் அவள் விருப்பத்திற்கு நாங்கள் விசேஷ முக்கியத்துவம் அளிக்கிறோம். அவளுடைய கொள்கைகள், மனோபாவம், யோசனைகள் முதலியவற்றை நாங்கள் ஒருக்காலும் புறக்கணிப்பதில்லை — வீட்டின் தேவைகளை நன்கு உணர்ந்தவள் அவளன்றி வேறு யார்? அவளுக்குத் தேவைப்படுவது என்ன என்பதை உள்ளபடி உணரும் பொருட்டு நாடெங்கும் விற்பனைத் துறை ஆராய்ச்சிகள் நிகழ்த்தி வருகிறோம். பார்க்கப்போனால், பெரும்பாலான ஹிந்துஸ்தான் லீவர் சரக்குகளின் தரம் எவ்வளவு உயர்வாக இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிப்பவள் குடும்பப் பெண்மணிதான்.

சரக்குகளின் மேன்மை மாறாமலிருக்கும் பொருட்டு, உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவற்றின் தராதரத்தைப் பரிசோதித்து சீர்திருத்துகிறோம். ஆகவே உங்கள் தேவைக்கேற்ப, தரத்திலுயர்ந்த சரக்குகளை உங்கள் வீட்டிற்குக் கிடைக்கும்படி செய்து வருகிறோம்.

குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம் புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HLL. 15-60 TM